அருளமுதம்



கௌமார சபை வெளியீடு

அருளமுதம்

நூலாசிரியர்

முனைவர். தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்

பதிப்பாசிரியர்கள்

சிரவை ஆதீனப் புலவர்

திரு. கு. சிவலிங்கம், தலைமையாசிரியர்

திருமதி. மா. பானுமதி, தமிழாசிரியை

தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்
50ஆம் நாண் மங்கல பொன்விழா

சிரவைக் கௌமார சபை வெளியீடு

நாள் : ஆடித்திங்கள் 19ஆம் நாள் (04.08.2019) ஞாயிற்றுக்கிழமை

தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்
50ஆவது நாண்மங்கல பொன்விழா வெளியீடு

கௌமார சபை
வெளியீட்டு எண் : 386

நூல் பெயர் : **அருளமுதம்**

முதல் பதிப்பு : 2019

நூலாசிரியர் : முனைவர்.
தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்

பதிப்பாசிரியர் : சிரவை ஆதீனப் புலவர் கு. சிவலிங்கம்
திருமதி. மா. பானுமதி


வெளியீட்டு நாள் : 04.08.2019 ஞாயிற்றுக்கிழமை

படிகள் : 300

விலை : ரூ. 150/-

வடிவமைத்து
அச்சிட்டோர் : சௌமி அச்சகம்,
1, துடியலூர் சாலை,
சரவணம்பட்டி,
கோயம்புத்தூர் - 641 035
அலைபேசி : 98422 52779

நூல் கிடைக்குமிடம்: தலைவர்
கௌமார மடாலயம்
சின்னவேடம்பட்டி
கோயம்புத்தூர் - 641 049.
தொலைபேசி : 0422 2666370


சிரவையாதீன நான்காம் குருமகாசந்நிதானம்
தவத்திரு குமரகுருபர சுவாமிகள்

65/3



முனைவர் **கி. சுப்பிரமணியன்** (ஐ.கே.எஸ்)

கோயம்புத்தூர்

நூலைப் பற்றி ஒரு சொல்

தவத்திரு குமரகுருபர அடிகளின் பொன்விழா ஆண்டில் வெளியாகும் இந்தக் கட்டுரை மலரில் மொத்தம் 40 கட்டுரைகள் உள்ளன. சமயம், சமூகம் சார்ந்தவை பல: வானொலியில் சான்றோர் சிந்தனையில் ஆற்றிய உரைகள் சில: கல்வி நல்லொழுக்கம், மானிட விழுமியங்களை மையமாகக் கொண்டவை சில. பன் நோக்குத் தன்மையுடைய இந்தத் தொகுப்பு, அடிகளின் வளர்ச்சியையும் அனுபவத்தையும் காட்டுகிறது.

1994 இல் சுவாமிகள் கௌமார மடத்து ஆதீன கர்த்தராகப் பட்டம் ஏற்ற நாள் முதல், 2019 இல் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவடையும் போது, அவருடைய வயதும் ஐம்பதாகிறது என்பது ஓர் இறையருள்தான் இளமைப் பருவம் கடந்து, பல சோதனைகளைத் தாண்டி முதிர்ச்சி பெற்று நிமிர்ந்துள்ள இன்றைய அடிகளின் முழுமையை இந்தக் கட்டுரைகளில் காணலாம். கால வரிசைப்படி இவற்றை அமைத்திருந்தால், இன்னும் சிறப்பாக இருக்கும் என்று தோன்றுகிறது. உள்ளும் புறமுமாக அடிகள் பெற்ற அனுபவம் - நிர்வாக முறை - அடியார் உறவு திருப்பணிகள் இவையும் கட்டுரைகளில் வெளிப்படுவதை உணரமுடிகிறது.

முன்னோர் வழி நின்று வழிபடும் தெய்வமாகிய முருகப் பெருமானைப் பற்றிய கட்டுரையில் சங்க இலக்கியம் தொடங்கிக் கந்தசாமி சுவாமிகள் வரையிலான பெருங்கவிதைகள் மேற் கோள்களாக வருகின்றன. குறிப்பாக அடிகளின் வானொலிப் பேச்சுக்களில் பல புதுமை நோக்குகள்

பதிந்துள்ளன. அறிவுடையவனுக்கு அழகு என்ன தெரியும்? என்பதல்ல; என்ன செய்யத் தெரியும் என்பதுதான். அறிவின் மூலம் ஒவ்வொருவரும் பிறருக்குத் துணையாக இருக்கவேண்டும். பொருள்தேடும் கல்வி வேண்டாம்; அன்பையும் அறத்தையும் போதிக்கும் கல்வி வேண்டும். எல்லாரும் எல்லாம் பெறட்டும்.

'குற்றம் இழைக்கத் தெரியாதவர் சான்றோர்கள்' என்ற பகுதியில், பெரியபுராணத்தில் அடிகள் பெற்றுள்ள ஆழத்தைப் பார்க்கலாம்; அப்படியே அன்பு பற்றிய கட்டுரையில் கண்ணப்ப நாயனாரின் மேன்மையைப் புலப்படுத்தியுள்ளார். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பது சிந்தனையத் தூண்டும் கட்டுரை. இறுதிப் பத்தி மிக அருமை. அரசியலுக்கும் அறிவியலுக்குமான போராட்டத்தைச் சுட்டிக்காட்டி, கணியன் பூங்குன்றனார் பாட்டு மானிட சமுதாயம் வாழ வழிகாட்டும் என்று மனம் திறந்து எழுதுவதைப் படித்துப் பின்பற்ற வேண்டும்.

பொங்கல் விழாக் கட்டுரையில், அந்த நோன்பு தோன்றிய வரலாறு பதிவாகியுள்ளது. அடிகளின் புலமையாற்றலைக் காட்டும். காலம் தவறாமையை வற்புறுத்தும் கட்டுரை அருமை. காலத்தைக் கடந்தும் நிலைக்கும் நான்கு காரணங்களைச் சுவாமிகள் கூறுவதைப் படித்துத் திருந்தலாம். 'ஒழுக்கம்' பற்றிய கட்டுரையைத் தனியாக அச்சிட்டு எல்லாருக்கும் கொடுக்கலாம். திருக்குறள், நாலடியார் கருத்துக்கள் பொதிந்துள்ள அருமையான கட்டுரை.

இன்றைய உலகில் மானிட உறவுகள் சிதைந்து மனநலம் குறைந்து துன்புறும் கொடிய நிலைமை 'உறவுகளை வளர்ப்போம்' கட்டுரை சுட்டுகிறது. அருளாளர்கள் அடியார்களைப் போற்றியதும் மக்களுக்குத் தொண்டு செய்ததும் கடவுள் வழிபாடு என்றே கருதித்தான் என்பது நல்ல தீர்ப்பு.

இப்படியே சொல்லிக் கொண்டே போகலாம். முடிவில்லை. குமரகுருபர அடிகளின் சிந்தனை ஓட்டம் தொடரட்டும். சமுதாயம், சமய உலகம் பயன்பெறட்டும்.

சிரவை ஆதீனப்புலவர்,
கு. சிவலிங்கம்.
கௌமாரமடாலயம்.



பதிப்புரை

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே.

என அருணகிரிநாதப் பெருமான் கந்தரனுபூதியில் பாடிப் பரவுவார். ''அகண்ட பரம்பொருளே முருகக் கடவுள், சமயங்கள் யாவும் வேறல்ல, இதன் அங்கமேயாவும் என்ற பெருநிலையான சமரசவுணர்வு வரும்'' எனக் குரு எல்லாம் சிவக்கொழுந்தே'' என்பதை 'முருகன் பெருமை' எனும் முதல் கட்டுரையில் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார். மேலும் விசாகப் பெருவிழா, கண்ணப்பரைத் தந்த கந்தவேள், ஆறுமுகச் செவ்வேள், புறநானூற்றில் முருகப்பெருமான் எனப் பல கட்டுரைகளில் முருகப் பெருமானின் சிறப்புகளைக் கூறியுள்ளார்.

உலகப் பொது மறையான முப்பாலுக்கு அப்பால் ஒன்றில்லை எனக்கூறுவார்கள். அவ்வகையில் திருக்குறளைப் பற்றி சொல்லும் செயலும் ஒன்றே, நல்லோர் நட்பு, சொல்லேர் உழவு, காலந்தவறாமை, மெய்ப்பொருள், வாய்மை, அன்புடைமை எனப் பல்வேறு தலைப்புகளில் வாழ்க்கைக்கான வள்ளுவர் வாக்குகளைக் கட்டுரைகளில் எடுத்துக் கூறியுள்ளார்.

தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் திருக்குறள் கருத்துக்களை உள்வாங்கி அதைக் கையாள்வதை ''பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்'' எனும் குறட்பாவை ''பொருள் அல்லவரைப் பொருளால் செய்யும் புகழ்ச்சிறப் பார்'' எனக் கூறும் கருத்துக்களை 'சிரவைக்கந்தசாமி சுவாமிகளின் திருக்குறள் ஆட்சி' எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இல்லறம் நல்லறமாக அமைய வேண்டுமெனில் கூட்டுக் குடும்ப வாழ்க்கைதான் சிறந்தது. பொருள் தேடுவது மட்டும் நோக்கமாக இருக்கக்கூடாது என்பதை 'எல்லோரும் எல்லாம் பெறட்டும்' கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார். ''வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்'' எனவும், அரிய மானிடப் பிறவியால் பெற்றோர்களைப் பாதுகாக்க வேண்டும். ''பெற்றோர் வாக்கு வேத வாக்கு வேற்றுமை இனி இல்லை நம்மில்'' எனவும் உறவுகளை வளர்போம் எனும் கட்டுரையில் இன்றைய வாழ்க்கையில் உறவுகளில் விரிசல் ஏற்படுவதற்கான காரணத்தைக் கூறியுள்ளார்.

''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' என்பதை ''நன்றும் தீதும் அவரவர் வாழ்வின் வழி விளையும் விளைவுகளே ஆகும்'' என கட்டுரையில் யாதும் ஊரே, யாவரும் கேளிர் எனும் கணியன் பூங்குன்றனார் பாடலைக் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். தனிமனித வாழ்வை உயர்த்துவது பொருளாதாரம் அல்ல. கல்விதான் என்பதை பாரதியின் கல்விக் கொள்கை எனும் கட்டுரையில் விளக்கியுள்ளார்.

சமயப் பொதுமையை நாம் தேட வேண்டியது இல்லை அது தானாக வரும் என்பதை ''பலவற்று ஒன்று எனப் பழகப்பழக யாவும் தானா இலங்கும் அன்றே'' (சத்திய சூத்திரம் 94) எனக் கௌமாரம் காட்டும் சமரசமும் சமயாதீதமும் எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். ''கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே'' எனக்கீதையும், ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என, அப்பர் அடிகளின் கருத்தையும் சரணாகதி தத்துவம் எனும் கட்டுரையில் கூறியுள்ளார்.

இனியவை நாற்பதாக நாற்பது கட்டுரைகள் அருளமுதமாக வெளிவந்துள்ளது. இக்கட்டுரைகள் கருத்தரங்கம், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் வெளிவந்துள்ளன. இந்நூலினைப் பதிப்பிப்பதற்கு அருளாணை வழங்கிய தவத்திரு. குருமகா சந்நிதானங்களுக்கும், பாராட்டுரை வழங்கியுள்ள முனைவர் கி.சுப்பிரமணியன் (ஐ.கே.எஸ்) ஐயா அவர்களுக்கும், நன்முறையில் அச்சிட்டுக் கொடுத்த சௌமி அச்சகம் திரு. திருஞானசம்பந்தம், திருமதி. லோகநாயகி இணையருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலின் உள்ளே...

1. முருகன் பெருமை

முருகப் பெருமானை முழுமுதற் கடவுளாகப் போற்றி வணங்குபவர் கௌமாரர்' எனப்படுவர். கௌமாரம் என்ற சொல், குமார வழிபாடு செய்யும் நெறியினது என்ற பொருளையுடையது. சிவகுமாரனாகத் தோன்றிய முருகக்கடவுளை வழிபாடு, செபதியானம் இவற்றை உறுதியுடன் செய்து, அவன் அருட்பேற்றுக்கு உரியவராவார். கௌமாரர் எனப் பெறுவர். சிவவழிபாடு செய்வோர் சைவர். அறநெறிச் சைவம் என்றும், சத்தி வழிபாடு. சாக்தேயம். கணபதி வழிபாடு காணபத்தியம், விஷ்ணு வழிபாடு வைணவம், சூரிய வழிபாடு சௌரம், என்றும் ஆனாற் போல, குமார வழிபாடு கௌமாரமாயிற்று.

சிவகுமாரன் முருகன் என்ற புராண வரலாறு முறையில் தொடங்கி, உபாசனை முதிரமுதிர, படிப்படியாக அனுபவ மேலீட்டால், அகண்ட பரம்பொருளே முருகக்கடவுள். சமயங்கள் யாவும் வேறல்ல. இதன் அங்கமேயாவும் என்ற பெரு நிலையான, சமரசவுணர்வு வரும், இதனை

சிவன்மக னெனவே தொழுமெனட் குகவேள்
அன்னவன் தெய்தவப் பேறாய்
அவனது குருவாய்ச் சமயம் விரண்டும்
முகங்களென் றவர் பொது முதலாய்
துவன்திசை யாறும் அவைகளாகக் காட்டிவிகற்ப
மென் பவை யெலாம் நூறித்
தனபல மொன்றே சத்திய மென்றும்
தன்மையுஞ் தெரித்தனன் . அன்றே

என்பார். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

ஆக்கல் , அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழிலையும் முக்குணங்களைக் கொண்டு புரியும் மூவர்க்குந் தலைவன் முருகப் பெருமான் ஒருவனே. 'மூவர்க்கொரு தம்பிரானே, அரிய பிரமபுரந்தராதியர் தம்பிரானோ என்று தமிழ்வேதங்கள் கூறும். இதனை வலியுறுத்துமாறு காண்க. முருகப் பெருமானது ஆணையாலேயே காலச்சக்கரம் சுழல்கிறது.

அக்குகக்கடவுளின் ஆணையை மேற்கொண்டு நான்முகன் படைத்தல் தொழிலையும், திருமால் காத்தல் தொழிலையும்.

உருத்திரர் அழித்தல் தொழிலையும் நடத்துகிறார்கள். அம்மூவர்களும் அத் தொழில் புரியுங்கால் இமையறு நேர்ந்தால் அதனை அகற்றி ' அஞ்சா நெஞ்சாக்கந் தரவல பெருமாளும் அவனே.

'படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சையன் பணியாகப்
பணித்துத் தம்பயந் தணித்துச் சந்ததம்
பரத்தைக் கொண்டிருந் தனிவேலா - திருப்புகழ்

முருகன் எனும் நாமம் நமக்குத் துணை

கலியுக வரதனாய் கந்தப் பெருமான் ஒருவனுக்கே உயிர்களையும் உலகங்களையும் சொத்தாக ' உடையவன் என்னும் பொருள் தரும்' சாமி என்கிற திருநாமம் வடமொழியிலும். தெய்வத்தன்மை என்னும் பொருள்தரும் 'முருகன் என்கிற திருநாமந் தென் மொழியிலும் சிந்திப்பார் சித்தங்களிக்க விளங்குகின்றன. அம்முருக நாமத்தை மறவாதாரே பிறவா நெறி சார்ந்தவராவர்.

'ஆதிமுரு காதிமுரு காதிமுரு காஎனவு
மாதி முருகா நினைவு தருவாயோ - திருப்புகழ்

முருகா என்னுந் திருநாமமே ''மெய்மை குன்றா மொழிக்குத் துணை'' முருகா என்று உள்ளங் கசிந்து உருகுவார்கள். இவ்வுலகில் குறையாத செல்வத்தை அடைவார். நோய்களாலே இன்னலடையார். ஒருகாலத்தும் துன்பமெய்தார். இயமனுடைய தூதுவர்களால் துன்பமுற்றும் நரகலோகத்திற்குச் செல்லார். பரலோகம் புக்கு இன்பம் நுகர்வார். இதனை

முருகா வெனவுனை யோகந் தவத்தினர் மூதுலகில்
லடுகாத செல்வம் முடையார் வியாதி யடைந்துறையார்
ஒருகால முந்துன்ப மெய்தார் பரகதி யுற்றிடுவார்
பொருகால னாடு புகார் சம ராபுரிப் புண்ணியனே.

என்று சிதம்பரம் சுவாமிகள் கூறியுள்ளார்.

முருக அடியார்கள் தூய்மையான சிந்தையோடு ஒருமுறை முருகா என்று நினைக்கின்னும் அவ்வடியாரது துன்பத்தை நீக்குகின்றான் முருகப் பெருமான். நெஞ்சினிலே ஒருகணப்பொழுது நினைத்தாலே தாமரைத் திருவடிகள் இரண்டும் நமக்கு முன் தோன்றும். அத்திருவடி நமது அஞ்சுகின்ற பயத்தை நீக்கி தமது ஆறுமுகத்தோன்றி நமக்கு ஆறுதலைத்தருவார். பகைவர்களாலே கடும் போர் தோன்றினால் உடனே அவனது பண்ணவர் பயங்கெடுத்த படைக்கல நாயகமாகிய வேலாயுதந் தோன்றும்.

அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகந்தோன்றும்
வெஞ்ச மரந்தோன்றில் வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா வென் றோதுவார் முன்.

அடியார்க்கு எளியாய் :

எளிவந்த பிரான் என்று இறைவனை அடியார்கள் போற்றிப் புகழ்ந்து பரவுவார்கள். அடியார்க்கு எளிய பெருமாளாகிய ஆறுமுகக் கடவுளுடைய அடிமலரிடத்து அன்பைச் செலுத்தாதவர் மலைக்குகையில் வசித்தாலும், தேவாமிர்தம், காயகல்பம் முதலியவைகளை உண்டாலும், சாத்திரங்களை முழுவதும் கற்றாலும் பரகதியை ஒருபோதுங் காணமாட்டார். வேல்பிடித்த வித்தகனது கால் பிடித்தால் எளிதிற் காணலாம்.

மலைமுறையில் உற்றால் என் மாமருந்து உண்டால்என்
கலைமுழுதுங் கற்றால்என் காலபார் - இலை நிலவு
வேல்பிடித்த கையான் வியன்போரூர் அய்யன்இரு
கால்பிடித்தாற் காண்பார் கதி. [சிதம்பர சுவாமிகள்]

பழம்பெருங் கடவுள் :

குறிப்பிட்ட பகுதிவாழ் மக்கள் அல்லது பிரிவைச் சார்ந்த மக்கள், குறிப்பிட்ட இறைவனிடத்து ஈடுபாடு கொண்டு

வழிபாடு நடத்துவது மரபு. அவ்வாறு அவர்களால் வணங்கப் பெறும் இறைவனின் திருவுருவங்களும் காலம் செல்லச் செல்ல மாறிவருவது கண்கூடு. தமிழகத்தைப் பொறுத்தவரை நிலத்தை பண்டைக்காலம் முதல் நான்கு பிரிவுகளாகப் பிரித்தனர். மலையும் மலைசார்ந்த இடம் குறிஞ்சி என்றும், வயலும் வயல் சார்ந்த இடம் மருதம் என்றும். காடும் காடு சார்ந்த இடம் முல்லை என்றும், கடலும் கடல் சார்ந்த இடம் நெய்தல் என்றும், பாகுபடுத்தினர். குறிஞ்சிக்கு முருகனையும். மருதத்திற்கு இந்திரனையும், முல்லைக்கு திருமாலையும், நெய்தலுக்கு வருணனையும் கடவுளாகக் கொண்டனர்.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்

என்பர் தொல்காப்பியனார்.

முருக வழிபாடு தொன்மை என்பதற்கு நமக்கு பல அரிய சான்றுகள் கிடைக்கின்றது. மொஹஞ்சதாரோ, ஹரப்பா இடங்களில் நடந்த அகழ்வாராய்ச்சிகளின் பயனாக, சிந்து வெளிப் பகுதியில் நாகரிகம் உயர்ந்த நிலையில் தெரியவருகிறது. இது 5000-ம் ஆண்டுகளுக்கு மேல் தொன்மை உடைத்து என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்து. அங்குக்கிடைக்கப் பெற்ற முத்திரை ஒன்றில் முருக அடு' என்ற சொல் காணப்படுவதாக திரு. எச். ஹார்ஸ் என்பவர் தன்னுடைய நூலில் கூறியுள்ளார்.

'முருகன்! என்ற சொல் அவ்வாறு உள்ளதாகக் கருதலாம். மேலும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூரில் கிடைக்கப் பெற்ற வேல் போன்றவற்றினின்றும் முருகனது வழிபாடு தமிழகத்தில் இருந்தமை புலனாகிறது.

தமிழகத்தில் சிறப்பாக வணங்கப்பெற்ற இந்திரன், பல தேவன் ஆகியோரின் வழிபாடு பிற்காலத்தில் முற்றிலும் மறைந்துவிட்டது.

ஆனால்,

செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி
செந்திற் புதிநகர் .... உறைவோனே (திருப்புகழ்)

என்ற அருணகிரிநாதரின் வாக்கின்படி, கரிமுகற்று இளைய கந்தப் பெருமான் வழிபாடு பண்டைக் காலம் தொடங்கி இன்றுவரை தமிழ்மக்களால் பெரிதும் போற்றி வணங்கப் பெற்று வருகிறான்.

மகன் வழிபாடு

முருகா என்ற நாமம் ஒரு கோடி நாமங்களுக்கும் சமம். இது பெரியோர் வழி வந்த அருளாளர்களின் வாக்கு. ''அரும் பெறல் மரபின் வந்த பெரும் பெயர் முருகா'' என்கிறார் நக்கீர தேவர்.

முருகன் தெய்வசிகாமம் அதாவது வெங்காக்கு எல்லாம் தலைவன். நமது, உடம்பிற்கு முக்கியமானது தலை. எண் சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம், என்பது ஆன்றோர் வாக்கு.

சிரசாகிய தலைமேல் உள்ளது சிகை - அதாவது முடி சிகாமணி என்றால் என்ன பொருள்? முடியில் விளங்கும் மணி என்று பொருள். தெய்வ சிகாமணி என்றால் தெய்வங்களுக்கு எல்லாம் தலையாய தெய்வமாய் முடிமேல் விளங்கும் பணி என்று பொருள்.

அதனால்தான் முருகப் பெருமானை மலையின் மேல் வைத்து வணங்கினார்கள் நமது முன்னோர்கள். 'குன்றிருக்கும் இடம் எல்லாம் குமரன் இருக்கும் இடம்'.

முருகன் என்றால் இளமை என்று பொருள் . ' என்றும் இளையாய் என்கிறார் நக்கீரர். முருக என்றால் அழகு: இனிமை, மணம், மகிழ்ச்சி .

'முருகுகள் இளமை நாற்றம்
முருகவேல் விழா வனப்பாம்

என்கிறது பிங்கல நிகண்டு.

முருகன் பிறப்பு இறப்பு இல்லாதவன் ; என்றும் குன்றா இளமை கொண்டவன்; இனியவன்; ஞான மணம் பூசும் ஞான பண்டிதன்; அறிவே வடிவானவன். அளவிலா இன்பம் உடையவன்.

'ஞானந்தான் உருவாகிய
நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்தும்
என்றால் அஃது எளிதோ?
மோனம் தீர்கலா முனிவரும்
காண்கிலர் முழுவதும்
தானும் காண் கிலன் இன்னமும்
தன் பெரும் தன்மை – கந்தபுராணம்

ஆறுமுகன் :

சிவபெருமானுக்கு முகங்கள் ஐந்து. ஈசானம், தத்புருவும், வாமதேவம். அகோரம், சத்யோஜாதம் என்பன. இந்த ஐந்து முகங்களுடன் அதோமுகமும் சேர்ந்த ஒன்றே ஆறுமுகம்.

வெந்தவர்க்கு ஆற்றாத
விண்ணோர் முறைக்கு இரங்கி
ஐந்து முகத்தோடு
அதோமுகமும் – தந்து,
திருமுகங்கள் ஆறு ஆகச்
செந்தழல்கன் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறி
ஆறு உய்ப்ப.

இவற்றிலிருந்து ஈசனே ஆறுமுகனாய்த் தோன்றினான் என்பது வெளிப்படும். இக்கருத்தை வலியுறுத்தவே கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்

ஈசனே அவனாடலால் மதலையாகினன்காண்
பேசில் ஆங்கவன் பரனோடு பேதகன் அல்லன்

என்று கூறியுள்ளார்.

முருகப் பெருமானுடைய அவதாரத் தத்துவத்தை இனிச் சிந்திப்போம். உலகின் நன்மைக்காக கடலின் பஞ்சபூதங்களில் படிப்படியாக தவளி, காற்று, கனல், புனல், மண், ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம், இவற்றின் வழியே தோற்றம் பெறுகிறார் என்பது முருகப் பெருமானின் தத்துவம். இறைவன் நெற்றிக் கண்ணிலேயிருந்து புறப்பட்ட பேரொளிச் சுடர் வானத்தில் நின்று, பின் காற்றின் கையில் புகுந்து, தீயைச் சென்றடைந்து, அங்கிருந்து கங்கையாகிய நீரில் தவழ்ந்து நிலத்தில் எய்தியது. ஞானாக்கினியின் அருவமாகத் தோன்றிக் கருணைப் பொய்கையில் உருவமாகப் பொலிந்தது. அருவமான ஞானமயப் பரம்பொருள் பக்தர்களிடம் கருவை கொண்டே அன்றோ வடிவு கொள்கிறது.

இந்த வடிவத்தைப் பற்றி குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில் அழகாக குறிப்பிடுகின்றார்.

திருமுகங்கள் ஆறாகிச் செந்தழல் கண் ஆறும் ஒருமுகமாய்த் தீப்பொறி ஆறு உய்ப்ப - விரிபுவனம் எங்கும் பரக்க இமையோர் கண்டு அஞ்சுதலும் பொங்கும் தழல்பிழம்பைப் பொன் கரத்தால் - அங்கன் எடுத்து அமைத்து வாயுவைக் கொண்டு ஏகுதி என்று எம்மான் கொடுத்து அளிப்ப மெல்ல கொடு போய் - அடுத்தது ஒரு பூதத்தலைவ கொடு போதி எனத் தீக்கடவுள் சீதப் பகீரத்திற்கே சென்று உய்ப்ப போது ஒரு சற்று

திருமுகங்கள் ஆறாகிச் செந்தழல் கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறி ஆறு உய்ப்ப – விரிபுவனம்
எங்கும் பரக்க இமையோர் கண்டு அஞ்சுதலும்
பொங்கும் தழல்பிழம்பைப் பொன் கரத்தால் – அங்கன்
எடுத்து அமைத்து வாயுவைக் கொண்டு ஏகுதி என்று
எம்மான்
கொடுத்து அளிப்ப மெல்ல கொடுபோய் – அடுத்தது ஒரு
பூதத்தலைவ கொடு போதி எனத் தீக்கடவுள்
சீதப் பகீரத்திற்கே சென்று உய்ப்ப போது ஒரு சற்று
அன்னவரும் கொண்டு அமைத்தற்கு ஆற்றாள்
சரவனத்தில்
சென்னியில் கொண்டு உய்ப்ப ....

அருவமான ஞானமயப் பரம்பொருள் பக்தர்களிடம் கருணை கொண்டே அன்றே வடிவு கொள்கிறது.

முருகன் திருமுகம் தமிழ்மொழியும் :

தமிழ்மொழி என்றும் இளமை மாறாத மொழி. எம்பெருமான் முருகன் என்றும் அகலாத இளமை யுடையவன். தமிழ் மொழியில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு . முருகப் பெருமானின் தோள்கள் பன்னிரண்டே. முருகனுக்குத் திருமுகம் ஒவ்வொன்றிலும் மூன்று கண்களாக மொத்தம் பதினெட்டு கண்கள் ; தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. முருகனுக்கு ஆயுதம் வேல். தமிழில் மட்டும் சிறப்புடைய எழுத்து ஆய்தஎழுத்து.

உருவம் இல்லாத அருட்பெருஞ்சோதி ஆண்டவன் . ஆறுமுகங்கள், பன்னிரண்டு தோள்கள், பதினெட்டு கண்கள் கொண்ட இந்தருள் உருவத்தை உலகம் உய்யும் பொருட்டு எடுத்துக்கொண்டான் என்பது அதனுடைய உள்பொருள்.

சூரியன்

சூரியன் ஆறு கண்களாகவும், சந்திரன் ஆறு கண்களாகவும், அக்கினி ஆறு முகங்களாகவும் முருகப் பெருமான் பதினெட்டுக் கண்களமைந்தார் போல் தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டாக நின்றன. முருகவேளின் முகங்கள் ஆறு. வல்லினம் ஆறு. மெல்லினம் ஆறு. இடையினம் ஆறு. மு-ரு-க என்ற எழுத்துக்களில் ஒவ்வொன்றும் மெய்யெழுத்தில் ஒவ்வொர் இனத்தைச் சார்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கந்தவேள் கரத்திலுள்ள வேல் ஒன்று எந்த தெய்வத்திற்கும் இல்லாத சிறப்புடைய ஆயுதம். இவ்வாறு வேறு ஆயுதத்தின் திருநாமங்களை மக்கட்கு இடுவதில்லை. வேறு எந்த மொழியிலும் இல்லாத ஆய்த எழுத்து தமிழில்தான் உண்டு. ஆய்தம். இச்சை, கிரியை, தானம் என்ற மூன்றும் மூன்று புள்ளிகளாகச் சேர்ந்தது. இது வேலின் உருவை யொத்தது.

கண்ணகர் மெய்யும் சென்னிக்
கலை நிகரரினத்தன் கூறும்
திண்மகமை தோள்க ளேபோல்
திகழ்தரு முயிரும் வேறொன்
றெண்ணறு தற் கரிய தான
எஃகமும் இயலிற் காட்டும்
புண்ணிய முனிக்கோன்
செவ்வேள் பொற்பதத் தடிமையாகும்.

என்று வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் முருகப்பிரானையும் தமிழையும் போற்றுகின்றார்.

முருகனுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை அருணகிரிநாதப் பெருமான் தமது திருப்புகழில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் சில

'தன் தமிழுக்கும் தஞ்சம் (திருப் - 11)
செந்தமிழ் அங்கவாயா? (திருப் - 12)
தமிழ் விரகா (திருப் - 18)
செந்தமிழ்ப் பெருமானே! (திருப் - 37)
தமிழ்க்கு இனிய குரு ' (திருப் - 95)
செந்தமிழ் நூல் விரித்தோனை (கந்தர் அலங்காரம்)

என்பது அவரது திருவாக்குகளாம்.

தமிழ்ப் பாவலருக்கு இன்னருள் செய்குவான் என்று தேசிய மகாகவி பாரதியார் முருகன் தமிழிடம் கொண்ட அன்பை எடுத்துக் காட்டுகிறார்.

ஆறுமுகங்கள் ஒவ்வொன்றும் செய்யும் தொழில் :

சிவத்துக்குரிய ஐந்து முகத்தினையும், ஞானியரின் உள்நோக்குக்கு மட்டும் புலப்படும் உள்முகமாக ஆறாவது திருவதனம் - அதே முகமாகயுள்ளது. அனைத்தையும் பரிபாலஞ் செய்ய இறைவன் அறுமுகனாயினன் எனவும் கூறும்.

‘மாயிருள் ஞாலம் மறுவின்றிப் விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ; ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலினு வந்து வரங் கொடுத்தன்றே ; ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளிவழா அது
அந்தணர் வேள்வி ஓர்க்குமே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை எமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மேர் ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல் சமம் முருக்கிக்
கறுவு கொள் நெஞ்சமோடு களம்வேட்டன்றே: ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப் பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே

- திருமுருகாற்றுப்படை.

(அ) ஒரு முகமானது பெருமையாகிய இருளையுடைய உலகம் குற்றமில்லாமல் விளங்கும் பொருட்டு பல கிரகங்களையும் தோற்றுவித்தது.

(ஆ) ஒரு முகமானது அன்பர்கள் துதித்தால் அவர்கள் குற்றங்களை நீக்குவதற்கு உடன்பட்டு அவர்களுக்கு இனிதாய் நடந்து அவர்கள் மேற் சென்ற விருப்பத்தினாலே மகிழ்ந்து அவர்கள் வேண்டும் வரங்களைக் கொடுத்தது.

(இ) ஒரு முகமானது மந்திரத்தையுடைய வேதத்தில் சொல்லிய முறைமை தவறாக பிராமணர்களுடைய யாகங்களிலே தீங்கு வராதபடி நினைய நிற்கும்.

(ஈ) ஒரு முகமானது வேதாகமங்களிலே மறைந்து கிடைக்கும் பொருள்களை இருடிகள் இன்பம் பொருந்தும்படி ஆராய்ந்து போதித்துச் சந்திரனைப் போலத் திசைகளெல்லாவற்றையும் விளக்கும்.

(உ) ஒரு முகமானது திருவுள்ளத்திலே நிகழ்கின்ற சமத்துவத்தை ஒழித்துக் கோபங்கொண்ட திருவுள்ளத்துடனே பகைவராகிய அசுரர்களை வதைத்துப் போர்க்கள வேள்வியை வேட்டது.

(ஊ) ஒரு முகமானது வேடருடைய மடப்பத்தையுடைய மகளும் கொடிபோலும் இடையினையுடை இளம் பெண்கள் மாகிய வள்ளிநா யகியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று.

இங்ஙனம், ஆறுமுகங்களும் அவ்வம் முகங்களுக்கேற்ப ஒவ்வோர் தொழிலினைக் கண்டு விளங்கும்.

பன்னிரு கரங்கள் செய்யும் தொழில்கள்:

ஒரு கை தேவர்களையும், ரிஷிகளையும் பாதுகாக்க அமைந்தது. அதற்கிணையாக ஒரு கை மறுபக்கத்திலே கிடந்தது. மூன்றாவது கை அங்குசத்தைச் செலுத்துகின்றது. அதற்கிணையான கை ஆடை உடுத்திய தொடையில் கிடக்கின்றது. ஐந்து, ஆறாவதுமாகிய கைகள் அழகிய பெரிய பரிசையொடு வேலாயுதத்தை வலமாகச் சுழற்றுகின்றன. ஏழாவது கை முனிவர்களுக்கு உரையிறந்த பொருளை உணர்த்த மார்போடு சேர்ந்து விளங்க . எட்டாவது கை மார்பில் தாழ்ந்து தொங்கும் மாலையுடன் சேர்ந்து விளங்குகின்றது. ஒன்பதாவது கை வளையலுடனே மேலே சுழன்று களவேள்வியை வேட்கும் முத்திரை கொடுக்கிறது. இதற்கிடையான கை மணியை மாறி ஒலிக்கப் பண்பாடுகிறது. பதினொன்றாவது கை மழையைப் பெய்விக்கின்றது. ஒரு கை தெய்வப் பெண்களுக்கு மாமாலை சூட்டுகின்றது.

பன்னிரு திருக்கரங்களும் உலக உயிர்கள் ஈடேற பல்வேறு தொழில் புரிகின்றது.

விரதங்கள் :

முருகப் பெருமானை வழிபடும் அடியார்கள் மேற் கொள்ளும் விரதங்கள் மூன்று. கார்த்திகை (கிருத்திகை விரதம்), சுக்கிர (வெள்ளிக்கிழமை) விரதம் மற் றொன்று சஷ்டி விரதம்

கார்த்திகை நட்சத்திரத்தன்று எவர் விரதம் இருந்து குமாரக்கடவுளை வழிபடுகின்றாரே அவருக்கு செல்வம், கல்வி, ஆயுள், நல்ல மனைவி, நன்மக்கட் பேறு. பசுக்கள், நிலபுலம் ஆக எல்லாம் கிடைக்கும்.

திரு அளிக்கும் பெரும் கல்வியும் நல்கிடும்; சேண் உலகுஆர்
தரு அளிக்கும் பதம் யாவையும் ஈந்திடும்; தன் அனைய
உரு அளிக்கும்; தொண்டர் எண்ணிய யாவும் உடன் அளிக்கும்;
மரு அளிக்கும் பொழில் சூழ் மரு தாசலன் வண்பதமே

என்று மருதமலை அலங்காரத்தில் தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் இவ்வாறு முருகன் சிறப்பைப் போற்றுகின்றார்.

2. புலவர் புராணத்தில் குமரகுருபரர்

வண்ணச்சரபம் சுவாமிகள் சரிதம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த தமிழ்ப் பெருமகனார் வண்ணச்சரபம் தவத்திரு. தண்டபாணி சுவாமிகள். 1839ஆம் ஆண்டு திருநெல்வேலியில்

தோன்றி, தமிழ்ப்பணி ஆற்றி 1898ஆம் ஆண்டு விழுப்புரம் அருகேயுள்ள திருவாமாத்தூரில் இறைவன் திருவருளில் கலந்தார். சுவாமிகள் தமிழ் மொழியை வளப்படுத்தியதோடு. கௌமார நெறியையும் அமைத்துக்கொடுத்தார்.

முருகவேலின்பால் அளவற்ற பக்தி கொண்டிருந்தாலும் சௌரம், சைவம், சாக்தேயம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம் என்னும் ஆறு சமயங்களையும் பேதமற்ற நிலையில் போற்றினார். இச்சுவாமிகள் சிரவையாதீனத்தின் ஞான குருநாதராக விளங்குகின்றார்.

இவர் பாடிய பாடல்கள் ஓர் இலட்சத்திற்கும் அதிகமாகும். இன்று கிடைக்கக் கூடிய பாடல்கள் ஏறக்குறைய ஐம்பதினாயிரம் மட்டுமே. ஏனைய பாடல்கள் அவர்களாலேயே அனலிலும், புனலிலும் அழிக்கப்பட்டதாக அறிகிறோம். சுவாமிகள் பக்தி இலக்கியத்தோடு, இலக்கண நூல்களையும் இயற்றியுள்ளார்.

புலவர் புராணம் – ஓர் அறிமுகம்

சைவ அடியார்கள் அறுபத்திமூவரின் பெருமைகளைச் சொல்வதாக அமைந்திருப்பது சேக்கிழார் பெருமானின் பெரிய புராணம். அது போலத் தமிழ்க்கவிகளால் இறைவனைப் பாடித் திருவருள் பெற்ற தெய்வத்தன்மை வாய்ந்த புலவர்களின் சிறப்பை எடுத்துக் கூறுவதாக வண்ணச்சரபம் சுவாமிகள் இயற்றியருளியது புலவர்புராணம்.

புலவர் புராணத்தில் பெரும்பாலும் ஒவ்வொரு தமிழ்க்கவிஞருக்கும் ஒவ்வொரு சருக்கமாக அமைத்துள்ளார். எழுபத்திரண்டு சருக்கத்தைக் கொண்டதாக இந்நூல்

அமைந்துள்ளது. மற்ற காப்பியங்களைப் போலவே பொதுப்பாயிரம்,

உலகுய்ய ஊமையென வந்தழுவி

பொருநை நதியின் வடகரையில் திருமால் எழுந்தருளிப் பெருமை சேர்க்கும் ஸ்ரீ வைகுண்டம் என்னும் ஊரில் ஒரு வேளாளரின் அரும் தவத்தின் பயனாக அழகிய புதல்வன் ஒருவன் ஊமையாகப் பிறந்தான் என்பதைச் சுவாமிகள் முதல் பாடலில் கூறுகிறார்.

அருள்மிகும் ஓர் வேளாளன் அரும்தவத்தின் பயனாகி
ஒரு புதல்வன் எழில் மிக்கான் ஊமையாப் பிறந்தானோ (1)

சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத் தொகையை அடியொற்றிச் சுவாமிகள் நூ ற்றியெட்டு முருகனடியார்களைப் போற்றிக் கௌமாரத் தொகை என்னும் நூலை இயற்றியுள்ளார். அந்நூலில் சுவாமிகள் குமரகுருபரரை பதினோராவது கௌமார அடியாராகக் கொண்டுள்ளார். இவரைக் குறிப்பிடும் பொழுது உலகம் உய்வதற்காக ஊமையாகத் தோன்றினார் என்கிறார்.

'உலகுய்வான் ஊமை என வந்த முனிவனைப் போற்றி' என்பது அந்நூற்பகுதி. (கௌமாரத் தொகை -2) இது 'பூதபரம்பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத திருஞான சம்பந்தர் என்னும் சேக்கிழாரின் அமுதவாக்கை நினைவூட்டுகிறதன்றோ?

ஐந்தாம் அகவைவரை ஊமையாக இருந்த குழந்தையைப் பார்த்துப் பெற்றோர்கள் வருத்தம் கொண்டனர். பெற்றோர் மைந்தனைத் திருச்செந்தூருக்கு அழைத்துச் சென்று செந்திலாண்டவர் திருத்தாளை வணங்கி முறையிட்டனர். எம்மகன் ஒரு மண்டலத்தில் ஊமைத்தன்மை நீங்கிப் பேச வேண்டும் என்று இறைவனை வணங்கி விரதத்தை மேற்கொண்டனர். இல்லையேல் உயிர்விட்டு மடிவோம் எனச் சூளுரைத்தனர். தினமும் உப்பில்லாத வெறும் அன்னத்தை ஒருவேளை மட்டும் உண்டு செந்தமிழ் வண்ணத் திருப்புகழைப் பாடி வழிபட்டு வந்தனர்.

விரதம் நிறையும் நாளில் பகல் வழிபாடும் நிறைவு பெற்று, சூரியன் மறையும் அந்தி மாலைப் பொழுதில் இறைவன் சந்நிதியில் நின்று முருகப் பெருமானை நினைந்து, 'இன்று பயன் கைவருமோ அல்லது இறப்புத்தான் வருமோ' என்று அஞ்சி வழிபடுகின்ற பொழுது முருகப்பெருமான் ஓர் அர்ச்சகர் மீது ஆவேசமாக வந்து. கையில் வேல் எடுத்து, பூமாலை ஒன்றை அம்முதலையின் கழுத்தினில் இட்டு தீர்த்தம் தெளித்தனன். அதனால் பழவினைகள் தீர்ந்து பேசும் திறனைப் பெற்றது அம்முதலை.

இறைவன் 'பூ' என்னும் முதலடி எடுத்துக் கொடுக்க அக்குழந்தை அக்கணமே பாடும் திறத்தைப் பெற்றது.

' அப்புத்திரன், அம்மொழிபற்றிப்'
பா என்னும் இனத்து யாரும் பஃறொடை
வெண்பாப்பகர்ந்தான்' (7)

'பூமேவு செங்கமலப் புத்தேளும் ' (கந்தர் கலிவெண்பா -1) எனத் தொடங்கிக் கந்தர் கலிவெண்பாவைக் குமரகுருபரர் பாடி முடித்தார்.

பேசும் திறத்தோடு புலமைப்பேற்றையும் பெற்ற குழந்தையைப் பார்த்த பெற்றோரும், அங்கிருந்த அனைவரும் இறையருளின் சிறப்பை அதிசயித்து மகிழ்வுற்றனர். இவ்விடத்தில் வண்ணச்சரபம் சுவாமிகள் முன்னம் ஓர் ஊமையும் ஒரு முடவனும் இத்தலத்தில் தம் குறை நீங்கிப் பயனடைந்துள்ளனர் என்னும் பழைய செவிவழிச் செய்தியையும் குறிப்பிட்டுச் செந்திலாண்டவர் பெருமை எவ்வளவு உயர்ந்தது என எண்ணி மகிழ்கின்றார்.

'முன்னர்ஓர் ஊமையையும் முடவனையும் திருத்தியவா
பின்னர் ஓர் ஊமையையும் பேசுவித்தான் எனும் சீர்த்தி
கன்னல்வேய் போல் வளரும் கழனிமலி திருச்செந்தூர்
மன்னனாம் முருகேசன் மாட்சியிடை வாய்ந்ததுவோ. (9)

குருவிடம் உபதேசம் பெறுதல்:

அமரர்களும் போற்றும் அக்குழந்தைக்குத் திருநாமம் 'குமரகுருபரன்! என்று கூறியது இவ்வுலகம். அவருடைய தமிழ் உணர்வை அறிந்து அருந்தவத்தோரும், மிக்குணர்ந்த புலவர்களும் விருப்பத்தோடு கூடி மகிழ்ந்தனர். அவர் திருமடங்கள், தமிழ்ப்பேரவைகள் தோறும் சென்று பெரும் புகழ்பெற்று விளங்கினார். இறைவனின் திருவருளினால் ஓதாமல் சிறந்த கல்வி கேள்விகளைப் பெற்றார் என அறிந்த நற்குணத்தினர் குமரகுருபரருடைய திருவடிகளை வணங்கி, அவர் சொற்கேட்டுப் பணி செய்தார்கள். கருணை மிகுந்தவராகிய தருமபுர ஆதீனத் தலைவர் மாசிலாமணித் தேசிகர் ஒரு நாள் தம் சீடர்களை நோக்கி, 'பரிகல சேடத்தை ஒரு தொன்னையில் எடுத்து வையுங்கள்; ஓர் அன்பன்' வருவார்' என்றார். அவ்வாறே வந்த குமரகுருபரனுக்குத் தேசிகர் செந்திலாண்டவனாகத் தோன்றினார். உடனே அவர் குருநாதரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். அதைக் கண்ணுற்ற அங்குள்ளோர் 'அதிசயித்தனர். குருநாதரும் அவரைத்தழுவி நடனம் செய் அம்பலவாணப் பெருமானின் திருவடிப் பெருமைகளை உணர்வித்து உபதேசம் அருளினார். குருவின் திருவருளினால் தமது பழவினைகள் முற்றும் நீங்கியதை உணர்ந்தார்.

மாசிலாமணி தேசிகர் குமரகுருபரரிடம் 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள' என்னும் பெரிய புராணத் திருப்பாடலின் அநுபவ உரையைக் கேட்டுச் சோதித்ததாக உரைக்கின்றனர். இக்கருத்து வண்ணச்சரபம் சுவாமிகட்கு ஏற்புடையதல்ல, செந்திலாண்டவனாலேயே கலைஞானம் பெற்று, ஞான தேசிகனை முருகனாகவே தரிசித்து நிற்கும் ஒருவரைச் சோதிப்பது தேவையில்லை என்பது அவர் கருத்து. இதனை

'ஞானகுரு பரன்மகிமை நன்குணர மாட்டாதார்)
போனவனைத் திருத்தொண்டர் புராணத்தின் கவிஒன்றால்
'ஈனம் உறச் செயித்தாண்டான்' எனச் சொல்வார் ; இவன் அந்தத்
தானம் அதற் கொருபெரும் பொற் சாளிகையாய்
அவிர்ந்தானே 11 (16)

என்பதனால் அறிகிறோம்.

மீனாட்சியம்மையின் மீது நூலொன்று செய்ய விருப்புற்று, "கார் கொண்ட" என்றெடுத்துப் பிள்ளைத்தமிழ் பாடி முடித்து, மதுரை மாநகர் சென்று அரங்கேற்ற அந்நகரிலுள்ள அன்று ஆண்டு வந்த திருமலை நாயக்க மன்னரைச் சந்திக்கச் சென்றார். அங்கிருந்தோர் அவரை அரண்மனையினுலுள் அனுமதிக்கவில்லை. அதனால், 'இந்நூலை அரங்கேற்ற அன்னை அருளவில்லை. இவ்வளவும் செய்த அவள் இன்னும் என்ன தான் செய்வாளோ?' எனச் சினம் கொண்டு அரண்மனை வாயிலிலேயே உறங்கி விட்டார்.

மீனாட்சி அம்மன்னவனின் கனவினில் தோன்றி, வந்துள்ள குமரகுருபரரைப் பற்றிக் கூறி, 'அரண்மனை வாயிலில் உறங்குகின்ற அவரை அழைத்துப் பிள்ளைத் தமிழை அரங்கேற்றுவாயாக' என்று கூறி மறைந்தாள். அவ்வாறே குமரகுருபரரை அறிஞர்கள் கண்டு வியப்புறும் வகையில் சிறப்புச் செய்து மன்னன் வணங்கினார்.

அம்பிகையின் அருட்திருவிளையாடல் :

புலவர்களும், தவசிகளும், வேதியர்களும் சூழ இருந்து, மன்னனும் மகிழ்வுறும் வண்ணம் பிள்ளைத்தமிழைத் திருக்கோயிலில் அரங்கேற்றும் முன் அந்நூலினைத் தாங்கித் திருக்கோயிலை வலம் வந்தனர். காப்பு முதல் ஐந்து பருவம் அரங்கேறி வாரானைப் பருவம் துவங்கும் அந்நல்வேளையில் அம்பிகை ஒரு பட்டருடைய மகளாக வந்து மன்னவனின் மடியிலே அமர்ந்து நூ ல் முடியும் வரையும் கேட்டு, யாரும் அறியா வண்ணம் மறைந்தனள். மறைந்த தன்பின்பே அங்கிருந்தவர்கள் வந்து போனது மானிட மகள் அல்லள் என்பதை உணர்ந்தனர். மன்னன் தான் பெற்ற நற்பேற்றினை எண்ணி மிக மகிழ்வுற்றான்.

இறையும், ' இத்தனை பேறு நான் பெற்றவா
றென்' எனக் களிகூர்ந்தான்;
குறையும் சொற்றுமுற் றியது அவன் தவவலி
கறிடும் தகைத்தன்றே.' (25)

இத்தகைய பெருமைகளைப் பெற்ற குமரகுருபரருக்கு மன்னவன் பொன்னும், ஆடையும் கொடுத்து என்னால்

இயன்றவை இவைகள்தான் என்று சொல்லித் தொழுது வணங்கினான். அதன்பின் குமரகுருபரர் வைத்தீசுவரன் கோவிலை அடைந்து, முத்துக்குமாரர் என்னும் முருகப்பெருமான் திருவடிகளைத் தொழுது, பாராயணம் செய்பவர்களின் பிறவியை நீக்கிப் பிறவா நிலையை அளிக்கக்கூடிய அமுதத்தை விடச் சுவையான பிள்ளைத்தமிழ்க் கவியை அணிவித்தார்.

அதற்குப்பிறகு மேலும் பல திருத்தலங்களை வழிபட்டுப் பெருமை பொருந்திய தில்லையம்பதியைச் சேர்ந்தார். அங்கு சிதம்பர மும்மணிக் கோவையை இயற்றினார். பின் காசியிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் இறைவன் மீது காசிக் கலம்பகம் பாடியருளினார். பின் நீதிநெறிவிளக்கம், சகலகலாவல்லி மாலை போன்ற பல நூல்களும் இயற்றினார்.

'குமரகுருபரரால் இயற்றப்பெற்ற நூல்கள் பன்னிரண்டு எனப் பலர் கூறுகின்றனர். ஆனால் அவை எவை எவை எனச் சிலரே தெளிவாகக் கூறுகின்றனர்'. 7. என வண்ணச்சரபர் கூறுவதால் (செய்யுள் 29 இல்) அவரால் இன்ன இன்னவை குமரகுருபரரால் இயற்றப் பெற்றவை என உறுதியாக அறிய இயலவில்லை எனத் தெளிவாகிறது. அதனால்தான் அவர் எல்லா நூல்களைப் பற்றியும் குறிப்பிடப்படவில்லை என்பது திண்ணம்.

காசியில் திருமடம் நிறுவுதல்

வட நாட்டில் தமிழை நிறுவுதல் மிக அரிதேனும் நல்லறங்களை நிலை நாட்ட வேண்டும் என்று எண்ணி, அத்தினாபுரம் என்னும் டில்லி மாநகருக்குச் சென்று, முகமதிய மன்னனைக் கண்டார். மன்னவன் 'நீ யார்' என வினவினான். ' இந்த உலகமுழுவதையும் ஆளுகின்ற அண்டர் நாயகனாகிய சிவ பெருமானின் அடிமை நான்; அவர் என்னுள் இருக்கின்றார் மன்னவன், 'அவர் யாவருக்கும் பொதுவானவனா? ' என்று வினவ, 'ஆம்' என்று பதில் உரைத்தார். உடனே அம்முகமதிய மன்னர்; 'அப்படியென்றால் எம்மோடு ஊன் உணவு உண்கஎன்றான். குமரகுருபரர் ஒப்ப மறுக்க மன்னன், 'ஏன்?' என்றான். குமரகுருபரர் உங்களுக்கு உங்கள் குருநாதர் எப்படி பன்றியைத் தின்னக் கூடாது என்றாரோ அப்படியே எங்கள்

குருநாதரும் எமக்கு ஊன் உண்ணச் சொல்லவில்லை எனப் பதில் கூறினார். கேட்ட மன்னன் - மகிழ்வோடு தெய்வீகமான அருட்செயல் ஏதாவது ஒன்றேனும் செய்யவேண்டும் எனச் சொன்னான்.

குமரகுருபரர் அன்று இரவிலேயே மன்னனின் வழிபடுகடவுளே தம் சிறப்பைக் கூறும் எனக் கூறிச் சென்றார். முருகப் பெருமானிடத்தில், மன்னனின் குருவினுடைய வடிவத்தில் அவன் கனவில் தோன்றி, ஆவன செய்ய வேண்டுமாய் வேண்டிக் கொண்டார். அவ்வாறே நிகழ்ந்தது. மன்னவன் மறுநாள் காலையில் குமரகுருபரரைக் கண்டு 'எம் மக்க தேசிகன் மொழியினால் நின் பெரும் புகழை உணர்ந்துற்றேன். நின்னுடைய விருப்பங்கள் அனைத்தையும் நிறைவுறச் செய்வேன் எனக் கூறினான்.

குமரகுருபரர் விரும்பிய வண்ணம் காசியில் அறுபத்து நான்கு மடங்கள் நிறுவ இடமும், மற்ற வசதியும் கொடுத்து விரைவில் முடித்துக் கொடுத்தான். குமரகுருபரர் காசியில் தங்கி எல்லோரும் வியக்குமாறு அறம் பல செய்து வந்தார்.

கொல்லாமை வலியுறுத்தல் :

வண்ணச்சரபம் சுவாமிகள் தம்முடைய எல்லா நூல்களிலும் கொலைபுலை தவிர்த்தலை வலியுறுத்திக் கூறுவதை அறமாகக் கொண்டுள்ளார். இதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டு இச்சருக்கத்திலும் கூறியுள்ளார். உயிர்களைக் கொன்று தில்லுறும் ஒரு மன்னனிடத்துப் பொருள் பெற்று, புலவர்களுக்கும் தூயமாதவர்களுக்கும்/ விரும்பத்தக்க பல தருமங்களைக் குமரகுருபரர் செய்த செயல் கடலிலுள்ள உப்பு நீரை முகந்து சென்று மேகங்கள் நல்ல நீரை மழையாகப் பொழிவது போன்றது ஆகும் என்கிறார் வண்ணச்சரபர். தீயவரிடமிருந்து பெற்ற பொருளானாலும், தக்கார் கையில் கிடைத்தால் உலகுக்கு நன்மை செய்வதாக அப்பொருள் மாறிவிடும் எனத் தெளிவாக்குகிறார்.

'ஒட்ட கம் , பசு, மேய, மா திய பல
உயிர்வதைத் த ன் உன் துலும்
துட்டர் கைப்பொருட் குவை கொடு . புலவரும்
தூ யமா தவத்தோரும்
இட்ட மாம்தரு மங்கள்மிக் கியற்றினன் ;
எறிகடல் உவர்நீரால்,
வட்ட மாநிலம் உய்ய நன் நீர்பெயும்
மழைமுகில் உறழ்ந்தானே'. (36)

காசியிலே சில நாள் தங்கி அரும் தவங்கள் செய்து, அங்கு எழுந்தருளி அருள்பாலிக்கும் வயிரவப் பெருமானுக்குள் கங்கையில் வந்து கலக்கும் வாய்க்காலைப் போலக் கலந்து விட்டார். அவர் மறுபடியும் பிறவாத நெறி பெற்றுவிட்டார் என்னும் சொல் மிக உண்மையானது என்கிறார் சுவாமிகள்.

படிக்காசுப் புலவரின் வரலாறு பலவாறாக வழங்குகிறது. சிலர் அவரைக் குமரகுருபரரின் சீடர் என்கின்றனர். அந்தப் படிக்காசுப் புலவர் வள்ளல்களை அண்டி வாழ்ந்தவரேனும் அவருடைய தமிழ் அருமையானது என வண்ணச்சரபர் பாராட்டுவதோடு . குமரகுருபரரின் தொண்டர் அவர் என்றும் செவிவழிச் செய்தி பற்றி இச்சருக்கத்தில் அவரையும் நினைவு கூறுகிறார்.

துணை நூல்கள்

1. புலவர் புராணம் - தண்டபாணி சுவாமிகள்

இராமானந்த அடிகளார் அறக்கட்டளை வெளியீடு. 1994.

2. கௌமாரத் தொகை - தண்டபாணி சுவாமிகள் ..

திருவாமாத்தூர்க் கௌமாரசபை வெளியீடு - குரோதன (1925)

3. சிரவைக் கந்தசாமி சுவாமிகளின் பாடல்களுள் நோக்கு

சிரவையாதீனம் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் ஒரு சமயத் தலைவராக விளங்கியதோடு சிறந்த கவிஞராகவும் விளங்குகிறார். காப்பியம், தலபுராணம், சிற்றிலக்கிய வகைகள், சித்திர கவிகள் எனப் பலதுறைகளிலும் நூல்களை இயற்றியுள்ளார். பதினான்காயிரத்திற்கும் மேற்பட்ட செய்யுள்களை இயற்றியுள்ள இவருடைய படைப்புக்களுள் கிட்டத்தட்ட அனைத்தும் அச்சாகி உள்ளன; எனினும் தேவையான அளவு உரைவிளக்கங்களுடனும் ஆய்வுக் குறிப்புகளுடனும் நல்ல இலக்கியப் பதிப்புகளாக இன்றுவரை வெளிவரவில்லை. இதனால் தான் நம் சுவாமிகளுக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றில் உரிய இடம் கிடைக்கவில்லை. இந்தக் குறையை நீக்கும் பணியில் சிரவையாதீனம் இப்போது ஈடுபட்டுள்ளது. சுவாமிகளின் படைப்புக்கள் எல்லாவற்றையும் பத்தமான்மியம் நீங்கலாக ஒரே நூலாக மிகச் சுருக்கமான குறிப்புகளுடன் செவ்விய மூலபாடப் பதிப்பாக வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது. இந்த மூலபாடப் பதிப்பு மட்டுமே சுவாமிகள் இலக்கியங்களின் முழுமையான புரிதலுக்கும் ஆழமான ஆராய்ச்சிகளுக்கும், போதுமானது அல்ல என்பதை யாம் அறிவோம். எனினும் இப்படைப்புக்களைத் தமிழ்கூறும் நல்லுலகத்தின் யாப்பறி புலவர்களுக்கு முழுமையாக அறிமுகப்படுத்த இது வழிவகுக்கும் என்பதில் ஐயம் இல்லை. இந்தப் பதிப்பு தனித்தனியான உரைவிளக்க ஆய்வுச் செம்பதிப்புகளுக்கு வழிவகுக்கும் என நம்புகிறோம். இன்றுள்ள இந்த நிலையில் சிரவைக் கந்தசாமி சுவாமிகளின் படைப்புக்களைப் பற்றிய முறையான இலக்கியத் திறனாய்வு முயற்சிகளும் சிறக்க வேண்டும் என விழைகிறோம். அந்த ஆர்வத்தின் விளைவாக எழுவதே இந்தச் சிற்றாராய்ச்சிக் கட்டுரை.

நோக்கு என்பது தொல்காப்பியச் செய்யுளியல் கூறுகின்ற செய்யுள் உறுப்புக்களுள் ஒன்று. இதனை இலக்கியத் திறனாய்வுக் கூறுகளுள் ஒன்றாகவும் கொள்ளலாம். சுவாமிகளால் இயற்றப்பட்டுள்ள சிரவைத் தண்டபாணிக்

கடவுள் பிள்ளைத் தமிழின் காப்புப் பருவத்தின் சில செய்யுட்களை இந்தக் கண்ணோட்டத்தில் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். மேலும் வடமொழி இலக்கியத் திறனாய்வாளர்கள் சிறப்பாகப் போற்றும் தகுதிப்பாடு ஔசித்யம் என்னும் கவிதைப் பண்பும் இந்த ''நோக்கில்'' அடங்கும் என்றும் காட்டப்பட்டுள்ளது-

தொல்காப்பியர் தம் செய்யுளினுள் மாத்திரைமுதல் இழைபுவரையான முப்பத்து நான்கு உறுப்புக்களை விளக்குகிறார். இவை ஆறு, இருபது, எட்டு எனக் குறிப்பாக மூவகைப் படுத்தப்பட்டுள்ளன இருபது ஆகக் கூறப்படும் இரண்டாம் வகை உறுப்புக்களுள் நான்காவதாக இடம் பெறுவது ''நோக்கு'' என்பது ஆகும். இதனை இலக்கணம் கூறி விளக்கும்போது ஆசிரியர்,

''மாத்திரை முதலா அடிநிலை கூறும்
நோக்குதற் காரணம் நோக்கு எனப்படுமே''

என்கிறார் இந்நூற்பாவுக்கு உரைகண்ட பேராசிரியர்.

''மாத்திரையும், எழுத்தும், அசைநிலையும், சீரும்
முதலாக அடி நிரம்புந்துணையும் நேக்கு உடையவாகச்
செய்தல் வன்மையால் பெறப்படுவது நோக்கு என்றும்
உறுப்பு ஆவது என்றவாறு.
கேட்டார் மறித்து நோக்கிப் பயன்கொள்ளும் கருவியை
நோக்குதற் காரணம் என்றான் என்பது.'' அடிநிலை காறும்''
என்பது 3 அடிக் கண்ணே அன்றியும் செய்யுள் வந்த அடி
எத்துணை ஆயினும் அவை முடிகாறும் என்றவாறு''.

என்கிறார். நச்சினார்க்கினியர் ஏறக்குறைய இதனையே வழிமொழிந்துள்ளார். இதை எளிமைப்படுத்தி ஆ.சிவலிங்கனார்.

''மாத்திரை முதல் அடிவரை கூறப்பட்டனவற்றைச்
செய்யுளில் பொருட்பொருத்தமுற நோக்குதலாகிய
காரணம் நோக்கு எனப்படும் என்றவாறு
நோக்குதலாகிய காரணம் என்றது, கூறுவான்

செய்யுளைக் கேட்பவன் பயன் கொள்ளுமாறு அமையும் நோக்கத்தினை. பயன் கொள்ளுதலாவது செய்யுட் பொருளை அரிதலாகிய பயன் கொள்ளுதலோடு சொற்றொடர்ச் சிறப்பு (நயம்) முதலியன காணலும் ஆம்''

என விளக்குகிறார். மாறனலங்காரம் நோக்கு என்பதை யாப்புக்கால் என்றும் பெயரில் குறிக்கும். சிவலிங்கனாரின் விளக்கத்தில் ''பயன் கொள்ளுதலாவது செய்யுட் பொருளை அரிதலாகிய பயன் கொள்ளுதலோடு சொற்றொடர்ச் சிறப்பு(நயம்) முதலியன காணலும் ஆம்'' எனக் கூறுவது கூர்ந்து நோக்கத்தக்கது ஆகும்.சிரவைக் கந்தசாமி சுவாமிகளின் பாடல்களுள் நோக்கு

4. திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ் அறிமுகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இணையற்ற சைவப் பெருங்கவிஞர், தமிழ்த் தாத்தாவை உருவாக்கி வழங்கிய பெருவள்ளல் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மீது சிரவையாதீனம் இரண்டாவது குரு முதல்வர் தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் பேரீடுபாடு கொண்டவர். அவர்களை வாழ்த்தி ஒரு பதிகம் இயற்றியுள்ளார். அதில் இடம்பெற்றுள்ள ஒரு பாடல் மிகச் சுவையானது.

இசை கொள்மீ னாட்சி, சுந்தரம். பிள்ளை
　　என்பவர் மூவரும் மகிமை
திசைகொள்சீர்ப் பாண்டி ஒன்றினை ஆட்சி
　　செய்தீனர்; ஒருவன்நீ முப்பேர்
நசைகொளத் தாங்கி ஆங்கதற் கேற்ப
　　நாடொரு மூன்றிலும் என்றும்
மிசை கொள்சீர் பெற்ற வேந்தரில் புலவர்
　　மேல்எனல் விளக்கினை மாதோ.

மீனாட்சி என்னும் அங்கயற்கண்ணி. சுந்தரம் என்றும் சோமசுந்தரர். இவர்களில் பிள்ளை ஆகிய உக்ர குமார பாண்டியன் ஆகிய மூவரும் ஒரு பாண்டிநாட்டை ஒருவர் பின் ஒருவராக ஆண்டனர். அந்த மூன்று திருநாமங்களையும் ஒரு சேரப் பெற்ற நீர் சேர சோழ பாண்டிய நாடுகள் மூன்றிலும் ஒரே சமயத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கி மன்னவர்களைவிடக் கவிஞர்கள் உயர்ந்தவர்கள் என்பதை மெய்ப்பித்து விட்டீர்கள் என்பது இதன் கருத்து. அவ்வாறு எம் பரமகுரு நாதரால் போற்ற பெற்ற கவிஞர் பெருமானைப் பற்றிச் சிந்திப்பதில் பேருவகைக் கொள்கிறோம்.

மகாவித்வான் அவர்களின் வாக்காக இன்று கிடைப்பன மொத்தம் எட்டு பிள்ளைத்தமிழ்கள்; அவற்றில் ஐந்து அம்மையைப் போற்றுகின்ற பெண்பால் பிள்ளைத்தமிழ்: இரண்டு குருநாதரைப் புகழ்பவை; மூன்று முருகப்பெருமான் மேல் அமைந்தது. அந்தத் திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ் பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

மகாவித்வான் அவர்களால் முதன்முதலாக இயற்றப்பெற்ற பிள்ளைத்தமிழ் காவை அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ். பெரும்பாலும் இது அவருடைய இருபத்தேழாவது வயதில் இயற்றப்பட்டிருக்கலாம். இதைச் சுவைத்த மழலை மகாலிங்கையரே.

தருமைவளர் குமரகுரு முனிவன் கல்வி
சார்பகழிக் கூத்தன்எனத் தரணி யோர்சொல்
இருவருமே நன்கு பிள்ளைத் தமிழைச் செய்தற்கு
ஏற்றவர்என் றிடும்உரைவெந் நிட்ட தம்மா

எனப் பாராட்டினார். இதற்குப் பிறகு பல பிள்ளைத்தமிழ், கோவை. கலம்பகம், தலபுராணங்களைப் பாடி மெருகேறிய பிறகு 1860 ஆம் ஆண்டில் - கவியர் பெருமானின் 45 ஆம் வயதில் - இயற்றப்பெற்றது. திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ்.

இந்தப் பிரபந்தத்தைப் பற்றி டாக்டர்.அய்யர் அவர்கள், ''ரௌத்திரி வருஷ திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழை இவர் இயற்றினார். அதனை ஆக்குவித்தோர் அந்த ஸ்தலத்திலிருந்த கார்காத்த வேளாளப் பிரபுவாகிய சுப்பராய பிள்ளை என்பவர்'', எனச் சொல்லிவிட்டு. இதன் அரங்கேற்றத் தொடக்கத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றையும்' குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூலின் காப்புப் பருவத்திற்குமுன் விநாயகர் வணக்கமாக ஒரு பாடல் உள்ளது. அதில் அருமையான கற்பனை ஒன்று இடம்பெற்றுள்ளது. சிவபெருமான் வில்லாக வளைக்க மேருமலையைப் பெயர்த்தெடுத்தார். பக்கத்திலிருந்த விநாயகரின் பார்வைக்கு அம்மலை ஒரு மாம்பழம் போலக் காட்சியளித்ததாம். அதனை உண்ணலாம் எனக் கருதி, தந்தையின் கையிலிருந்து பறித்து நோக்கினாராம். அதன் ஒரு பக்கத்தில் அம்மையின் பச்சை நிறமும், மறுபுறம் அத்தனின் செம்மை நிறமும் பிரதிபலித்ததாம். அதனால் அந்த மாம்பழம் முற்றிலும் பழுக்காத காய்வெட்டானது எனக் கருதித் தூர எறிந்துவிட்டாராம். மேருமலையை மாம்பழமாகச் சிறுகச் செய்யும் சிவபெருமானின் பேருருவம், அவர் கையிலிருந்து

அநாயாசமாக மலையைப் பறிக்கும் விநாயகரின் பேராற்றல், மேருமலையில் பிரதிபலிக்கும் மாதொருபாகனின் உருவம் அதனைப் பசுமையும் செம்மையுமாகக் காட்டும் விந்தை என இவ்வளவு கருத்துக்களும் இந்த ஒரு கற்பனையில் அடங்கியிருப்பதைப் பார்த்து வியக்கிறோம். இத்தகைய விநாயகரின் திருவடிகளை இப்பிள்ளைத்தமிழ் இலக்கியம் இனி நிறைவேறும் பொருட்டு வணங்குவாம் எனச் செய்யுள் முற்றுப்பெறுகிறது.

நீர் கொண்ட செஞ்சடைப் பெருமான் வளைக்க ஒரு
நெடியமால் வரை எடுக்க
நிறை சுவைப் பழையமால் கவிபோல்வ தென் றுனம்
நினைந்தது பறித்து நோக்கிச்
சீர்கொண்ட ஒருபால் கறுத்தும்மற் றொருபால்
சிவத்தலால் முற்றும்பழாச்
செங்காய்என வப்புறத் தெறியும் ஒரு குஞ்சரச்
செம்சரணை அஞ்சலிப்பாம்.

மகாவித்வான் அவர்கள் இந்த முதல் பாட்டிலேயே துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளை நினைவூட்டுகிறார் அல்லவா! காப்புப் பருவத்தின் நான்முகன் காப்பில் ''மும்முகத் தொருவன் அருள் நான்முகக் கடவுள் ஐம்முகத்தொருவன் அருள் அறுமுகக்கடவுளைக் காக்க என்பது சிறப்பாக உள்ளது.

ஆறு சமயங்களுக்கும், மூலாதாரம் முதலிய ஆதாரங்கள் ஆறினுக்கும் 4 மந்திரம், வர்ணம், பதம், தத்துவம், புவனம், கலை என்னும் அத்துவாக்கள் ஆறற்கும் முருகபெருமானே முதலானவர் எனத் தெளிவாகக் கூறிக் கௌமார பரத்துவத்தை நிலை நாட்டுகிறார்.

ஆட்டும் சமயம் ஆற்றுக்கும் ஆதாரங்கள் ஆற்றுக்கும்
அத்து வாஓர் ஆறினுக்கும் அமையும் தானே முதல்என்று
தீட்டும் படியா வரும்தெளியத் தெளித்தாங் காறு முகம்திகழச்
செல்வம் மலியும் இடைக்கழிவாழ் சேய். (காப்பு. ௯)

தாலப் பருவத்தில் மருதநில வளத்தைப் பாடும்போது மகாவித்வானுக்குக் கவிச்சக்ரவர்த்தி கம்பநாடனின் நினைவு வந்து விடுகிறது. கம்ப சூத்திரம் விரிவான ஓவியமாகிறது

கால்பாய் தடத்தில் அகம்படிந்த
கயவாய்ச் செங்கட் கருமேதி
கறித்துப் பலபூக் குதட்டி இளம்
கன்றை நினைந்து பொழிதருதீம்
பால்பாய் கழனிப் பரப்பெங்கும்
பாட்டுச் சுரும்பு விரும்புநெடும்
பைந்தாட் செந்தா மரையாதிப் பன்மா
மலரும் படு சுவைச் சாறு
ஒல்பாய் கரும்பும் அரும்புசெறி
ஒண்பூங் கொடியும் மாங்குயிலும்
ஓங்கும் மருத்தப் பூங்கிளியும்
உறுதற் கேற்ப எழுந்துபல
சேல்பாய் வளமை இடைக்கழிவாழ்
செல்வா!தாலோ தாலேலோ!
செழுநான் மறைஓ விடும்கருணைத்
தேவா! தாலோ தாலேலோ! - (தால். 3)

தீவிரதர சத்திநிபாதம் பெற்றவர்களின் மலங்களை இறைவன் நீக்குவான் என்னும் சைவ சித்தாந்தக் கருத்தை, எண்ணிய சத்தி பதிந்தவர் மும்மல இருள்அற எழுகதிரே' (தால். 6) என முருகப் பெருமால் மேலேற்றிக் கூறி ஐந்துமுகச் சிவனுக்கும் ஆறுமுகப் பெருமானுக்கும் பேதம் இல்லை என நிறுவுகிறார்.

சிவபெருமான் கல்லால மரத்தடியில் அமர்ந்து சனகாதி நால்வருக்கு மட்டுமே பிறவிப்பிணியைத் தீர்த்தருளினார். ஆனால் முருகக்கடவுளோ திருவிடைக்கழியில் குரா மரத்தடியில் அமர்ந்து மூவுலகவாசிகள் எல்லோருடைய பிறவியையும் தொலைத்துப் பெரும்புகழ் படைத்து விளங்குகிறார் எனக் காவியச்சுவைபடச் சப்பாணிப் பருவத்தில் (1) கூறுகிறார்.

சூரனை அட்ட போர்க்களத்தை வருவிக்கும்போது நமக்கு ஒரு பரணிப் பிரபந்தத்தைப் பயில்வதுபோலத் தோன்றுகிறது. பிள்ளைத்தமிழர்கள் பரவி இதோ -

மால்வரை மறைக்கும் வெங் கேட்கப் பரிகலம்
மறித்துத் திருத்திவிட்ட
மண்டை மூழையின் மொண்டு முளைப் பெரும்சோறு
வாரிப் படைத்து, மீழ
பால்படு நினைப்பருப் பிட்டிழுது சொட்டும்
பசும்தடிக் கறிபடைத்து.
பாவு நெய்த் தோர்நெய் யும் வாக்கிப்பல் பெண்பேய்
பரிந்துப சரிப்ப, ஆண்பேய்
ஏல்வகை அருத்தி, உடல்முற்றும் வயிறாகமுன்
இயற்றிலன் இயற்றினான் ' என்று
எள்ளிவையக் கருந் தகுவர்செறி போர்க்களத்து
இளவேறெ னப்பொலிந்து
சால்புடைய வெஞ்சிலை வளைத்தகை முகிழ்த்தைய
சப்பானி கொட்டியருளே.

(கேடகம்- எதிரிகளின் அடிகளைத் தாங்கும் தடுப்புக்கருவி, கேடயம் பரிகலம்- சமையல் பாத்திரம். மண்டை கபாலம். மூழை - அகப்பை. நில பருப்பு இட்டு - கொழுப்பாகிய பருப்பை' போட்டு - இழுது - நிண நீர். தடிக்கறி - மாமிசமாகிய கறியமுது. நெய்த்தோர்- இரத்தம். இயற்றினான் - பிரமன் 'கரும் தருவர்- கருநிறமுடைய அரக்கராகிய பகைவர் இள ஏறு. சிலை-வில். முகிழ்த்து - குவித்து .)

முருகப் பெருமானாகிய குழந்தைக்குத் தலைமுதல் கால்வரை பற்பல அணிகலன்களை அணிவித்து. தளர்நடை நடந்து வருமாறு வருந்தியழைத்து அழகு பார்த்து அகம் மகிழ்கிறார் மகாவித்வான் அவர்கள்,

ஏர்கொண்ட நெற்றியில் சுட்டியும் பட்டமும்
எழில் காட்ட இட்டபொட்டும்
எட்டுத் திசைக்கும்ஒளி விட்டுப் பரப்பும்விலை
இல்லா மணிக்குழைகளும்

தார்கொண்ட ஐம்படையும் மொய்ம்படையும் வலயமும்
சாற்றும்முன் கைக்கடகமும்
தாவாம தாலியும் இளங் கதிர் விளங்கஒளி
தழைமுரல் நிலவெறிப்பப்
பார்கொண்ட சிற்றடி புலம்பும் சிலம்பும்
பரூஉமணிப் பொற்றண்டையும்
பரவும் சதங்கையும் கிண் கிணியும் மண்குளிர்
படைப்பக் கவின்கவின்எனச்
சீர்கொண்ட மறைமுழுமையும் தொடர்ந்தோலிடச்
சிவபிரான் மகன்வருகவே!
செந்தமிழ் மனம்தழை நடைக்கழி இடைக்கழித்
தெய்வநாயகம் வருகவே! - (வாரானை. 1)

(குழை-காதணி. மொய்ம்பு அடையும் மார்பில் பொருந்தும். தாவா- அசைகின்ற. மதானி - பதக்கம். முரல்-பல். பரூஉ- பெரிய. ஓலிட - ஒலிக்க.)

பரம்பொருளின் குருத்தத்துவமே கௌமாரம் என வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தெளிவாக அருளியுள்ளார். திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழில் அம்புலிப்பருவத்தில் மகாவித்வான் முருகப் பெருமானின் ஞானாசாரியத்தன்மையை,

'பாராய் தரப்பொலியும் வேதாக மங்கள் நனி
பகர்குறி குணம்கடந்து
பரநாத பரவிந்துவும் கடந்தோங்கொளி
பரப்பி ஒளிர் பரமயோகி
சீராய் முடித்தலை வணங்காமெய்ஞ் ஞானோப-
தேசம்முன் செய்தசைவத்
தெய்வ ஞானாசாரியன் காண் இவன் (5)

என விரிவாக விளக்குகிறார்.

பெண்கள் சிறுவீடு கட்டி விளையாடுகின்றனர். குறும்புக்கார முருகன் அவற்றை யெல்லாம் தன் கால்களால் சிதைத்து அழித்துவிடுகிறான். அதனால் அவர்கள் அவனிடம்

தம் சிற்றிலைச் சிதைக்கவேண்டாம் எனப் பற்பல விதமாக மன்றாடிக் கேட்டுக் கொள்கிறார்கள். உமாதேவி உன்னைக் குளிப்பாட்டி அலங்கரித்துத் தெருவில் உலவ விட்டது எங்கள் சிற்றிலைச் சிதைப்பதற்கோ? உன் திருவடிகளில் புழுதிபட்டால் அவளால் தாங்க முடியுமோ? எற்றுபுனலிற் கழுவி புவனப்பழங்கலம் எடுத்தடுக்கிப் புதுக்கூழ் இன்னமுதம் சமைத்து பன்முறை இழைத்த அம்மையின் மைந்தனாகிய நீ எம் சிற்றிலைச் சிதைத்தல் அறமோ? என்றெல்லாம் கெஞ்சுகின்றனர். ஆனால் பயன் இல்லை .

இதனால் மனம் உடைந்த அச்சிறுமிகள் முருகனை நோக்கி, சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக இருந்த உன்னைப் பார்வதி எடுத்து ஓர் உருவமாகச் செய்தபோது ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் அமைந்தன - நல்ல காலமாகப் பன்னிரண்டு கால்கள் அமையவில்லை. இரண்டு கால்கள் இருக்கும்போதே இவ்வளவு தொல்லை கொடுக்கிறாயே? என்கின்றனர்.

நையா நின்ற சிறுமருங்குல் நங்கை உமையாள் பரமனோடும்
நறுநீர்ப் பொய்கைத் தடங் கரைவாய் நண்டு
முகமாறினுக்கேற்பக்
கையா றிரண்டு புரிந்ததுபோல் கால்ஆ றிரண்டு செய்யாது
கருதி இரண்டே செய்தனன்முற் கடையேம் செய்த
நல்வினையால்
மெய்யா யிரண்டால் இருந்தும் அவை விளக்கும் குறும்பு
பொறுக்கரிதா
விளைந்த தினியாய் செயல்என்னே? (சிற்றில். ௭)

இத்தகைய பாடல்கள் இலக்கியச் சுவை மிகுந்து விளங்குகின்றன.

முருகப் பெருமானாகிய சிறு குழந்தையைச் சிவபிரான் எடுத்துக்கொண்டுள்ளார். அவர் கையில் உள்ள உடுக்கையைச் சிறு தடி கொண்டு அடித்து ஒலி எழுப்ப வேண்டும் எனக் கருதிய முருகன் ஒரு தடியைத் தேடுகிறார். அவர் கண்களில் தந்தையின் சடையிலுள்ள பிறைச்சந்திரன் படுகிறது. அதனைப் பறை அடிக்கும் கோலாகியகுணில் என எண்ணிப் பற்றி

இழுத்து உடுக்கையை அடிக்கிறாராம். இதனைப் பார்த்த எல்லோருடைய நெஞ்சும் திடுக்கிடுகிறதாம். இவ்வாறு திருவிளையாட்டி பற்றிய பெருமானே! சிறுபறை முழக்குவாயாக என வேண்டுகிறார் கவிஞர் பெருமான்,

எந்தை பிரான்ஒரு கைக்கண் தமருகம்
இது பறை; குனில்மேயது
எவ்விடம் என்று சடாடவி தேடி,
இலங்கும் இளம்பிறையை
நிந்தை இலாக்குவில் என் றுகை கொண்டு.
நெடும்புவ னம்பலவும்
நெஞ்சு அழை க்கென, வெற்றி முழக்கம்
நிகழ்த்து நிகழ்ச் சியனே (சிறுபறை.6)

(தமருகம்-உடுக்கை. குணில்- பறையடிக்கும் கோல்.) எவ்வளவு பொருத்தமான கற்பனை!

இந்தக் கற்பனை சிறுதேர்ப் பருவத்தில் வேறொரு வடிவம் பெறுகிறது. குணிலைத் தேடும் முருகப்பெருமான் அருகே விளையாடிக்கொண்டிருக்கும் விநாயகரின் கையிலுள்ள ஒற்றைக் கொம்பைப் பார்க்கிறார். இது சரியாக இருக்கும் எனக் கருதி அந்தக் கொம்பைப் பிடுங்குகிறார். விநாயகர் விட்டு விடுவாரா? அவரும் எதிரே இழுக்கிறார். கலகம் முழ்கிறது. அன்னை பார்வதி வந்து சடையிலுள்ள பிறையை எடுத்து முருகனிடம் கொடுத்துச் சமாதானம் செய்கிறார். இந்த அழகான கற்பனை நமக்குச் சிவப்பிரகாசரை மீண்டும் நினைவூட்டுகிறதன்றோ?

ஆக்கம் பெருந்தொழில் அமைந்த ஒரு தமருகம்
அவாவுபறை என்றுளம் கொண்டு.
அன்னதை அடித்திடல் கைக்கொளும் குணில் தேடி.
அருகுவிளை யாழநின்ற
தாக்கும் திறல்க்களிற் றொருகர தலக்கோடு
தனைஉறப் பற்றி, ஈர்க்கத்
தவாவலி கொள் அக்களிறு எதிர்பற்றி ஈர்க்கத்
தழைந்திடு கலாம் உலர்ந்து.

வாக்கும் சுவைத்தேறல் மாலைக் குழல்த்தாய்
வயங்குற நடுப்புகுந்து -
மறை ஓதி மம்தேடு வெளிப் பிழைக்குணில்
வயங்கக் கொடுக்ககூஉவகை
தேக்கும் திறல்க்குக விடைக்கழி யுடைக்குழக
சிறுதேர் உருட்டியருளே!

'(சிறுதேர். 4)

இத்தகைய இலக்கியச்சுவை மிக்க கற்பனைகளும். கற்போருக்குக் களிப்பூட்டும் கனிதமிழ்ச் சொல்லாட்சிகளும். இன்பம் தரும் இயற்கை வர்ணனைகளும், பல புராண வரலாற்றுச் செய்திகளும் நிறைந்து, திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ் தமிழில் உள்ள மிகச் சிறந்த ஒரு சில பிள்ளைத்தமிழ் நூல்களில் முன் வரிசையில் இடம் பெற்றுத் திகழ்கிறது.

மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் அமுத வாக்காக முருகப் பெருமான் பற்றி இன்று கிடைக்கும் சிற்றிலக்கியங்கள் இரண்டு மட்டுமே. இப்பிள்ளைத் தமிழும் திருத்துருத்திச் சுப்பிரமணியர் பதிகமும் அவை அது பத்து இரட்டையாசிரிய விருத்தங்களாவியன்ற தொரு நூல்; 61 எனினும் பக்திச்சுவையும் தமிழ்ச்சுவையும் மிக்க சிற்றிலக்கியம்.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு மிக நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ள திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ் இறையன்பர்களுக்கு மட்டும் அல்லாமல் தமிழ்ச் சுவைஞர்களுக்கும் தலைசிறந்த இலக்கிய விருந்தாக அமைந்துள்ளது என்பது ஒருதலை .

தேனாட்சிக் கொன்றைச் சிவபெருமான் தான்மறவா
மீனாட்சி சுந்தரனாம் மேன்மைஉளான்- வேனாட்சி
தண்டமிழே எய்தச்செய் சாமிநா தற்றந்தோன்
விகடகவி கற்க விழை.

5. அன்புடைமை

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு

அன்பின் வழிநின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பாவது ஆகும். அன்பில்லாது வாழும் மனிதன் எப்படிப்பட்டவன் என்றால் தமது உடம்பின்மேல் தோலால் போர்த்தப்பெற்ற உடம்பைப் பெற்றவன் ஆவான் என்பார் திருவள்ளுவர்.

அன்பு என்பது உள்ளத்தில் உண்டாவது. அது உணர்ச்சி பெருகவேண்டுமானால் பலகாலும் கடவுளைப் பணிந்து வழிபடவேண்டும். 'அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே' என்பது திருமந்திரம். அன்பே சிவம். ஆதலின் சிவபரம்பொருளை அன்பினாலே அடைய முடியும். இறைவர் அன்பு வலையில் அகப்படுவார். அவர் அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை; அன்பெனும் குடில் புகும் அரசு; அன்பெனும் கரத்தமர் அமுது; அன்பெனுங் குடத்துள் அடங்கிடும் கடல். ஆகவே அன்புநெறி ஒன்றே நம்மை இறைவன்பால் எளிதில் சேர்க்கும்.

இறைவனை அடைவதற்கு சரியை மூலமாக எத்தனையோ வழிபாடுகளை எல்லாம் செய்கின்றோம். அவையெல்லாம் அன்பிற்கு நிகர் ஆகா. தானம், தவம், சமாதி நிலையில் ஞானம் ஆகியவை அன்பு வழிக்கு பிறகே. 'ஆரேனுங் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண் ஆரேனுங் காணா அரன்' என்பது திருக்களிற்றுப்படியார் வாக்கு.

திருவள்ளுவர் அன்பின் மேன்மையைப் போற்றவே அன்புடைமை எனும் ஒரு அதிகாரத்தைப் படைத்துள்ளார். அன்பு மனத்திலே இருந்தால் அதனைப் புறத்திலே பிறர் அறியாமல் அடைத்து வைக்கும் தாழ் ஏதாவது உலகில் உண்டோ - என்பார் வள்ளுவர்.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்
ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்.

இத்தகைய சிறந்த அன்பில் எவரும் தமக்குச் சமானமின்றித் திகழ்ந்தவர் கண்ணப்ப நாயனார். அன்புநெறியில் தலைசிறந்து நின்றவரும்,

செழுமலர்க் குருந்தின்கீழ் அன்புக்கடலைப் பருகியவரும், அன்புடன் அழுதழுது என்புருகி மணிவாசகம் புகன்றவரும் ஆகிய மாணிக்கவாசகர், கண்ணப்ப நாயனரைப் பற்றிக்கூறும் திறம் கூர்ந்து நோக்கத்தக்கது.

'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்னப்பன் என்ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி வண்ணப்ப பணித்தென்னை வாவென்ற வான்கருணைச் சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி''

பக்தி என்பதும், அன்பு என்பதும் ஒரு பொருளையே குறிக்கும் சொற்கள். 'ஆன பயபக்தி வழிபாடு'' என்ற அருணகிரிநாதரின் திருவாக்கின் ஆழத்தையும் அருமையையும் ஊன்றி அனுபவிக்க வேண்டும்.

அன்பு என்பது ஒரு மனிதன் துன்பப்படும் பொழுது அவனது துன்பத்திற்கு இறங்கி உதவுவது மட்டும் அன்பல்ல. பிற உயிர்களிடத்தில் கருணை காட்டுவதும் அன்பு ஆகும்.. அதைத் தானே வள்ளல் பெருமானும் கூறினார். ''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார்'. அவர் காலத்தில் வாழ்ந்த வண்ணச்சரபர் உயிர்கள் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார்.

''மாடாள்வார் உழுதுமிக வருந்திட்ட பயிரெல்லாம்
வாடாது விளையும் வண்ணம் மழைபொழியப் புரிவாயே''

என்றும்.

''மாநிலத்து மிடிதீர மழைபொழியப் புரிவாயே ''

என்றும்

'பாரதனிற் பல்லுயிரும் பசிநோயால் தளராமல்
வாரணத்தின் துதிக்கைபோல் மழைபொழியப் புரிவாயே'

என்றும் வேண்டினார்.

ஏன்? உயிர்கருணைதானே, இறைவனை அடையும் நெறிக்கு முதற்படி? இந்த முதற்படியே இல்லையானால் மனிதன் உயர்நிலையாகிய ஞானத்தை எப்படி அடைய முடியும்.

பிறரிடத்தும், ஏனைய உயிர்களிடத்தும் அன்பு என்ற ஒன்றை எப்படிக் காட்டவேண்டும் என்றே வாழ்ந்தவன்? திண்ணராகிய கண்ணப்பர். வேட்டையாடுவதை மட்டுமே தொழிலாகக் கொண்டவன். அவன் உள்ளத்திலே ஒரே நாளில் அளவிடாத மாற்றம் ஏற்பட்டது. சிவபெருமானின் கண்ணிலிருந்து குருதி வந்தபொழுது எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் தமது கண்ணை இறைவனுக்கு கொடுத்து அதன்மூலம் தன் அன்பை வெளிப்படுத்தினானே அதுதானே அன்பின் உயர்நிலை வெளிப்பாடு ஆகும். அதைத்தான் சேக்கிழார்.

'அவனுடைய வடிவெல்லாம்
நம்பக்கல் அன்பென்னும்
அவனுடைய அறிவெல்லாம்
நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயல் எல்லாம்
நமக்கு இனியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறு
அறிநீ என்றருள் செய்வார் ''.

என்றார்.

உருகிய அன்பு ஒழிவின்றி நிறைந்த அவன் வாயினிற் கொணர்ந்து உமிழும் நீர் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் புனிதமானது. அதனால் தானே இறைவன் அவனுடைய வடிவம் முழுவதும் நம்மிடத்து வைத்து அன்பு என்றார்.

'அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்'' என்பார் திருமூலர். அன்பின் முதிர்ச்சி அருள் . ' அருள் என்னும் அன்பு ஈன்குழவி'' என்பார் திருவள்ளுவர். இவ்வுலகில் மிக இனிமையானது எது என்றால் எல்லா உயிர்களிடத்தும் அன்புகொண்டு போற்றி வாழ்தலே மிக இனிது. அன்பே சிவம்.

6. சிரவைக் கந்தசாமி சுவாமிகளின் திருக்குறள் ஆட்சி

தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் தமிழில் உள்ள பக்தி இலக்கியங்கள் அத்தனையையும் ஆழமாகப் பயின்றவர். அவற்றைத் தவிரத் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஆணிவேராகவும் தமிழ் இலக்கியத்திற்கு மணிமகுடமாகவும் விளங்கும் திருக்குறளின்பால் பேரீடுபாடு கொண்டவர் அதனைப் பொதுமறை என்றும் தமிழ்மறை என்றும் தம் படைப்புகளில் பாராட்டுபவர். இவருடைய நூல்களுள் திருக்குறள்ச் சொற்றொடர்கள், திருக்குறளின் பகுதிகள், முழுத்திருக்குறள்கள், திருக்குறள்கருத்துக்கள், அந்நூலின் தாக்கம் பெற்ற செய்திகள் என பரவலாகக் காணக்கிடைக்கின்றன. அவை அனைத்தையும் திரட்டித் தொகுத்தால் ஒரு நூல் ஆகிவிடும் இங்கு ஒரு சோற்றுப்பதமாக மிகச் சில நூல்களில் இடம்பெற்றுள்ள திருக்குறட்செய்திகள் மட்டும் தொகுக்கப்பட்டுள்ளன.

சிரவைக் கந்தசாமி சுவாமிகள் பக்தமான்மியப் பெருங்காப்பியம், மூன்று தலபுராணங்கள், ஆறு பிள்ளைத்தமிழ்கள், ஓர் அகப்பொருட்கோவை, கலம்பகம், சிலேடைவெண்பா, ஏழு யமக அந்தாதிகள், இருபதுக்கு மேற்பட்ட மாலைகள், என மொத்தம் 14500 செய்யுள்களுக்கு மேல் இயற்றியுள்ளார். இவர் அறிஞர்களால் கொங்கு நாட்டுக் கச்சியப்பர் எனப் போற்றப்படுகிறார். இலக்கிய நெறியில் கொடை நெறிப் புலவர் இவர். இப்பெரும்புலமைச் சுவாமிகளின் சில பனுவல்களில் இடம்பெற்றுள்ள திருக்குறள்க் கருத்துக்களைக் காண்போம்.

சுவாமிகள் திருக்குறளை மறை(பே.க.28, அன்.பு.நாட்டுப் 46) சத்துவத் தொன்மறை (பச்.பி.தாலப்.2), விலை இலாத் தமிழ்மறை (அன்.புரா. தலோத். 61), மறைமொழி (கா.புரா.), இயல்(பே.சு.100) எனப் போற்றுகிறார்.

வள்ளுவப் பெருமான் இல்லற இயலில் மனைவியின் மாண்பை விளக்கும் போது,

''இல்லதுஎன் இல்லவள் மாண்பானால்'' (53)

என்கிறது. இல்லத்தலைவி தகுதியுடையவளாக இருந்தால் அங்கு எல்லா நலங்களும் செழித்திருக்கும்; இல்லை என்பதுதான் இருக்காது என்பது இதன் கருத்து. மேலும் அவளின் முதன்மையான சிறப்பாக.

''தற்காத்துத் தற்பெருமை பேணி தகை சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' (56)

எனவும் கூறுகிறார். இந்த இரண்டு குறள்களையும் உள்வாங்கிக் கொண்ட சுவாமிகள் தம் கௌசைப் புராணத்தில் கொங்கு நாட்டு புலவரின் இயல்புகளாக வருணிக்கும் போது,

இற்புரந்து தம் கேள்வர்கரம் உயிர்க்கு மெய் இரண்டாய்ச்
சொற்புரந்து அறம்பெருக்கு, செல்வியில் துலங்கு
பொற்பும் பூமிநேர் பொறுமை ஆர் குளங்களும்
பொருந்தும்
கற்பு மங்கையர் பாரில்வாழ் கற்பகம் கரும்பார்
(கௌ.புரா 79)

என்கிறார்.

தற்காத்து என்பதைக் குடும்பத்தின் நற்பெயரைக் காப்பாற்றி என்றும் கருத்தில் இல்ப்புரந்து என்கிறார். தற்கொண்டான் பேணி என்பதை அவன் உடலுக்கு உயிராக கருத்து என்கிறார். சொற்காத்து என்பதை அப்படியே பரியாயச் சொல்லால் குறிக்கிறார். கேட்டதை எல்லாம் கொடுக்கும் கற்பகமரம் போன்றவள் வீட்டில் இருப்பவள் என்பது, ''இல்லது என் இல்லவள் மாண்பானால்'' என்பதை உவமை வாயிலாக உணர்த்துகிறது. இந்தப் புராணச் செய்யுள் ஒன்றில் இரு திருக்குறட்பாக்களின் தாக்கத்தைக் காண்கிறோம்-

தினை பனை என்பன சிறுமை பெருமைகட்குக் கூறும் அளவு ஆகும். இதனைத் திருவள்ளுவப் பயனில்,

''தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்''

எனக் காண்கிறோம். இது சுவாமிகளின் திருப்பேரூர்க் கோவையில்

''.................. சீவர்தம் மென்பணியும்
பனைப்பொருட்டாகக்கொள் பேளூர் கிறைவா'' (456)

என எதிரொலிக்கிறது.

ஒரு குளத்தில் செந்தாமரை, வெண்டாமரை ஆகிய இரண்டும் மலர்ந்துள்ளன. அவை இயல்பாக விரிதலை ஒன்றுக் கொன்று இகழ்ந்து சிரிப்பதாகத் தற்குறிப்பேற்றுகிறார் சுவாமிகள். செந்தாமரை வெண்தாமரையைப் பார்த்து உனக்கு என்னைப் போன்ற பெருமை இருந்தால் பிரமனும், இலக்குமியும் உன்னை விரும்பி ஏற்றிருப்பர். உனக்குத் தகுதி இல்லாததால் அவ்வாய்ப்பு அமையவில்லை என ஏளனம் செய்தது தக்கதாம், அதற்கு வெண்டாமரை செல்கமலத்தை நோக்கி, ''நீ உன்னை மிகச் செம்மையானவள் எனக் கருவம் கொள்கிறாயே அது தான் திருவள்ளுவரால் வெண்மை என்று சொல்லப்படுகிறது என எதிராகப் பரிகசிக்கிறது. பச்சைநாயகி பிள்ளைத் தமிழின் இரண்டாம் பாடலின் பகுதி வருமாறு.

அரும்பு உந்திய செங்கமலம்
அயல்தோய் வெண்கமலற்றினுக்கு,
எம்மைத் துணையும் பெருமை உண்டெனில்
முன் தோன்றும் பிரமன் இலக்குமியும்
விரும்பும்தரம் உண்டாம் அமையா விதியால்
தாழ்வு என்றிடலில் இதழ்
விளிம்பு வெளிநீட்டிடக் கண்டவெண்தாமரை,
சத்துவத் தென்மறை
தரும் புத்தி கொள் வள்ளுவர் வெண்மைத்
தகை தற்புகழும் செருக்குஎன்று
சாற்றல் அகத்து ஓங்கிவை சொல்?
எண்ணத்தந்தத் தவனம் காட்டிடலில''

இதில்

வெண்மை எனப்படுவது யாது எனில் நன்மை
உடையம் யாம் என்னும் செருக்கு (844)

என்னும் திருக்குறளைக் கலைமகளே மேற்கோள் காட்டுவதாகக் கூறியுள்ள சிறப்பு கவனிக்கப்பாலது

இவ்வாறு தேவர்களுக்கு எல்லாம் ஆசானாகிய திருக்குறளை மேல்வரிச் சட்டமாகக் கருதுவதாகச் சுவாமிகள் தம் காரைமடைப் புராணத்தில் அமைந்துள்ளார். இங்கு புகழின் இன்றியமையாமையை விளக்கும் திருக்குறளை எடுத்துக் காட்டி அதை மறைமொழி என அடையாளம் காட்டுகிறார்

''இசையதாம் எச்சம் பெறாவிடில் ஒருவனுக்கு
இகபரத் தினும்தீரா
வசையதாம் எனும் மறைமொழி சுரர்குரு
மனத்தில் எண்ணினன் ஆகி'' (258)

என்பது அப்பகுதி. இதில் ஆளப்பட்டுள்ளது.

''வசை என்ப வையத்தார்க் கெல்லாம் இசை என்னும்
எச்சம் பெறாஅ விடின் (238)

என்பதும் வள்ளுவம் ஆகும். இவ்வாறு கல்விக் கடவுளாகிய கலைமகளுக்கும் வானுலகப் பேராசான் ஆகிய வியாழனுக்கும் கூட வழிகாட்டியாக அமைந்துள்ள நூல் எனத் திருக்குறளைப் போற்றுகிறார்.

மழையின் சிறப்பைக் கூறும்போது சுவாமிகள் தம் காரைமடைப் புராணத்தில்.

ஊன்முகத்து உயிரைக் கூட்டி உணவினை அருந்தி மேலாம்
வான்முகத்தவர்க்கும் இன்பம் வழங்கி மண்ணுலகம் போற்ற
(நாட்டுப்படலம் 14)

என்கிறார் இது

''சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு'' (18)

என்றதன் மறுபதிப்பு ஆகும்.

பத்த மான்மியத்தின் ஒன்பதாவது பகுதியாக அமைந்துள்ள குசேலரின் வரலாற்றில் வறுமையின் கொடுமையைக் கூறும்போது,

''இடும்பை முற்றவும் தரும் கலிவாதைமிக்கு இயலும்''

என்கிறார், இது (குசேலர் கதி 10)

''நல்குரவு என்னும் இரும்பையின் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும் (1045)

என்பதனை அடியொற்றியதாகும்.

தவத்திரு கந்தசாமி சுவாமிகள் திருப்பேரூர்ப் பட்டிப் பெருமானைப் போற்றும் அகப்பொருட் கோவை ஒன்றையும் (477) கட்டளைக் கலித்துறைகளால் இயற்றியுள்ளார். அதில் கனவு நலிவு உரைத்தல் என்பது ஒரு துறை. அதாவது தலைவனைப் பிரிந்து வாழும் தலைவி கனவினில் அவனைப் பார்த்துக் கண்விழித்த உடனே அவனைக் காணாமல் வருந்துகிறாள் எனக் கூறுவது.

திருப்பேரூர்க் கோவையில் இதைச் சுவாமிகள்,

''.................. வெள்ளியங் குன்றின் மின்கண்
மூடிடு கால் இன்பம் மூடிடக் கூடும் முதல்வர் விழிப்பு
கடிகு கால் மறைத்து ஓடிடுவார் இஃது ஓர் அற்புதமே''
(244)

எனத் துறைப்படுத்துகிறார். இது திருவள்ளுவரால், தலைவி தூங்கும் பொழுது அவளுடைய தோள்மேல் இருக்கும் தலைவன் அவள் விழித்துக் கொண்ட உடனே உள்ளத்திற்குள் ஓடி ஒளிந்து கொண்டு விடுகிறான் எனக் கூறப்பட்டுள்ளதன் பிரதிபிம்பம் ஆகும். குறள் வருமாறு:

''துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்தர் அவர் விரைந்து.'' (1218)

சுவாமிகள் பல இடங்களில் திருக்குறட் கருத்துக்களை அப்படியே எடுத்து ஆளுகிறார்.

''தவமும் தவம் செய்துளார்க்கு ஆம் எனும் மறை'' (பே.க. 28)

என்புழி,

''தவமும் தம் உடையார்க்கு ஆகும்'' (262)

என்பதுவும்,

''செயற்கு அரியன செய்வார் பெரியார் எனும்
இயற்கு இலக்கியம்'' (பே.க. 100: 33-34)

என்னுமிடத்தில்

''செயற்கு அரிய செய்வார் பெரியர்'' (26)

என்பதுவும் இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டுக்கள் ஆம்.

''நிலத்தின் தன்மையால் நீர்குணம் காட்டல்போல்''
நேர்மை நலத்தின் மேலவர் சேர்க்கையால் வரும் எனும் ஞாயம்''
(அன்.புரா. 321)

என்னும் உவமை,

''நிலத்து இயல்பால் நீர் திரிந்தர் றாகும்; மாந்தர்க்கு
இனத்து இயல்பதாகும் அறிவு'' (452)

என்னும் குறளிலிருந்து பெறப்பட்டது ஆகும்

''ஏரினும் நன்றால் எருவிடுதல், கட்டபின்
நீரினும் நன்று அதன் காப்பு'' (1038)

என்னும் வள்ளுவர் வாக்கு சுவாமிகளின் கௌசைப் புராணத்தில்

''திரப்படுநல் உழுதொழிலில் சீர்த்திமிக்க தாகும் எழும்
பரப்பிடுதல்; அரிதல் மேன்மை பாதுகாப்பென்றுணர்ந்து
தரப்படுநீர் அளவறிந்து தகவிடுத்தும் பிகில்வடித்தும்
சுரப்பமை ஊக்குடன் முயலும் தொழிலினர் ஆயினர் களமா'' (99)

என இடம் பெற்றுள்ளது.

தவத்திரு சிரவைக் கந்தசாமி சுவாமிகள் தம் செய்யுள்கள் சிலவற்றில் முழுத்திருக்குறள் ஒன்றை அப்படியே அடக்குவதையும் ஒரு மரபாகக் கொண்டிருந்தார். அதற்கு எடுத்துக்காட்டாக

''ஒப்பிரவினால் வரும் கோடனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து (220)

என்பதனைத் தம் அன்னியூர்த் தலபுராணத்துள்,

''வாட்டம் அது ஒப்புரவினால் வரும் கேடு எனின் அஃது ஒருவன்விற்று, கோட்டக்கது எனும் மறைக்கு இலக்குக் கொண்டார்'' (61)

என அமைத்துக்கொள் என்பதையும்,

''பொருள் அல்லவரைப் பொருள் ஆகச் செய்யும்
பொருள் அல்லது இல்லை பொருள்'' (751)

என்னும் வான்மொழியை. திருப்பேரூர் கோவையுள்.

''பொருளல்லவரைப் பொருளால் செய்யும்
புகழ்ச்சிறப்பார்

என அடக்கியுருப்பதையும் காணலாம். இக் காரிகையில் வெண்பாவைக் கட்டளைக் கலித்துறை யாப்பில் அடக்குவதற்காக இடையில் புகழ்ச்சிறப்பார் என ஒரு சீர் பொருளுக்கு அடையாளம் பெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் நூல்களுள் சிலவற்றை மேலெழுந்த வாரியாக பார்க்கும்போதே அவற்றுள் தமிழ்பொதுமறையாம் திருக்குறளின் சிறப்பான பதிவுகளைப் அவற்றுள் காண முடிகிறது. சுவாமிகளின் மொத்தப் படைப்பில் திருக்குறளின் செல்வாக்கை ஆழமாக ஆராய்தல் ஒரு சிறந்த ஆய்வுக் களமாக அமையும் என்பது ஒருதலை.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அன்.புரா. தலோத் - அன்னியூர்த் தலபுராணம், தலோத்தாரணப்படலம்

கா.புரா - காரமடைத் தலபுராணம்

கௌ. புரா - கௌசைத் தலபுராணம்

பச். பிள். தாயப் - ஸ்ரீ பச்சைநாயகி, பிள்ளைத்தமிழ், தாலப்பருவம்

பே.க - பேரூர்க் கலம்பகம்

7. எல்லோரும் எல்லாம் பெறட்டும்

மனிதன் சாதாரணமாகத்தான் பிறக்கிறான். ஆயினும் அவனுடைய வளர்ச்சிக்குரிய கருவிகள் வாயில்கள் ஏராளம், ''வாய்த்தது நத்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின'' என்று தேவாரம் கூறும். மானுடம் வளர, வாழத் திருவள்ளுவர் காட்டும் நெறி, கற்கும் நெறி, ஆம் கற்க என்றார். கற்ற நூலின் கருத்துக்களின் வழி நின்று அறிவை வளர்க்க வேண்டும்.

அறிவுடையவர்க்கு அழகு என்ன தெரியும்' என்பதல்ல ; 'என்ன செய்யத் தெரியும் ''' என்பது தான். அதனால்தான் வள்ளுவர் அறிவைச் செயலுடன் தொடர்புடைய கருவியாக்கினார். 'அருவி அற்றம் காக்கும் கருவி'' என்றார் துன்பமும் துயரும் இயற்கையுமல்ல; நிலையானவையுமல்ல. அறிவினைக் கருவியாகக் கொண்டு துன்பத்தினை வெல்லவேண்டும். நல்ல நிறைவான பாதுகாப்பான மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அறிவு கருவியாகப் பயன்படுதல் வேண்டும். அறிவைக் கருவியாகக் கொண்டு பாதுகாப்பான 'வாழ்க்கை அமைத்துக் கொள்ளுதல் ஆகும். அறிவைக் கருவியாகப் பயன்படுத்த, வாழ்க்கையை இயக்க உந்து சக்தி ஒன்று வேண்டுமே. அந்த உந்து சக்தி எது?.

அந்த உந்து சக்திதான் ஊக்கம், ஊக்கம் உள்ளத்தைச் சார்ந்தது. சோர்வும், பயமும் ஊக்கத்திற்கு பகை. 'உள்ளம் உடைமை'' என்றார் வள்ளுவர். ஊக்கத்தின் வெளிப்பாடு முயற்சி; உழைப்பு முயற்சியை ஆள்வினை அறிவறிந்த ஆள்வினை என்பது திருக்குறள். அறிவறிந்த 'ஆள்வினையே ' ஆகும். அறிவறிந்த ஆழ்வினையே பயன் தரும்.

அறிவறிந்த அறிவின் மூலம் ஒவ்வொருவரும் பிறருக்குத் துணையாக இருக்க' வேண்டும். நாம் தக்கவர்களைத் துணை பற்றினால் எல்லா நலன்களும் உண்டாகும். தக்கார் யார் பெரியோரோ தக்கார் ஆவார். 'பெரியாரைத் துணை கொள் ''' என்பார் ஔவையார். பெரியோர் யார் செயற்கரிய செய்பவர்களே பெரியவர்கள்.

''செயற்கரிய செய்வார் பெரியர் '' என்பார் திருவள்ளுவர்.

பெரியோர்களைத் துணைகொண்டு அவர்களை நம்மவர்களாகக் கொண்டு வாழ்வதே மேலான தன்மை. அப்பெரியார்களுள் தலையாயவன் இறைவன் அவனையே பெற்றுள்ளனர். பட்டம் பெற்ற அளவு மனித உள்ளம் பண்பைப் பெறவில்லை . தந்தைக்கு விருப்பம் தமது மக்கள் நன்றாகப் படிக்க வேண்டும். தன்னைப் போல் பொருளுக்காக வேலை தேடி அலைய வேண்டாம். நன்கு படித்து நல்ல வேலைக்குச் சென்று கைநிறைய பொருள்தேட வேண்டும் என்று விரும்புகின்றனர். இன்றைய இளைஞர்களும் தமது பெற்றோர்களின் எதிர்பார்ப்பைப் போல நன்கு படிக்கின்றனர். படித்தபின்பு நல்ல வேலையைப் பெற்று வேறு மாநிலத்திற்கோ, வேற்று நாட்டிற்கோ சென்று விடுகின்றனர். பெற்றோர் நினைத்ததைப் பிள்ளையும் செய்து விட்டான்.

நமது முன்னோர்கள் தமது பிள்ளைகளைப் படிக்க வைக்கும்பொழுது நீ படித்த பின்பு நாட்டிற்கும், வீட்டிற்கும் நல்ல பிள்ளையாக இருக்கவேண்டும் என்ற பண்பாட்டைப் போதித்ததார்கள். அவர்களும் அப்படியே வாழ்ந்தார்கள். நமக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்த விடுதலை வீரர்கள் தாய்மண்ணே வணக்கம் என்று வணங்கி பிறரையும் தாய்மண்ணை வணங்கச் செய்தனர். இன்று நமது இந்தத் தாய் மண்ணில் பாரதத்தாயின் படித்த இளைஞர்கள் சிலர் தாய்மண்ணிற்கு வணக்கம் சொல்லி வேறு மண்ணிற்குச் சென்று விடுகின்றனர். இது இன்றைய நடைமுறை உண்மை.

இன்றைய எந்திரத்தன்மையுடைய வாழ்வில் மனிதனுக்கு மனஓய்வும் மனஅமைதியும் இல்லை. குடும்பத்தோடு செலவிடும் நேரமும் குறைவு. ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி அவசியம் அக்கல்வி வெறும் பொருளைத் தேடுகின்ற கல்வியாக இல்லாமல் அன்பையும், அறத்தையும் போதிக்கின்ற கல்வியாக இருத்தல் நலம். நமது முன்னோர்கள் வாழ்ந்த அமைதியான வாழ்க்கையே மனித வாழ்வின் பண்பட்ட நிலை ஆகும். அப்படிப்பட்ட அமைதியான வாழ்வு ஒவ்வொரு தனிமனிதனும் மீண்டும் அமைந்தால் இல்லறம் நல்லறமாக அமையும். ஒன்றுபடுவோம், ஒற்றுமையாய் வாழ்வோம், இல்லறம் நல்லறமாக அமைய அனைவரும் கூடிவாழும் வாழ்க்கை வாழக் கற்றுக் கொள்வோமாக.

8. குற்றம் இழைக்கத் தெரியாதவர் சான்றோர்கள்

கருணை என்பது ஒப்பற்ற ஒரு பொருள். அதனை எல்லோரும் உடையவர்களாக இருக்க வேண்டும். கருணையே வடிவமாகத் திகழ்ந்தவர்கள் அடியார்கள். அதனாலேயே அவர்கள் இவ்வுலகில் பேரும் புகழுடன் வாழ்ந்து வருகின்றனர்.

சிவஞானமே மெய்ப்பொருள். ஏனையவை எல்லாம் பொய்ப்பொருளே யாகும். பொய்ப்பொருட்கள் நாளை அழியும். அழிகின்ற பொருள்களைக் கொள்ளாதவர் மெய்ப்பொருள் நாயனார். திருநீறும் கண்டிகையும் புனைந்த சிவவேடத்தையே மெய்ப்பொருளாகக் கொண்டவர் அவர்.

சிவவேடம் புனைந்தவர் யாவரேயாயினும், அவர்களுடைய குணங் குற்றங்களை ஆராயாது அன்புடன் வழிபட வேண்டும். 'நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே'' என்பது சிவஞானபோதச் சூத்திரம்.

திருக்கோவலூரைத் தமது தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வருகிறார் மெய்ப்பொருள் நாயனார். சிவபெருமான் திருவடியில் என்றும் அன்புடையவர். சிவனடியார்களுக்கு கருத்தறிந்து ஏவல் செய்பவர். அரசியல் நெறியில் தந்த தருமத்தை நன்றாக காத்து வந்தார். வாள் வலியாலும், தோள் வலியாலும் சிறந்தவர். உரை திறம்பாத வாய்மையுடன் நடந்து கொண்டவர்.

தேசமும்,நாடும்,அரசும் வாழ்வது திருக்கோயில் வழிபாட்டில்தான் என்பதை நன்குணர்ந்த நாயனார், முப்போதும் திருக்கோயில் வழிபாடு புரிவார். சிவனடியார் திருவடியே சார்பாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார்.

தாம் தேடிய பொன், பொருள் மற்றுமுள்ள செல்வம் எல்லாம் சிவபெருமானது அடியார்க்கே உரியன என்று எண்ணிய உள்ளத்தோடு, அம்பலவாணரது அடியார்க்கு ஒரு

சிறிதும் குறைவற்ற அன்புடன், வேண்டுவன கொடுத்து அன்பு செய்து வந்தார்.

முத்தநாதன் என்ற மன்னன் இவருடைய வளமை மிகுந்த நாடு நகரங்களைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தால் பல முறை போருக்கு வந்தான். வின் முறை வல்ல மெய்ப்பொருள் நாயனாரால் பன்முறை தோற்று அகன்றான்.

முத்தநாதன் போர் புரிந்து நாயனாரை வெல்லுந் திறமையில்லாது வருந்தினான். அவனது அறிவு வேலை செய்யத் தொடங்கியது. அடியார் வேடம் பூண்டவர் மீது நாயனார் கொண்டிருந்த ஒப்பற்ற அன்பின் திறத்தை உணர்ந்தான். ஆதலால், திருநீரும் கண்டிகையும் புனைந்து, சிவனடியார் போல் சென்று நாயனாரைக் கொன்றுவர வேண்டும் என எண்ணினான்.

முத்தநாதன் மெய்யெல்லாம் நீறு பூசி, முடியினை முடித்து கட்டிக் கொண்டு பெரிய வாளை பட்டுத் துணியில் மூடி மறைத்துப் புத்தகம் போல் கட்டி ஏந்தினான். உள்ளம் கறுத்திருந்தாலும், வெளியே ஒளி செய்யும் விளக்கே என்று சொல்லும்படியிருந்தது அவனது தவக்கோலம்.

மனத்திலே வஞ்சனை வைத்துத் தவவேடம் போல் பெரிய வேடம் பூண்ட கருணை சிறிதுமில்லாத பாதகனாகிய முத்தநாதன், மெய்ப்பொருள் நாயனார் மாளிகைக்குள் சென்றான். முத்தநாதனை தத்தன் என்னும் காவலன் தடுத்தபோது நான் அரசருக்கு தருமத்தைச் சொல்லி உறுதி கூற வந்திருக்கிறேன், நீ நில் என்று கூறி தடையை ஏற்காமல் உள்ளே சென்றான்.

முத்தநாதனைப் பார்த்ததும் மெய்ப்பொருள் நாயனார் மகிழ்வுற்று 'மங்களம் பெருக; மற்றென் வாழ்வு வந்து அனைந்தது' என்று கூறி வரவேற்றார்.

அரசரே! உங்கள் சிவபெருமான் முன்னர் திருவாய் மலர்ந்தருளிய ஆகமநூல் ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறேன். இது மண் மேல் எங்கும் இல்லாதது, உனக்கு அதைக் கூற வந்தேன் என்றார் முத்தநாதன்.

அவன் கூறியதைக் கேட்ட மெய்ப்பொருள் 'அடியேனுக்கு இதனினும் உயர்ந்த பேறு வேறு உண்டோ ? எம்பிரான் அருள் செய்த இந்த மாறுபாடில்லா ஆகமத்தை அடியேனுக்கு உபதேசித்தருள வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்.

பொய்த்தவ வேடங் கொண்ட முத்தநாதன் சுவடியை அவிழ்ப்பது போல், அவிழ்த்து அதனுள் வைத்திருந்த வாளை எடுத்து மெய்ப்பொருள் நாயனாரைக் கொன்றான்.

கொன்ற அப்பாதகனை காவலன் தத்தன் வெட்ட முற்பட்ட போது நாயனார் தடுத்து அவனை நமது ஆட்களால் எவ்வித இடையூறும் ஏற்படாமல் பாதுகாத்து, நீ உடன் சென்று வழியனுப்பி விட்டு வா' என்று கட்டளை இட்டார்.

தம் அரண்மனை வந்தவர் தம்மிடம் போரிட்டு தோற்ற முத்தநாதன் என்று தெரிந்தபோதும் அவனது வேடம் கண்டு மகிழ்ந்தார். ஆகவே, அவரது பெருமைச் சேக்கிழார் 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது வென்றார்' என்று கூறுகிறார். 'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்' என்கிறார் நம்பியாரூரர். குற்றம் இழைக்கத் தெரியாதவர்கள் சான்றோர்கள்.

௯. யாதும் ஊரே - யாவரும் கேளிர்

யாதும் ஊரே என்று கொண்டால் மட்டும் போதாது. பலர் பல நாடுகளில் இன்று குடியேறி வாழ்கின்றனர். எவ்வூரும் நமது ஊர் எனும் அடிப்படையில் அல்ல. வாழ்க்கையின் நிர்ப்பந்தங்களே முக்கியக் காரணம். பல ஊர்களில் குடியேறி வாழ்பவர்கள் பலர் அந்த ஊரில் யாரோடும் உறவு கொள்ளாது தனித்தே வாழ்வர். அதனால் அது பிழைப்புக் கருதிய குடியேற்றமே தவிர உறவு பண்பாடு அடிப்படையில் தோன்றிய குடியேற்றம்மல்ல. மனித குலத்தைச் சார்ந்தவர்கள் அனைவரையும் இனம், மொழி, குலம், சமயம், சாதி, அரசியல் வேறுபாடியின்றி நேசிக்க வேண்டும். அன்பு கலந்து ஒன்றாகப் பழகவேண்டும். இன்றைய மனித வாழ்க்கை இயந்திரத்தன்மையுடைய வாழ்க்கையாக உள்ளது. இன்று ஒருவர் மற்றொருவருடன் பழகுவதும்கூட நட்பிற்கோ அல்லது பண்பாட்டிற்காக அல்ல. தமது செயலை முடித்துக்கொள்ள வேண்டும் எனும் சுயநலத்திற்காக மட்டுமே பிறருடன் பழகுகின்றனர். வாழ்க்கையே வணிக மயமாகிவிட்டது. கணியன்பூங்குன்றன் காட்டும் பாதை 'யாவரும் கேளிர்'' என்பதாகும். மனிதகுலம் தமக்குள் காட்டிக்கொள்ளும் அன்பு வெள்ளத்திற்குத் தடையாக உள்ள சாதிகளை முற்றிலும் தகர்த்திட வேண்டும். அன்றே உண்மையான மனித குலம் தோன்றும்.

மனிதன் இயல்பில் கூடி வாழப் பிறந்தவன். 'கூடித் தொழில் செய் என்பான் பாரதி. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பது பழமொழி. ஆனால் மனிதன் பிரிந்தே வாழ்கின்றான். கூடிவாழ்தல் அல்லது நட்புடன் வாழ்தல் எதற்கு என்றால் சிரித்துப் பேசி பழகுவதற்கு மட்டுமல்ல அவனது குறைகள் குற்றங்களை சுட்டிக்காட்டி நெறிப்படுத்துவதற்கும் ஆகும், என்பார் தெய்வப்புலவர் வள்ளுவர்.

'நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு .

ஏன்? அறிந்தோ அறியாமலோ, தெரிந்தோ தெரியாமலோ மனிதன் தன்னலமே நாடும் பொல்லாத குணத்திற்கு

அடிமையாகிவிட்டான். அவனுக்குத் தன் உடைமை, தன்செல்வம் தனதுமகிழ்ச்சி ஆகியவைகளே மேம்பட்டுவிட்டன. இவைகளுக்கு எதிராக யார் இருந்தாலும் வெறுக்கிறான். வெறுப்பை நியாயப்படுத்த 'ஊர்' என்ற மகுடம் சூட்டுகின்றான். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது திருமந்திரம். 'எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம் என்றான் பாரதி. ஆனால் நாம் சாதி, மொழி இனப் பாகுபாடுகளைத் தோற்றுவித்து அதன் சந்து பொந்துகளில் தீமையைத் தந்தவர் இவர்; நன்மையைத் தந்தவர் அவர் என்று கூறிப் பிரிவினையை வளர்ப்பதோடு மட்டுமின்றி. மனித குலத்தின் கேளிர்ப் பண்பைக் கெடுப்பதோடன்றித் தீமையை எதிர்த்துப் போராடும் சக்தியையும் இழக்கின்றான். ஒருவர் மற்றொருவருக்குத் தீமை செய்யமுடியாது அதுபோலவே நன்மையையும் செய்ய முடியாது.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பதை அனைவரும் கூறுகின்றனர். அதற்கு அடுத்த வரிகள் பலருக்கு தெரியாது. தெரிந்த பலரும் அவ்வரிகளை சொல்வதில்லை அதுதான் மிகமிக முக்கியமானது. அவ்வரிகள் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பதாகும். நன்றும் தீதும் அவரவர் வாழ்வின் வழி விளையும் விளைவுகளே ஆகும். ஒரோ வழி பிறர் செய்வது போலத் தோன்றினாலும் பிறருக்குத் தீமையாய் இருக்குமாயின் காயும் தீமையாகவும், நன்மையாக இருக்குமாயின் தாம் மகிழ்ந்த நன்மையின் கைம்மாறாகச் செய்யப் பெற்றதேயாம். எங்ஙனம் ஞாயிறைச் சுற்றி உலகம் சுற்றுகின்றதோ அது போலவே அவரவர் செயல்களைச் சுற்றியே வாழ்வு வட்டமிடுகின்றது.

இன்று அறிவியல் வளர்ந்திருக்கின்றது. வளர்ந்த அறிவியல் நாடுகளை இணைத்திருக்கிறது. ஆயினும் எனது நாடு உனது நாடு என்ற வேற்றுமைப் பேச்சுக்கள் எல்லைத் தகராறுகள் ஒழிந்தா போயிற்று? இல்லையே. நாளுக்கு நாள் வளர்ந்து வரும் அரசியல் அருளியலை ஆட்படுத்தித் தாம் மேம்பட்டு நாட்டுக்கும் நாட்டுக்கும் இடையில், ஊருக்கும், ஊருக்கமிடையில், தெருவுக்கும் தெருவுக்குமிடையில், சமூகங்களுக்கு இடையில், சமயங்களுக்கு இடையில் வேலிகளைக் குறுக்குச் சுவர்களை எழுப்பிய வண்ணம்

இருந்து கொண்டிருக்கிறது. இந்த அவல நிலைமை படையைப் பெருக்கிப் பசியைத் தோற்றுவித்திருக்கிறது. கவலையைத் தோற்றுவித்து கண்ணியத்தை மறைத்திருக்கின்றது. எங்கும் சிறைமயம் கணியன் பூங்குன்றன் காட்டுகின்ற வாழ்க்கை முறையினை மேற்கொண்டால் இந்த அவல நிலை மாறும். அவர் யாதும் ஊரே என்று வாழவேண்டும் என்கிறார். யாதும் ஊரே என்ற பெருநெறி பிடித்து ஒழுகின் பகை ஒடுங்கும் ; போர் ஒழியும் மனித வாழ்வு சிறக்கும்.

10. சொல்லும் செயலும் ஒன்றே

துணையின் நன்மை செல்வத்தைக் கொடுக்கும் வினையினது நன்மை எல்லாவற்றையும் தரும்.

துணைநலம் ஆக்கம் தரும் வினைநலம் வேண்டிய எல்லாம் தரும்

என்பார் திருவள்ளுவர்

வினை என்பது ஒரு செயல். ஒரு செயலை (வினையை) இவ்வாறு செய் என்று சொல்லுதல் அனைவருக்கும் எளிது. ஆனால், தாம் சொல்லிய வண்ணம் அச்செயலைச் செய்து முடிப்பது என்பது அரியனவாகும்.

இதனை வள்ளுவப் பெருமான் வினைத்திட்டம் எனும் அதிகாரத்தில் குறிப்பிடும் பொழுது.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல் (664)

இராமன் பிரான் வீபிஷணனுக்கு சொன்ன சொல்படி இலங்கையை போரில் வென்றபின் கொடுத்தான். தான் சொன்ன சொல்லை நிறைவேற்றினான்.

தப்பாமல் வீடணற்குத் தந்தோம் இலங்கை எனச்
செப்பியது செய்தான் தினகரா – இப்புவிமேல்'

என்று தினகர வெண்பா நூல் கூறும்

மனிதனுடைய நற்குணங்களில் நனிசிறந்து விளங்குவது அடக்கம். அதைக்காட்டிலும் மேன்மையானது சொன்னசொல் தவறாமை.

பழங்காலங்களில் கிராமப்புறங்களில் ஒரு வழக்கம் இருந்தது ஒரு செயலலுக்காக ஒருவர் உறுதி கொடுத்தால் அந்த உறுதியில் இருந்து என்றும் அவர் தவறமாட்டார்கள் அதை பிறரிடம் கூறும்பொழுது அவன் வாக்குக் கொடுத்துள்ளான். அவன் அந்நிலையிலிருந்து மாறமாட்டான் அவனது வாக்கு சுத்தமானது. சொன்ன சொல் மாறாதவன் என்று உறுதியான

நிலை கிராமத்தில் ஒரு காலத்தில் இருந்தது. அதேபோல் வாக்குச் சீட்டு என்பதும் அந்த வகையிலே வந்தது. அரசியல்வாதிகள் தாங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியில் இருந்து தவறமாட்டார்கள் என்பதற்காகவே அவர்களைத் தேர்ந்தெடுக்கும் சீட்டுக்கும் வாக்குச்சீட்டு என்று பெயர் வைத்தனர்.

இன்று வாக்குச்சீட்டுக்குப் பதில் வாக்கு எந்திரம் வந்துவிட்டது. எந்திரத்தன்மையான உலகில் வாக்கும் போய்விட்டது. கிராமத்தில் உள்ள மக்களிடத்திலும் வாக்குச் சீட்டிலும், வாக்கு என்பது இன்று ஒரு கேள்விக் குறியாகவே உள்ளது.

நாம் ஒருவருக்கு ஒரு செயலை இத்தனை நாட்களில் முடித்துக்கொடுக்கின்றோம். என்று உறுதி அளிக்கின்றோம். அச்செயலைச் செய்து முடிக்க எத்தனை தண்டங்களும் , இடையூறுகளும் துன்பங்களும் நேரிட்டாலும் அச்செயலை நாம் முடித்துக் கொடுக்க வேண்டும். அதுதான் நாம் பிறருக்குக் கொடுக்கும் வாக்கின் உண்மையை நிலைநாட்டும்.

காந்தியடிகள் வெளிநாட்டிற்கு கல்விபயில சென்றார். அப்பொழுது அவரது பெற்றோர் அவரிடம் புலால் உண்ணாமல் அங்கு இருக்கவேண்டும். அப்படிச் செல்வதென்றால் அங்கு செல் என்று உறுதி பெற்றனர். தமது பெற்றோரிடம் தான் கொடுத்த வாக்குறுதியை இறுதி வரை காப்பாற்றினார். நாம் இலண்டனில் தாம் இருக்கின்றோம் நம்மையார் பார்க்கப் போகிறார்கள் என்று தனது நிலையிலிருந்து என்றும் அவர் மாறவில்லை. அதனால்தான் அவரை நாம் மகாத்மா என்று போற்றுகின்றோம்.

அவரது வெற்றிக்குக் காரணம் உறுதியான எண்ணம், இடையூறுகள் அடுக்காக வந்தபொழுதும் அதை தமது ஆத்ம பலத்தால் வென்றார். அதனால் தாம் எண்ணிய படி வாழ்ந்து காட்டினார்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின் - 666

- என்பது வள்ளுவர் வாக்கு

சொல்லும் செயலும் ஒன்றாக இருந்தால் வாழ்வில் வெற்றி கிடைக்கும்.

''பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே''

என்கின்றார் அப்பரடிகள்.

இறைவன் வேண்டுதல் வேண்டாமை இலாதவன். தனக்கு உவமை இல்லாதவன் அறவாழி அந்தணன். அப்பரமபதி பொதுவாக எல்லோருக்கும் அருந்துணையாக இருக்கின்றான். தன்னை நினைப்பவருக்கு பெருந்துணையாக இருந்து அருள் புரிகின்றான்.

இறைவன் ஆன்மாக்களுக்கு வரும் துன்பங்களை நீக்கி அவ்வப்போது ஆவனஅறிந்து செய்வான்

''கனத்த செந்தமிழால் நினையே தினம்
நினைக்கவும் தருவாய் உனது ஆரருள்
கருத்திருந்து உறைவாய் எனது ஆருயிர் துணையார்'

- என்கிறார் அருணகிரிநாதர்.

சகுனியைத் துணை பற்றினான் துரியோதனன் குலத்தோடு அழிந்தான். கண்ணபிரானைத் துணை பற்றினான் அர்ச்சுனன். எல்லா நலன்களையும் பெற்றான்.

ஆதலால் நாம் எப்போதும் பெரியவர்களைத் துணை கொண்டு நல்வழி நடந்தால் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும். ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பது போல் எல்லோருக்கும் எல்லாம் கிடைப்பதன் மூலமே ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் உருவாகும்.

தனிமனிதனும் அரசும் இனிய செல்வமும் நிதிதிரட்டும் புது வாயில்கள் காணவேண்டும். நிதியைக் கணக்கிட்டுத் தொகுக்க வேண்டும். தொகுத்த நிதியை தனிமனிதன் தன் குடும்பத்திற்கும், அரசு மக்கள் மேம்பாட்டுக்கும் ஆட்சிக்கும் வகுத்துச் செலவிட வேண்டும். இன்று உடனடியாக இல்லை ஆனாலும் எதிர்காலத்திலாவது எதுவும் இலவசம் இல்லை என்ற சமுதாயம் தோன்றி எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். அதன்மூலம் சமதர்ம சமுதாயம் உலகில் உருவாக வேண்டும்.

11. நல்லோர் நட்பு

நிலத்தைக் காட்டிலும் கடல் மூன்று மடங்கு பெரிது. கடலுக்கு இடையே உலகம் அழியாமல் இருப்பதற்குக் காரணம் நல்லோர்கள் வாழ்வதேயாம்.

மழை பொழிவதும் நல்லோர் பொருட்டென உணர்க. ''நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை'' என்று ஔவைப் பிராட்டியார் கூறுவார்.

இந்த நல்லோருடைய நட்புக் கிடைக்கப்பெறின் அதைக் காட்டிலும் பெரிய சிறப்பு நமக்கு வேறெதும் இல்லை.

தீயவர்கள் தீமை புரியினும் நல்லோர்கள் அவர்மீது கோபம் கொள்ளார். அறியாமையால் அவர்கள் இவ்வாறு செய்கின்றனர் என்று கருதி தீயோர்களின் அறியாமைக்கு பெரிதும் வருந்துவர். இவர்கள் தீயறிவு நீங்கி நல்லறிவு பெறட்டும் என்று அவர் பொருட்டு இறைவனை வேண்டுவர் நல்லோர் .

வாழையின் பூவும்,பிஞ்சும், காயும் கனியும் இலையும் தண்டும் மட்டையும் எல்லாமே மக்களுக்குப் பயன்படுகின்றன. எட்டி மரம் பழுத்தாலும் மக்களுக்குப் பயன்படுவதில்லை இதனைச் சிவப்பிரகாச அடிகளார் கூறுகின்றார்.

முனிவிலும் நல்குவ் மூதறிஞர் உள்ளக்
கனிவிலும் நல்கார் கயவர் - நனிவிளைவில்

காயினும் ஆகும் கதலிதான் எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை

நல்ல நூல்களைப் படிக்கப் படிக்கக் கற்போர்க்கு இன்பம் தரும். அதுபோல நல்லகுணமுடைய மக்கள் தம்முன் செய்த நட்பும் அவர்களுடன் பழகும் தோறும் இன்பம் தரும் என்பார் வள்ளுவப் பெருமான்.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு

நல்லோர்கள் எத்தனை துன்பமுறினும் அறநெறியினும் வழுவார். செய்யத் தகாதவற்றைச் செய்யார். சொல்லாத்தகாதன சொல்லார். நினைக்க ஒன்னாதவற்றை நினையார். புலி பெரும்பசி உற்றாலும் புல்லைத் தின்னாதல்லவா? இதுதான் நல்லோர்களின் பெருந்தன்மை. நல்லார் நல்லவற்றினும் ஒருபோதும் வழுவார்.

நல்லோர் நட்பு 'வளர்பிறை போல வழிவழிப் பெருகி'' என்று கூறும் குறுந்தொகை.

நல்லோர்கள் எத்தனை துன்பம் நேரினும் தங்களது தகுதியினின்றும் குறைபடார். சந்தனம் அரைத்தாலும் மணக்கும் அகில் புகைத்தாலும் கமழும், சங்கு சுட்டாலும் வெண்மையாகவே இருக்கும்.

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

என்பது திருவள்ளுவரது திருமொழி.

ஒருசமயம் பாண்டவர்கள் வனத்தில் வசித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவ்வனத்திற்கு கௌரவர்கள் தங்களது குடும்பத்துடன் பாண்டவர்களை அவமானப்படுத்த வேண்டும் என்று அங்கு வந்தனர். ஆனால், சித்திரசேனன் என்பவனாள் கௌவரவர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். இதை அறிந்த தருமன் தமது தம்பிகள் மூலம் அவர்களை மீட்டான். தருமன் கௌரவர்களை மீட்டு இனிது உபசரித்து நல்லுரை நல்கி ஊருக்கு அனுப்பி வைத்தார்.

ஆகவே, நல்லோர் தமக்கு இடர் விளைவிப்பார்க்கும் இனிமையே புரிவார்.

தேவர்கள் இனிய பாற்கடலில் மந்தரமலையை விடுத்து இடையறாது கடலைக் கலக்கித் துன்புறுத்தினார்கள். துன்புறுத்திய அமரர் இன்புறப் பாற்கடல் அமிர்தத்தையே தந்தது.

அதுபோல் நல்லோர்கள் தமக்குத் தீமை புரிந்தோர்க்கும் நன்மையே புரிவார்கள்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

- என்பார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்

நல்லோர் நட்பு நமக்கு நன்மையே நல்கும்.

12. சொல்லேர் உழவு

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை.

உழவு இந்த உலகை வாழவைப்பது மக்கள் எல்லோரும் ஏரின்பின் சென்று உணவை விளைவிக்கும் உழவனை நம்பியே, அவன் தரும் உணவை எதிர்பார்த்தே வாழ்கிறார்கள். அப்படி மற்றவர்களுக்கு உணவு தரும் உழவன் வாழ்க்கை துன்பமற்றதோ அமைதியானதோ அன்று. எத்தொழில் செய்யினும், உழவுத்தொழிலைச் சார்ந்தே உலகம் இருக்கும்.

உலகம் ஒரு தேர்போலச் சுழன்று கொண்டு இருக்கிறது. சுழல்வதற்கு ஆதாரமாக இருப்பது அச்சாணியாக அச்சும் அல்லவா? இந்த உலகத்தேரின் சக்கரம் சுழல அச்சாணியாக இருப்பவன் உழவன். அந்த அச்சு தான் பிறதொழில்கள் செய்வோரையும் தாங்குகிறது.

ஒரு செல்வந்தர் வீடு. பலதொழில் செய்து பொருளீட்டியவர். அவருடைய உதவிகளை எதிர்பார்த்துப் பலர் வந்துவாசலில் கூடியிருக்கிறார்கள். அவர் வீட்டு முற்றத்தில் அமர்ந்திருக்கிறார்கள். நிழலில் இருப்பு எப்படி வந்தது? அந்த நிழல் தான் எப்படி வந்தது? நெல்லின் நீண்டகதிர் நிழலில் வேர்வையைச் சிந்தும் உழவனின் கருணையில் வந்தது என்கிறார் வள்ளுவர்.

பலகுடை நீழலும் தங்குடைக்கீழ் காண்பவர்
அலகுடை நீழலவர்

இரந்துண்டு வாழ்வாரும், நாடு புரந்துண்டு வாழ்வாரும் உழவு என்னும் மையத்தை வைத்தே இருக்கிறார்கள். உழவர்கள் தம்மளவில் பெருமை மிக்கவர்கள். தம் தேவைகளுக்காக யாரிடமும் போய்க் கையேந்தி நிற்கமாட்டார்கள். தங்கள் உணவைத் தங்கள் கையில் செய்து பிழைக்கும் இயல்புடையவர்கள். கை செய்து ஊண் மாலையவர்.

இரவார் இரப்பார்க்கென்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்

ஆனால் தம்மைத் தேடிவந்து இரப்பவர்க்கு மறைக்காமல், கேட்டதைக் கொடுக்கும் கருணை மிக்கவர்கள். இத்தகைய உழவர்கள் தன்னலம் கருதாதவர்கள். தாங்கள் கையில் பிடித்திருக்கும் ஏர்முனையை எப்போதும் விட்டுவிடமாட்டார்கள். எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் மேழி பிடித்த கை மடங்காது. மண்ணைப் பிசையாமல், மாட்டைத் தொடாமல், பயிரைப் பாராமல் அவர்களால் இருக்கமுடியாது. ஒரு வேளை அது நடந்துவிட்டால்? அவர்கள் துன்பம் தாங்காது கையை மடக்கிக் கொண்டால் உலகத்தார் விரும்பும் பொருள்களை நாங்கள் விரும்பாத மேன்மை உடையவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் துறவிகள் கூட ஒருகணமும் வாழமுடியாது. ஏனென்றால் விருந்தோம்பித்தானுண்ணும் இல்லறத்தான் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என் பார்க்கும் நிலை

இப்படி உழவரின் இன்றியாமையைச் சொல்லிவரும் பேராசான் வள்ளுவர் இருபாக்களில் வேளாண்மை செய்வதைக் குறிக்கிறார். ஒரு நல்ல உழவன் பருவம் தவறாமல் பார்த்துக் கொள்வான் . இது நல்லதே செய்யத்தக்கதே என்றாலும் மண்ணுக்கும் ஓய்வு தேவையல்லவா? மணி நீருடைய மண் தான் இழந்த வலிமைபெற பருவத்தில் ஒரு சிலமாதம் மண் நன்றாக சுருங்கி ஓய்வு கொள்ளுமாறு விட்டுவிடவேண்டும். அப்படிச் செய்தால் ஒருகைப்பிடி அளவு எரு கூடப் போடவேண்டாம். காய்ந்த மண்ணில் சத்துக்கள் செறிந்து இருக்கும். நீர் பட்டவுடன் விதை நன்றாக முளைக்கும்.

ஓர் உழவன் தன் தொழிலில் செய்ய வேண்டிய நான்கு நிலை பற்றி வள்ளுவர் வலியுறுத்துகிறார். ஒன்று நல்ல தகுதியான ஏர்கொண்டு மண்ணுக்கு ஏற்பவும் பயிருக்கு ஏற்பவும் நன்றாக உழவேண்டும். இரண்டு முளைத்த

செடிகளுக்கு உரிய காலத்தில் உரமிடுதல் அவசியம். மூன்று பயிர் வகைகளுக்கு ஏற்ப நீர்பாய்ச்சுதல். நான்காவது விளைந்த பயிரை விலங்கு, பறவை, நோய், மனிதரால் பாதிக்கப்படாதவாறு காத்தல். பயிர்காப்புத்தான் உழவனின் வருமானம் சுருங்காமல் காக்கும். ஏர் - நீர் - காப்பு என்ற அழகு வரிசை மண்ணின், பயன் , உழவனின் சீர்ப்பட்ட உழவைக் காட்டும்.

ஏரினும் நன்றால் எரு இடுதல் இட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு

உழவன் தினந்தோறும் சென்று நிலத்தைப் பார்க்கவில்லை என்றால் நிலமும் அவனை வெறுத்து ஒதுக்கும். சோம்பி இருக்கும் உழவனைப் பார்த்து நிலமகளும் சிரிக்கும்.

உழவன் சேற்றில் கால் வைத்தால் தான் நாம் தினமும் சோற்றில் கைவைக்க முடியும் உழவரைப் போற்றுவோம். உழவும் வாழ நாமும் வாழ்வோமாக.

13. பொங்கல் விழா

பொங்கல் என்றாலே புதுமணம் கமழ்வது. தமிழ்நாட்டில் விவசாய தொழில் சார்ந்த விழா பொங்கல் விழா என்று கூறலாம். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்றார் பாரதி. உயிர் வாழ்தவற்கு உணவு எவ்வளவு முக்கியம் யாவரும் அறிவர். உணவு உற்பத்திக்கு மழை, சூரிய ஒளி, மாடுகளின் உழைப்பு எல்லாம் இன்றியமையாதது. தை மாதம் பிறப்பதற்கும் முன்பே அநேகமாக அறுவடை எல்லாம் முடிந்துவிடும். ஆண்டு முழுவதும் தான் பாடுபட்டதற்கான பலனை உழவன் காண்கிறான். அந்த மகிழ்ச்சியில் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றான்.

உழவர்கள் தாம் உழைத்துப் பெற்ற புது அரிசியைப் பொங்கி இறைவனுக்குப் படைத்து வணங்குகின்றனர். ஆகவே இதை நன்றி செலுத்தும் திருநாள் என்றே கூறலாம். ஆதியில் மனிதர்களிலே ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கைக்காக மட்டுமே தொழில் புரிந்தனர். இந்த நிலை மாறி மக்கள் பலர் ஒரே இடத்தில் கூடித் தொழில் செய்யும் கூட்டுறவு முறை உழவர் தொழிலில் இருந்து தான் துவங்கியிருக்க வேண்டும். தொழில் துறையில் ஒருமைப்பாடு தோன்றிய புனிதநிலம் மருத நிலமேயாகும்.

தமிழகத்தில் ஆதிஉழவன் தான்பாடுபட்டு உற்பத்தி செய்த உணவுப்பொருளைத் தனக்காக மட்டும் வைத்துக் கொள்ளவில்லை. அந்த தானியத்தை ஆறுபங்காகப் பிரித்தான். ஒரு பங்கு அரசனுக்கு நாட்டின் நிர்வாகத்தை நடத்த வரி செலுத்தினான். ஒரு பங்கினை மூதாதையர்களுக்காக ஒதுக்கினான். மீதமுள்ள பங்கினை தெய்வத்திற்கும், விருந்தினர்களுக்கும் உறவினர்களுக்கும் தனது குடும்பத்துக்காகவும் ஒதுக்கினான்.

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்தான்
என்றாங்கு ஐம்புலத்தார் ஓம்பல் தலை

என்ற குறள் இதை விளக்குகிறது.

பொங்கல் திருநாளை அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் கொண்டாடும் திருவிழாவாகும்.

அறுவடைக்குப்பின் விழாக் கொண்டாடுவது உலகத்தின் பல பாகங்களிலும் உண்டு. அமெரிக்கர்கள் ஆண்டிற்கொருமுறை 'நன்றி செலுத்தும் திருநாள்' என்று கொண்டாடுகிறார்கள். தமிழர்கள், ஆடல், பாடல், இசை, ஆறு, கோயில்கள், நீர்நிலைகள் இவைகளில் பெரும் பற்றுடையவர்கள் என்பதற்கு இத்திருவிழா ஓர் அறிகுறியாகும்.

பொங்கலிட்டு அடுப்பிற்கும் நைவேத்தியம் செய்யும் வழக்கம் ஒருசில இடங்களில் உண்டு. பொங்கலைச் சிறிது அடுப்புக்கு அர்ப்பணித்து பின் பொங்கலை உண்ணும் வழக்கம் உண்டு.

குடும்ப பொங்கல் விழாவில் ஒவ்வொருவரின் ஆன்மீகப் பொங்கலும் உள்ளடங்கியிருக்கிறது. நமது உடம்பு ஒரு சிறிய குடிசை. அதனுள் நாம் (ஆன்மா) வாழ்கின்றோம். நம்மோடு ஐவர் (பொறிபுலன்) இலவசமாக வாழ்வதோடல்லாமல் நம்மை அடக்கி ஆளவும் பார்க்கிறார்கள். இவர்களை நாம் வென்று மதுரச் சோறு தினம் பொங்கிப் பகிர்ந்து உண்டு வாழ வேண்டும். இதுவே ஆன்மீகப் பொங்கல் ...

சங்க காலத்தில் அறுவடை காலத்தில் நல்மழை பொழிவும், நாடு செழிக்க பெண்கள் இந்நோன்பை கடைபிடித்தார்கள். தை முதல் நாளில் இந்த நோன்பை முடிப்பார்கள். நல்ல விளைச்சல் கொடுத்தமைக்காக பூமி, பகலவன், வேளாண்மைக்கு உதவிய கால்நடை போன்றவற்றிகு நன்றி தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்து வழிபட்டனர். இதுவே நாளடைவில் மூன்று தினங்கள் கொண்டாடும் பொங்கல் விழாவாக மாறியது. பொங்கல் பண்டிகையைப் பொறுத்தவரையில் எக்காலத்திலும் வேளாண்மையைத் தொடர்புடையதாகவே இருந்துள்ளது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

இலக்கிய காலத்தில் இவ்விழா இந்திரவிழாவாக கொண்டாடப்பட்டுள்ளது. மணிமேகலையில் விழாவரைக்

காதையில் இந்திரவிழா என்ற பெயரில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. அக்காலத்தில் இவ்விழா இருபத்தி எட்டு நாட்கள் கொண்டாடப்பட்டதாக வரலாற்றில் காணமுடிகின்றது. இன்று இவ்விழா மூன்று நாட்கள் மட்டும் கொண்டாடப்படுகின்றது.

இவ்விழா நாளில் பகைமை, பசிநோய் நீங்க இறைவனை முன்னோர்கள் வழிபட்டனர். மழைக்குரிய தெய்வாம் இந்திரனை வழிபட்டால் மாதம் மும்மாரிபெய்து பயிர் செழிக்கும் என மக்கள் நம்பினர். பிற்காலத்தில் சூரியன் பற்றிய அறிவு மக்களுக்கு வந்தவுடன் சூரியனுக்கு பொங்கலிடும் வழிபாடு தோன்றியுள்ளது.

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது தமிழர்கள் நம்பிக்கை பொங்கல் விழா மக்களால் இயல்பாகக் கொண்டாடப்படுகிறது. உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த பசுக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் விழா. உழவர்களுக்கு மழையின் உதவியால் ஆடிமாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டுவந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல்.

இந்த விழா நான்கு நாட்கள் நடைபெறுகின்றன. முதல்நாள் போகிப்பண்டிகை அல்லது இந்திரன் பொங்கல். 'பழையன கழிதலும் புதியன புகுவதும் வழுவென தகுமே' என்பதற்கேற்ப நமது உள்ளத்திலுள்ள பழைய எண்ணங்களை புதிய சிந்தனையை வளர்த்துக் கொள்ளுதல் எனலாம். இரண்டாம் நாள் பெரும் பொங்கல் இதை ''சூரியப் பொங்கல்'' என்றும் கூறுவர். மூன்றாம் நாள் ''மாட்டுப் பொங்கல்'' என்றும் ''பட்டிப்பொங்கல்'' என்று கூறும் வழக்கம் உள்ளது. நான்காம் நாள் ''கன்னிப்பொங்கல்'' அல்லது ''பூப்பொங்கல்'' என்றும் கூறுவர். தை மாதத் தொடக்கத்தில் சூரியன் தென்திசைப் போக்கி நிறுத்தி வடதிசை நோக்கி திரும்பும் தினத்தில் கொண்டாடப்படும் விழாவாகும்.

மங்களம் பொங்க மக்கள் உழைக்க வேண்டும். பஞ்சம் பட்டினியுமின்றி நாட்டுமக்கள் நலம் பெற்று வாழ வேண்டும். பொங்குக பொங்கல் வளமான நாட்டில் தான் முயற்சியும் முன்னேற்றமும் உண்டு. மக்கள் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று நீடினிது வாழ வாழ்த்துகின்றோம். அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

பஞ்சம் பறக்க என்று இன்பம் சுரக்க என்று
பழமை மடிக என்று பொங்குக பொங்கல்
புதுமை மணக்க, என்று பொங்குக பொங்கல்

14. திருமூலர் திருவாக்கு - ஊன் உடம்பு ஆலயம்

உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம் என்பது திருமூலர் திருவாக்கு.

அதில் ஊன் உடம்பு ஆலயம் என்ற இந்தச் சொல் பொருள் பொருத்தம் இல்லாத ஒரு தொடராகவே தோன்றும். ஏன்? நாம் உடலை இழிவானதொரு பொருளாகவே தொடர்ந்து நூல்களில் படித்து வந்திருக்கிறோம். திருமூலரே வேறு ஓர் இடத்தில்,

அழிகின்ற ஓர் உடம்பு ஆகும்.
ஒழிகின்ற ஊனுக்கு உறுதுணை இல்லையே (2140)

என்றுதான் பேசுகிறார். திருமந்திரத்திற்கு முன்னும் பின்னும் தோன்றிய நூல்கள் எல்லாம் உடம்பை இழித்துப் பேசுவதைக் கேட்டே பழகியிருக்கிறோம்.

மூத்து விளிவு உடையது; தீப்பிணி இருக்கை;
பற்றின் பற்றிடம்; குற்றக் கொள்கலம்;
புற்று அடங்கு அரவில் செற்றச் சேக்கை (மணி 4 115-117)

என்பது மணிமேகலை வரிகள்

ஊன் மிசை உதிரக் குப்பை ஒருபொருள் இலாத மாயம் (தேவார 78-2) என்பது சுந்தரர் தேவார வரிகள்

ஊற்றைச் சரீரத்தை ஆபாசக் கொட்டிலை ஊன் பொதிந்த
பீற்றல் துருத்தியைச் சோறுஇடும் தோற்பையைப் பேசரியை
காற்றில் பொதிந்த நிலையற்ற பாண்டத்தை
(பாட்டின் ஏகம்ப .27)

என்பார் பட்டினத்தார்.

ஊன்ஏறு எலும்பு சீசீ மலங்களோடே நரம்பு கசுமாலம்
ஊழ்நோய் அடைந்து மாசானம் அண்டும் ஊனோடு
உழன்ற கடைநாயேன் (திருப்புகழ் 1123)

என்பார் அருணகிரிநாதர்.

ஆலயம் என்றால் பசுக்களாகிய உயிர்கள் சென்று ஒன்றும் இடம் எனப் பொருள்படும். அழிகின்ற உடம்பு எப்படி அழியாத உயிருக்கு ஆலயம் ஆகமுடியும்? முடியாதல்லவா? எனவே ஊன்உடம்பு ஆலயம் என்பது பொருட்குற்றம் கொண்ட தொடர் என்றே தோன்றுகிறது.

ஆனால் இத்தொடர் இடம்பெற்றது பத்தாம் திருமுறை ஆகிய திருமந்திரத்துள்; இதனை அருளியவர் இணையற்ற சிவயோகி ஆகிய திருமூலர். அவர் கூறுகிறார் :

உள்ளம் பெருங்கோயில் ; ஊன் உடம்பு ஆலயம்;
வள்ளற் பிரானாற்கு வாய் கோபுரவாசல் ;
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம் ;
கள்ளப்புலன் ஐந்தும் காளாமணி விளக்கே.

மூலரின் திருவாக்கிலே சொல், பொருள் குற்றங்கள் ஏற்படவே வழி இல்லை. எனவேதான் இத்தொடரை ஆழமாகப் பார்க்க வேண்டியுள்ளது.

பலநூல்களும் உடம்பை இழிவுடையதாகக் கூறுவது உண்மைதான். அவை அவ்வாறு கூறக் காரணம் என்ன என்பதை ஆராய வேண்டும்.

இருவினைகளின் விளைவாக, அவ்வினைப் பயன்களைத் துய்த்துக் கழித்துவிட்டு இருவினையொப்பு முதலிய படிகளால் ஓர் உயிர் வீடுபேறு அடைவதற்காக, இறைவனால் வழங்கப்பட்டது உடம்பு. அதைப் பெற்ற உடல் அடிப்படைக் காரணத்தை மறந்துவிட்டு, ஐம்புல இன்பங்களுள் மூழ்கித் திளைத்தற்குரிய ஒரு கருவியாகவே உடலைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டது. உடல் இன்பக் கருவியாகவும் உலகம் இன்ப வேட்டைக் - களமாகவும் மாறிவிட்டதால் தான் அவை பழிக்கு உள்ளாகின்றன.

மாறாக உடல் உறுப்புக்களை எல்லாம் இறைபணியில் ஈடுபடுத்தி, உள்ளத்தில் எப்பொழுதும் அவனையே தியானித்து, மனம் மொழி மெய்களால் தூய்மை உடையோர் ஆகிவிட்டால் அந்த உள்ளத்தைக் கோயிலாக

கொண்டுவிடுகிறார். முக்கரணங்களையும் இறைவனுக்கே ஒப்படைத்து விட்டால் உடம்பு ஆலயமாகிவிடுகிறது.

இந்த இரசவாதம் இறைவனின் எல்லையற்ற கருணையால் நிகழ்கிறது. உறுதுணை அற்று ஒழிகின்ற ஊன் தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன் ஆகிய கடவுளுக்கு ஆலயம் ஆகிவிடுகிறது.

மாணிக்கவாசகர் இந்த மாற்றத்தைச் சிவபெருமான்புரியும் வித்தை என்பார்.

சிந்தனை நின்றனக்கு ஆக்கி நாயினேன்றன்

கண்இணைநின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி, வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி, வாக்கு உன்

மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்தவிச்சை (சதகம் 25)

என்பது திருவாசகம் - இந்த இறையருள் விச்சையை விளக்குவதுதான்

உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்;
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்;
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே. (25)

என்னும் திருமந்திரம்

உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என முன்னர்க் கூறிவிட்டதால் தான் இங்கே ஊன்உடம்பு ஆலயம் என்கிறார். இதனால் உடல் வந்த காரணத்தையும் அதன் பயன்பாட்டையும் தெரிந்துகொண்டு முக்காரணங்களாலும் இறைவனை வழிபட்டுப் பேரின்பம் எய்துவதே மானிடப்பிறவியின் பயன் என்பது தெளிவாகிறது.

15. பாரதியின் கல்விக் கொள்கை

தனிமனிதனின் வாழ்வை உயர்த்துவது பொருளாதாரம் அல்ல. கல்விதான் மனிதனின் வாழ்வை உயர்த்துகின்றது . இதைத்தான் தெய்வப் புலவர் வள்ளுவப் பெருமான் காலத்திலிருந்து பாரதியார் காலம் வரை வலியுறுத்தப்படுகின்றது .

கல்வி கற்றவன் புதுமையாய்த் திகழவேண்டும் என்ற எண்ணங் கொண்டவர் பாரதி. அதற்கு நாடு சில நெறிமுறைகளைப் பின்பற்றுதலே சிறப்பு என உணர்ந்து, நாட்டு ஒருமைப்பாடு, மொழிப்பற்றுக்கு முரண் ஆகாத நாட்டுப்பற்று. நாட்டுக்கல்வி என்ற மூன்று புதிய நெறிகளை வலியுறுத்துகின்றார்.

நாட்டுக் கல்வியினைத் தேசியக் கல்வி என்றே பாரதி குறிக்கின்றார். நாட்டில் வறுமையும் அறியாமையும் நீங்க வேண்டும். கல்வி என்பது மனிதனுக்கு தன்னம்பிக்கை உண்டாக்குவதுடன் தனக்கும், தன்னைச் சார்ந்தவர்க்கும் தேவையானவற்றைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும்.

'பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்று கூறுகின்றார்.

பாரை உயர்த்துகின்ற நல்ல கல்விச் சாலைகள் வீதிக்கு வீதி தோன்ற வேண்டும் என கனவு கண்டார் பாரதி. வீதிக்கு வீதி கல்வி நிலையங்கள் இன்று தோன்றிக் கொண்டுதான் உள்ளது . ஆனால் அக்கல்வி நிறுவனங்கள் நாட்டுப்பற்றையும். தாய் மொழிகல்வியையும் வலியுறுத்துக்கின்றார் தா என்ற அச்சம் நம்முள்ளே தோன்றுகின்றது . அது நியாயமானதே

பொருளாதாரத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் உயர வேண்டும் என்று படிக்கின்றார்கள் . ஆனால் கல்வி கற்பிக்கும் நிறுவனங்களே பொருளாதாரத்தில் உயர்ந்துள்ளதை நாம் இன்று பார்க்கின்றோம். இந்நிலை எப்பொழுது மாறும் இதை

மாற்றுவார்கள் என்று மக்கள் பார்த்துக் கொண்டுள்ளார்கள். இதை மாற்றக்கூடியவர்கள் யார் என்றால் மக்களாகிய நாம்தான் இந்த நிலையை மாற்ற வேண்டும். அதன் சக்தி நம்மிடம் மட்டுமே உள்ளது.

விழித்து எழுந்து உடனே செயல்படுங்கள். பாரையும், இப்பாரதத்தையும் உயர்த்த இன்றே புறப்படுங்கள். வெற்றி நமக்கு மிக அருகிலே, இல்லை மிகமிக அருகிலே உள்ளது என்று எண்ணித் துணிந்து செயல்படுங்கள்.

16. தற்பரம் ஒன்று

எத்தனை வடிவங்களிலும் எத்தனைப் பெயர்களிலும் எத்தனை விதமான வழிபாட்டு முறைகளாலும் போற்றப்பட்டாலும் பரம்பொருள் ஒன்றே என்பதுதான் பாரத நாடெங்கிலும் அறிஞர்களால் ஒப்ப முடிந்த முடிவு . 'ஏகம் சத்ர் விப்ராப் பகுதா வதந்தா என்னும் இருக்குவேத மந்திரத்திலிருந்தும், விநாயக தேவனாய், வேலுடைக் குமரனாய். நாராயணனாய், நதிசடை முடியனாய், பிற நாட்டிருப்போர் பெயர் பல கூறி, அல்லா யொறாவா எனத் தொழுது அன்புறும் தேவரும் தானாய். திருமகள், பாரதி உமை எனும் தேவியர் உகந்தவான் பொருளாய், உலகெலாம் காக்கும் ஒருவன்' என்றும் மகாகவிபாரதியின் அமுதவாக்குரை இக்கருத்தை எங்கும் பரக்கக் காணலாம்.

கடவுள் ஒன்றாக இருப்பினும் அது வழிபடுவோர்களின் பக்குவத்திற்கேற்பப் பலவாறாகப் பேசப்படுகிறது. இந்த நாமரூபம் பேதம் தொடக்கநிலைச் சமயிகளின் அறியாமை காரணமாகப் பூசலுக்கும் காரணம் ஆகிறது. கௌமாரத்திற்குச் சாத்திர நூல்களை அருளியுள்ள குருநாதராகிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், இந்த உண்மையை,

'தற்பரம் ஒன்றும் சமயம் பலவாறு
நிற்பதே உண்மை என்று உந்தீபற
நீங்கா நிறைவு அது என்ற உந்தீபற (சதக உந்தி 3)

ஒன்றுண்டு. அதைத்தானே ஒவ்வொருறுழல்
ஒவ்வொருவாறு
என்றும் புகன்று இகலு மோ
(மனுநெறித் திருநூல் 1183)

என்பன போன்று பல இடங்களில் விளக்கி அருளுகிறார்.

உயிர்கள் காலம், இடம், பண்பாடு, சூழ்நிலை போன்ற பற்பல காரணங்களால் வேயப்பட்டிருப்பதால் பல தெய்வ வழிபாடு - நடைமுறைக்குத் தேவையான ஒன்றாக ஆகிவிடுகிறது. தொடக்கத்தில் பல தெய்வங்கள் இருப்பதாகக்

கருதினாலும் ஆன்ம அனுபவம் முதிர முதிர, தெய்வம் ஒன்றே என்றும் பேருண்மை தானே விளங்கும் என்பது அவர் உபதேசம்.

கற்புடைய மடவார்போல் ஒன்றே தெய்வம்
கருது நர்க்கு இம்முறை போதும்; கலங்கி வாடும்
அற்பமதியால் பலதேவு உண்டு என்று எண்ணி
ஆராதித் தாலும் நன்றே; அறிவு முற்றிப்
பிற்படு நாள் அந்த நிலை விளங்கும்

(கௌமார முறைமை 1 - 69)

தமிழகத்தில் சிறப்பாகப் போற்றப்பெறும் அறுவகைச் சமயங்களும் ஏதோ கற்பனையாகப் படைக்கப் பெற்றவை அல்ல என்பதும், பரம்பொருளின் ஆறு சிறப்புப் பண்புகளே அறு சமயக் கடவுளர்களாக உருவகிக்கப்பட்டுள்ளன என்பதும் வண்ணச்சரபர் கூறும் வாய்மை.

' நானிலத்தில் பலவாறாம் நூ லில் ஒன்றும்
நவிலாத தாம் புதிய நாம ரூபம்
ஆலிஇலாப் பரம்பொருளுக் கமைத்து, நாடி,
அருள்பெறினும் சம்மதமே; ஆறு பேதம்
ஏன் நிகழ்த்தல் என்பரேல் முன்னோர்க் கவ்வாறு
இலங்கியதுண்டு. அவ்வழிதொட்டு: ஏறு வார்க்கே
உன் இகத்து மானிடர்க்கு நஞ்சாம் வண்ணம்
உஒற்றுவோன் உபாசனையே உயர்ச்சி ஆமோ.

பரம்பொருளின் பிரகாசம் பரிதிப் புத்தேள்
பல உலகும் ஒடுக்குகின்ற பண்பே ஈசன்:
கரந்து அவற்றை உதவுவது சந்தி; யாவும்
காப்பதுமால் அடியவர்தாம் கருதும் செய்கைக்கு
உரம் கொடுத்து முடித்திடுதல் கணேசன்: ஞான
உபதேசம் புரிந்திடுதல் ஒன்வேற் கையான்;
வரம் தரும்மட் டுபாசித்துப் பெற்றோர் இந்த
வகை அறிவார்; மற்றையார்க்கு வம்பாம் அன்றே.

(கௌமார முறைமை 2 - 98, 99)

இந்த அறுசமய வழிபாடுகளுள் சைவமும் கௌமாரமும் சற்றும் வேறுபாடின்றி மிக ஒற்றுமையாக இயங்கி வருகின்றன. சிவபரம்பொருளே தேவர்களின் துயர் நீக்க அறுமுகப்பெருமானாகத் தோன்றினார் என்பது எல்லாச் சான்றோர்கட்கும் ஒப்ப முடிந்த ஒன்று. சைவ சமயம் சிவ பெருமானை, 'பிறவா யாக்கை பெருமான்' என விதந்தோதுவதால்தான் கந்தக் கடவுளை சிவ பெருமானின் அவதாரம் என நேராகக் கூறும் மரபு இல்லாமல் போயிற்று. இல்லாவிட்டால் வைணவம் போன்றே கந்தாவதாரம் எனச் சொல்லிவிட முடியும். ''பெம்மான் முருகன் பிறவான் இறவான்'' என்ற அருணகிரிநாதரே ''உறை புகலியூரில் அன்று வருவானே!'' என்றது எவ்வாறு முரண்பாடற்றதோ அவ்வாறே இதுவும் முரண் அற்றதே ஆம். விரியுகடலென பெருகும்.

சிவ பெருமானும் முருகப்பெருமானும் ஒருவரே என்பதனைக் கச்சியப்ப சிவாச்சாரியார், அருணகிரிநாதர், திருமூலர், அப்பர், அகத்தியர், குமரகுருபரர், வள்ளலார். பாம்பன் சுவாமிகள் ஆகியோரின் திருவாக்குகளை எடுத்துக் காட்டிப் பெருமதிப்பிற்குரிய மருத்துவர். முனைவர். இராசமாணிக்கனார் அவர்கள் மிக மிக ஆழமாக நிறுவியுள்ளார். திருமிகு . இராசமாணிக்கனார் பல்துறை வித்தகர். இன்னமும் பற்பல மேற்கோள்களையும் விரிவுரைகளையும் எடுத்துக் காட்ட வல்லவர். எனினும் விரிவஞ்சி, மிக இன்றியமையாதனவற்றையும், தக்க பிரமாண நூல்களாக எல்லோராலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்படும் நூல்களிலிருந்து மட்டுமே தொகுத்து அமைதி கண்டுள்ளார்.

சமயக் காழ்ப்பை நீக்கி உண்மையான சமய சமரசத்தை உண்டாக்கும் இந்தப் பணி, காலத்தாலும் இடத்தாலும் மிகத் தேவைப்படுகின்ற ஒன்று. சமத்துவம் என்பது புறத்தில் மட்டும் இருந்தால் பயனில்லை; அகத்திலே இருக்க வேண்டும். அதற்கு இந்நூல் மிக்க பயன்படும். சமய அன்பர்களுக்கு மிகவும் நலம் பயக்கும்

இந்த அரிய நூலை யாத்தளித்த மதிப்பிற்குரிய உயர்திரு. எம்.சி. இராசமாணிக்கனார் அவர்கள் இறைவன் திருவருளாலும், குருவருளாலும் எல்லா வளங்களும் குறைவற

பெற்று நீடுழி வாழ வேண்டுமென்பதுடன், இத்தகைய கருத்துச் செறிவமைந்த அருமையான நல்ல நூல்கள் பலவற்றை இயற்றி நம் சமயத்திற்குச் சிறந்த தொண்டாற்ற வேண்டுமென எம் குருநாதரின் செங்கமலத் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

பரம சிவமும் பகைத்திட்ட
சூரனைப் பண்டொரு நாள்
திரமாய் அழித்த முருகனும்
ஒன்றுஆம் திறம் அதனை
உரம்ஆரும் மேற்கோள் பலவால்
நிறுத்தும் உயர் அறிஞன்
வரம் ஆர் இராஜமா ணிக்கப்
புலமையோன் வாழியவே...

17. காலம் தவறாமை

உலகத்தின் எல்லா இயக்கங்களும் குறிப்பிட்டதோர் காலவரையறைக்குக் கட்டுப்பட்டே இயங்குகிறது. பிரமாண்டப் பெருவெளியிலே கணக்கற்ற கோள்களும் மீன்களும் உலவி வருகின்றன என்பதை நாம் அறிவோம். இவையாவும் தமக்கென , அமைந்த பாதையையும் காலத்தையும் சற்றும் மாற்றிக் கொள்வது இல்லை. ஓர் ஒழுங்கிற்குக் கட்டுப்படாமல் இரண்டு கோள்கள் இயங்கி ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டால் எத்தனை பெரிய பயங்கரம் என்பதைக் கற்பனை செய்ய முடியுமா? இரண்டு புகைவண்டிகள் மோதிக்கொள்கிற விபத்தே எப்படி இருக்கிறது?

பலகோடி ஆண்டுகளாகப் பெருவெளியில் குறிப்பிட்ட ஒரே பாதையில் இவைகள் காலம் தவறாது இயங்குகின்றன. நமக்குத் தெரிந்து சூரிய குடும்பத்தின் நாள்களும் கோள்களும் காலம் தவறாது செயல்படுவது கண்கூடு. கோடைகாலம், மழைக்காலம், குளிர்காலம் போன்ற பெரும் பொழுதுகளும், காலை, பகல், மாலை, இரவு போன்ற சிறு பொழுதுகளும் கொஞ்சம்கூடத் தவறாமல் வந்து விடுகின்றன. இவை தடுமாறாமல் வருவதால் தான் நாம் காலத்தை வருடம் மாதம் நாள் என்றும், மணி, நிமிடம் என்றும் கணக்கிட முடிகிறது. பிரபஞ்ச இயக்கத்தின் இந்தக் கால ஒழுங்குமுறைதான் உயிர் வாழ்க்கைக்கு அடிப்படையாகும். இந்தக் கட்டுப்பாட்டை வேதங்கள் ருதம் எனக் கூறிப் போற்றுகின்றன.

இயற்கையைப் போலவே மனிதனுக்கும் காலம் தவறாமை என்பது மிக இன்றியமையாததொரு நற்பண்பு ஆகும். எந்த எந்தச் செயலை, அது எவ்வளவு சிறிய காரியமாக இருந்தாலும் சரி, எந்த எந்த நேரத்தில் செய்யவேண்டுமோ அந்த அந்த நேரத்திலேயே தவறாமல் செய்வதுதான் காலம் தவறாமை ஆகும். இந்தக் காலம் தவறாமல் செய்யும் பழக்கம் தான் சரியாகத் திட்டமிடவும், பதட்டமின்றி எடுத்த காரியத்தை நிறைவேற்றவும் அடித்தளம் எனக் கூறினால் மிகை ஆகாது. நன்றாகத் திட்டமிட்டு, உரிய காலத்தில் பதட்டமின்றி செய்யப்படும் செயல் வெற்றிபெறத்

தடை ஏது? அதனால் காலம் தவறாதவன் நிச்சயமாக வெற்றிபெறுகிறான். மேல் நாட்டார் தம் உலகியல் வெற்றிகளுக்குக் காலம் தாழ்த்தாமை (பங்கச்சுவாலிடி) என்னும் பண்பிற்கு முதலிடம் தருகின்றனர்.

காலை 7.30 க்கு விமானம் புறப்படுகிறது என்றால் உரிய நேரத்திற்குச் சற்று முன்பே விமான நிலையத்திற்குச் சென்றுவிட்டால்தான் பதட்டமில்லாமல், இயல்பான மன நிலையில் பயணத்தைத் தொடங்கலாம். அவ்வாறே அடுத்த மாதம் முதல் தேதிக்குள் ஓர் ஆவணம் தலை நகரத்திற்குச் சென்றடைய வேண்டுமென்றால். எதிர்பாராத அஞ்சலகத் தாமதத்தை எதிர்நோக்கி இரண்டு நாள் முன்னதாக அனுப்பிவைப்பதே அறிவுடைமை ஆகும். சரியாக அன்று போய்ச் சேர்ந்தால் போதும் என அலட்சியமாக இருந்தால் ஏதோ காரணத்தால் அந்த ஆவணம் சென்றடையாவிட்டால் ஏற்படும் விளைவுகள் மிக வருத்தம் தருவதாக அமையலாம். ஒருவருடைய கல்வி வாய்ப்போ , வேலை வாய்ப்போ , பதவி உயர்வோ , வெளி நாட்டுப்பயணமோ கை நழுவி விடலாம். எனவே எந்தச் செயலிலும் காலம் தவறாமல் இருப்பது பண்புடைமை மட்டும் அன்று அறிவுடைமையும் ஆகும் என்று தெரிகிறது.

ஒருவனிடத்திலே காலத்தைக் கடத்தும் நிலை எதனால் ஏற்படுகிறது. முக்கியமாக நான்கு காரணங்களைக் கூறலாம். இப்போது என்ன அவசரம்? இன்னும் நாள் அல்லது நேரம் இருக்கிறது, பிறகு பார்த்துக்கொள்ளலாம் என ஒத்திப் போட்டுக் கொண்டே வருவது ஒன்று. இதனால் கடைசி கட்டத்தில் வேறு எதிர்பாராத தடைகள் நேர்ந்துவிடச் செயலில் காலதாமதம் ஆகி விடுகிறது. இரண்டாவது மறதி. செய்ய வேண்டியதை முற்றிலும் மறந்து விட்டுக் கடைசி நேரத்தில் நினைவுக்கு வரக் கைகால் ஓடாமல் திண்டாடிக் காலம் தவறி விடுகிறது. மூன்றாவது சோம்பல், உரிய காலத்தில் செயல்புரியச் சோம்பி இருந்துவிட்டு இறுதியில் வாய்ப்பு பறிபோய்விடுகிறது. நான்காவது தூக்கம், சோம்பலைவிட மோசமானது பேருறக்கம். எப்போது பார்த்தாலும் தூங்கிக்கொண்டே இருப்பவர்கள் உரியகாலத்தில் எதையுமே செய்யமாட்டார்கள்.

இந்த நான்கு காரணங்களால் காலத்தைத் தவற விடுபவர்கள் அழிந்து போவார்கள் எனத் திருவள்ளுவர் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார் .

நெடு நீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடு நீரார் காமக் கலன்.

என்பது அவர் வாக்கு. ஒரு செயல் புரியும்போது காலம் தவறுபவர்கள் தாமே விரும்பி அழிந்து போகின்றனர் என்பது இக்குறளின் கருத்து. இதனால் காலம் தவறாமையின் இன்றியமையாமை மிகத் தெளிவாக விளங்குகிறது.

உரிய காலத்தை நோக்கிக் காத்திருப்பது காலம். தாழ்த்துவது ஆகாது. ஒவ்வொரு செயலுக்கும் குறிப்பிட்ட ஒரு காலம் இருக்கிறது. அந்த நேரத்தில் செய்தால்தான் அக்காரியம் வெற்றிபெறும். அதற்காகக் காத்திருப்பது ஒத்திப்போடுவது ஆகாது. ''மடைத்தலையில் ஓடும் மீன் ஓட உறும் மீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு'' என ஔவையார் காட்டுவது போல தக்க சமயத்தை எதிர்நோக்கி நிற்பது இது. இந்த நிலையைத்தான் திருக்குறள்,

காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர் ' .

எனக் குறிப்பிடுகிறது.

இவ்வாறு காத்திருந்தாலும் செயல்படும்போது தவறாமல் உடனடியாகக் காரியமாற்ற வேண்டும். உறுமீனுக்காகக் காத்திருக்கும் கொக்கு பெரிய மீன் வந்த உடனே சற்றும் தவறாமல் கொத்திக் கொள்வதைப்போல நம் செயலும் காலம் தவறாததாக அமைய வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்ட வள்ளுவப் பெருந்தகை மறக்கவில்லை. அவர்,

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து' .

என அறிவுறுத்துகிறார். இந்த அருமைத் திருக்குறளில் காலம் அறிதல், காலம் தவறாமை ஆகிய இரண்டு நிலைகளும் பின்னியிருக்கக் காணலாம்.

உரிய காலத்தில் செய்யப்படும் ஒரு சரியான செயல் பல தீமைகளைத் தடுக்கும் என்பது உண்மை. சரியான நேரத்தில் போடப்படும் ஒரு தையல் ஒன்பது தையல்களிலிருந்து நம்மை விடுவிக்கிறது என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. உரிய காலத்தில் செய்ய வேண்டியனவற்றைச் செய்யாததால் வாழ்வில் பெரிய தோல்வியை அடைந்தவர்களை நாம் அடிக்கடி சந்திக்கிறோம். இந்த மாதிரி ஏற்படாமல் எடுத்த காரியம் யாவினும் வெற்றி பெற காலம் தவறாமை என்னும் நற்பண்பை எல்லோரும் கட்டாயமாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

18. ஒழுக்கம்

ஒழுக்கம் என்பதற்குப் பலர் பலவகையாகப் பொருள் சொல்லியிருக்கிறார்கள். திருக்குறள், நாலடியார், முதலிய நீதி நூல்களில் இது பற்றிய கருத்துக்கள் பல காணப்படுகின்றன ; காப்பியங்கள் எல்லாமே ஏதேனும் ஓர் ஒழுக்கத்தை வற்புறுத்தும் இலக்கியங்களாகவே உள்ளன . மனிதன் பிறந்து நடைபழகும் காலம் தொட்டு நடை ஓயும் காலம் வரை இந்த ஒழுக்கம் பரவலாகப் பேசப்பட்டும் அறிவுறுத்தப்பட்டும் வருகிறது.

'ஒழுக்கு' என்ற தமிழ்ச் சொல் தானாக இயற்கையாக நிகழும் செயலைக் குறிப்பதாகும். ஆற்றொழுக்கு, நீரொழுக்கு என்ற சொற்கள் இதன் அடிப்படையைக் காட்டும். ஆற்று நீரும், அருவி நீரும் சீராக ஓடிக்கொண்டே இருக்கின்றன. அவற்றின் இயல்பு அது. உலகப் படைப்பை நுட்பமாக நோக்கினால் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு இயல்பு தானாகவே அமைந்துள்ளதை அறியலாம். அந்த இயல்பை விட்டுப்பிரியாதவரை, விலகாதவரை அதன் இயக்கம் சீராகவும் செம்மையாகவும் இருக்கும். சற்றே விலகினாலும் சீர்மை குன்றிப்போகும். இதுவே நியதி. விலங்கினங்கள் மேய்க்க மேய்வன, உண்பிக்க உண்பன, வேலை வாங்க வேலை செய்யும் இயல்பின. ஆனால் மனிதன் உண்பிக்க உண்பதில்லை. அவனே உண்கின்றான். மனிதன் தனக்குரிய உணவைத் தானே தேடிக்கொள்ள வேண்டும் என்பது இயற்கையின் நியதி. தனக்கு மட்டுமல்ல தன்னைச் சார்ந்தவர்க்கும் தேடவேண்டும்.

அப்படியானால் மனிதனின் ஒழுக்கம் என்ன? அவனுடைய இயல்பும் அவனுக்கென வகுக்கப்பட்ட நியதியும் யாவை? நீதிநூல்கள் இவற்றுக்கு விடை கூறியுள்ளன. வள்ளுவப் பெருமான் ஒழுக்கமுடைமை என்று தனி அதிகாரம் வகுத்து அதன் பெருமையைக் கூறியுள்ளார். பத்துக் குறள்களிலும் வலியுறுத்தப்படும் நியதி ஒன்றே என்பதை இறுதிக் குறளில் முத்தாய்ப்பாக முடிக்கிறார். ‘உலகத்தோடு ஒட்ட ஒழுகல்’ என்பதே அது. ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. அதை எப்பாடு பட்டேனும் காக்க

வேண்டும். அதுவே மேன்மையையும் புகழும் தரும் என்றெல்லாம் சொல்லிவரும் தெய்வப்புலவர் இறுதியில் அது என்ன என்பதை மூன்றே சொற்களில் உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என முடித்துவிடுகிறார்.

ஆற்றுக்கு நீரொழுக்கு இயல்பு: புல்லைத் தின்னாதிருப்பது புலிக்கு இயல்பு. மனிதனுக்கு உலகத்தோடு ஒட்ட வாழ்வது இயல்பு. இது புது விளக்கம். மற்ற ஒழுக்கங்கள் அவ்வப் பொருள்களைச் சார்ந்தன; ஆனால் மனிதனின் ஒழுக்கம் புறநிலை சார்ந்தது. விலங்கிற்கும், மரத்திற்கும் உள்ள ஒழுக்கங்கள் வேறு; மனித ஒழுக்கம் வேறு. மனிதன் அறிவுடையவன். அந்த அறிவும் கல்வியால் வரும், கேள்வியால் வரும், பட்டறிவாலும் வரும், எப்படி வந்தாலும் அந்த அறிவு உலகத்தோடு சேர்ந்து வாழும் ஒழுக்கத்தை மனிதருக்குத் தருவதாக இருக்க வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. ஏன் எனில் மனிதன் எப்போதும் ஒரு சமுதாயத்தின் உறுப்பாகவே வாழ வேண்டிய கட்டாயம் வருக்கிறது. ஓர் அமைப்பின் ஏதாவது ஒரு உறுப்பு தன்னிச்சையாகச் செயல்படத் தொடங்கினால் முதலுக்கே மோசம் ஆகிவிடும். எனவே சமுதாயத்தின் ஓர் அங்கமாகிய மனிதன் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தோடு ஒட்டியே வாழ்ந்தாக வேண்டும் . அவனுக்கு வேறு வழியே இல்லை.

தனி மனித ஒழுக்கத்தைத் திருவள்ளுவர் கூறும் விதம் புதுமையாக உள்ளது. தன் விருப்பம் போல் செயல்பட உரிமையுண்டு; என்றாலும் மனிதன் 'இலங்குநூல் கற்றவன்'. அவன் அறிவு பெற்றவன். ஆதலால் தன் விருப்பம் என ஒன்று அவனுக்கு இருக்கலாகாது; அப்படி நடக்கவும் கூடாது. எப்பொழுது உலகில் ஒருவன் என்று வந்துவிட்டானோ அப்போதே அவனுடைய தனித்துவம் அழிந்து போகிறது. பிறருக்காக வாழ்வது அவன் இயற்கை; மனிதன் உழைப்பதற்கே படைக்கப்பட்டவன். பிறிதொருவனால் வேலை வாங்கப்படாமல் தானே இயல்பாக வேலை செய்பவன் தான் மனிதன். அதுவே அவன் பண்பு ஆகும். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவர் இருப்பதால் தான் உலகம் இன்றும் அழியாமல் இருக்கிறது என்று புறநானூறு பாடுவது இந்த ஒழுக்க நெறியையே. பிறருக்காக வாழ

முற்படுபவன் தன்னலம் துறப்பான். தன்னலம் நீத்தால் எல்லாச் சிறப்புகளும் தாமாகவே வரும். விலங்கு தன்னைத்தானே நேசிக்கும், இயற்கையின் நிர்ப்பந்தத்தால் சில காலம், தான் ஈன்ற கன்றுகளை நேசிக்கும். ஆனாலும் தொடர்ச்சி இல்லை. மனிதனோ அன்பு காட்டவே படைக்கப் பட்டவன். மற்றவர்களிடத்தில் அன்பு காட்டவும், அன்பைப் பெறவுமே அமைந்தது அவனுடைய உருவ அமைப்பு. இந்த நன்னெறியிலிருந்து மனிதன் விலகுவது முறையாக அமையுமா? இந்த விழுமிய நிலை - உலகம் வாழத் தன்னைத் தானே துறக்கும் நிலை - தான் மனித ஒழுக்கம். அதுவே விழுப்பம் தரும்; அதை உயிரினும் மேலாகப் போற்ற வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால் பிறப்பால் தனிமனிதனாகப் பிறந்தாலும், மனிதன் தனக்கென வகுக்கப்பட்ட நியதியில் உலகத்தோடு ஒட்ட ஒழுகி, தன்னலம் கருதாமல் பிறருக்காகத் தன்னையே துறக்கும் சிறந்த பண்பையே ஒழுக்கம் எனலாம் என்பது பெறப்படுகிறது. இதுவே வையகத்துள் வாழ்வாங்கு வாழும் நெறி. இவ்வாறு வாழ்ந்தவர்கள் தெய்வமாக மதிக்கப் பெற்றதைப் பழைய தமிழ் நூல்களால் அறிகிறோம்.

'எங்கோன் இயல்குணன் ஏதம் இல் குணப் பொருள்
உலக நோன்பிற் பலகதி உயர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்'

'நன்றே நினைத்தான் குணமே மொழிந்தான் தனக்கென்று
ஒன்றாலும் உள்ளான் பிறர்க்கே உறுதிக்கு உழந்தான்
அன்றே இறைவன் அவன்தாள் சரணங்கள் அன்றே'.

'தன் உயிர்க் கிரங்கான் பிற உள் ஒப்பு மன்னுயிர்
முதல்வன்' என்பன சில.

அந்த ஒழுக்கம் மக்களினத்தில் நிலைபெற்றுவிட்டால் பிறகு பூசல் ஏது? போர் ஏது?

உலகம் முழுவதும் ஓர் அமைதிப் பூங்கா ஆகிவிடாதா?

மிக விரைவில் அந்த நிலை தோன்ற வேண்டுமென்று இறைவனை நீள நினைந்து வேண்டிக் கொள்வோமாக.

19. சரணாகதி தத்துவம்

**மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவள், முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழ வைப்போன், வெய்ய வாரணம்போல்
கைதான் இருபது உடையான் தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே.**

உயிரினத்தில் இரண்டு வகையான பிரிவுகள் உள்ளன. தனித்து வாழ்பவை சில. கூட்டாகச் சேர்ந்து வாழ்பவை சில. சமூக அமைப்பு என்பது மனிதனுக்கு மட்டும் சொந்தமில்லை. எறும்பு, தேன், யானை போன்ற உயிர்க்கூட்டத்திலும் இது காணப்படுகிறது.

சேர்ந்து ஒன்றாக வாழ்தல் என்ற இந்தக் கட்டமைப்பு உயிரின் வளர்ச்சிப் பரிணாமத்தில் இன்னொரு கட்டம் ஆகும். குடும்பம், திருமணம், வீடமைத்தல், நிறுவனங்களை உண்டாக்குதல், கோயில் ஒழுங்கு ஏற்படுத்தல், கடிவழிபடுதல் என்ற இந்தச் செயல்களில் பலர்கூடி ஒன்றாகப் பணிபுரிதலைக் காண்கிறோம்.

இந்தக் கட்டமைப்பு எப்படி நடக்கிறது என்பதை நாம் சிறிது எண்ணிப் பார்க்கவேண்டும். குடும்பம் என்றிருந்தால் கணவன் தலைவனாக இருக்கிறான். அவனுக்கு உதவியாக மற்றவர்கள் இருந்து குடும்பம் சரிவர நடக்கத் துணை செய்கிறார்கள். பள்ளிகளில் ஆசிரியர்கள் மாணவர்க்கு முன்னோடியாக இருந்து வாழ்ந்து காட்டுகின்றனர். மாணவர் அவர்களைப் பின்பற்றுகின்றனர். அப்படியே நிறுவனங்கள், பிற அமைப்புகள் எல்லாவற்றிலும் இந்த அமைப்பைக் காண்கிறோம்.

''இதனை இதனால் அவன் முடிக்கும்'' என்று ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவனிடம் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. அதற்குப்பிறகு அவரைப் பற்றியோ அவருடைய பணியாற்றும் விதம் பற்றியோ ஆராய்ச்சியோ ஐயமோ இருக்கக் கூடாது. அவரை நம்பி - முழுவதும் நம்பி விட்டுவிட வேண்டும். அப்படியில்லாமல் அவர்மீது ஐயுற்றால் வேலையும் நடக்காது; தீராத துன்பமும் தான் மிஞ்சும். இதைத் திருக்குறள்

தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுரவும்
தீரா இடும்பை தரும்

என்று தெளிவுபடுத்துகிறது. எனவே, ஒரு நல்ல தலைவனை நாம் ஆராய்ந்து தேர்ந்தெடுக்கவேண்டும், அதற்குப்பிறகு அவரை ஐயுரல் கடாது. அவருக்கு முழுதுமாகத் துணை நின்று பணி நிறைவேற உதவ வேண்டும்.

இப்படி முழுமையாகத் துணை நின்று உதவுவதையோ சரணாகதி என்று பெரியோர் சொன்னார்கள். தலைவனைச் சரணமாக அடைதல் என்பது முன்னோர் கண்ட சிறந்த நெறியாகும். தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே என்று கம்பர் இறைவனை வணங்குகின்றார்:

வைணவ முறையில் இந்தச் சரணாகதித் தத்துவம் தலை சிறந்த இடம் வகிக்கிறது. 'உண்ணு உணவும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும்' எல்லாம் அவனே என்று ஆழ்வார்கள் இந்தத் தத்துவத்தை எல்லாப் பொருள் மீது வைத்தும் பாடியிருக்கிறார்கள்.

பொதுவாகப் பார்த்தால் பல சமயங்களிலும் இந்தக்கருத்து கூறப்பட்டு வந்துள்ளதை நாம் அறிகிறோம் சைவ நெறியிலும் இது பேசப்படுகிறது

பலனை எதிர்பார்க்காமல் தொண்டாற்ற வேண்டும் என்று கீதை சொல்லும் இக்கருத்து தமிழனுக்குப் புதிதல்ல. ' தன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்பது அப்பர் அடிகளின் அருள்வாக்கு ஆகும்.

நமக்கு மேம்பட்டவன் ஒருவன் அவன் அளப்பரிய ஆற்றலுடையவன்; அவன் அருளானையின் வண்ணமே உலகச் செயல்கள் நிகழ்கின்றன; அந்த ஆணைக்குக் கட்டுப்பட்டே அனைவரும் வாழவேண்டும். அதனால் வருவது நன்றாயினும் தீதாயினும் அப்படியே ஏற்பதே துன்பமில்லாமல் இருக்கச் சிறந்த வழி என்று அருளாளர்கள் தம்முடைய தெளிந்த அறிவால் கண்டனர்; அப்படி வாழ்ந்தும் காட்டினார்கள், எல்லாம் அவன் செயல்' என்ற பாரத்தை அவன் திருவடியிலேயே வைத்துவிட்டு பணியாற்றும்போது துன்பம் வருவதற்கு வழியில்லை.

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனையாட்கொண்டே போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ என் தோள் மூக்கன் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகனே

என்று மாணிக்கவாசக பெருமான் இந்தச் சரணாகதித் தத்துவத்தின் தெளிவைப் பாடுகிறார். இதல்லாமல் திருவாசகத்தில் அடைக்கலப் பத்து என்று ஒரு பதிகம் உள்ளதை அன்பர்கள் அறிவார்கள்! அடியேன் உந்தன் அடைக்கலமே ! என்பதை இறுதியடியாக கொண்ட அந்தப் பத்துப் பாடல்களும் ஞானத்தின் உயர்ந்த நிலையில் பாடப்பட்டன என்று சொல்லவேண்டும். அடைக்கலமாகக் சேர்வது என்பது சரணம் அடைவதாகும். இதை மையமாக வைத்துத் தனிப் பதிகம் பாடிய பெருமை மணிவாசகப் பெருமானைச் சேர்ந்தது ஆகும். அவ்வாறு இறைவன் திருவடியை அடைக்கலமாக ஒருவன் அடைந்தால், அவனுடைய சிறுமைகளை இறைவன் பொறுப்பான், பிறவித் துன்பங்களை நீக்குவான்; பாவிடை ஆடுகுழல் போல மறைந்து துன்புறம் உள்ளத்துக்கும் அமைதி தருவான்.

இறைவனிடம் இப்படிச் சரணம் அடைய ஒரு எளிய வழியையும் மாணிக்க வாசகரே சொல்லியுள்ளார். இறைவனை வணங்கும் நெறியையோ, இறைவனையோ அறிகின்ற அறிவில்லாத போதும் பொல்லாமனத்தையும் அழுக்கு மனத்தையும் அவனுக்கு பொருளாக அடைக்கலப் பொருளாக ஆக்கிவிட்டால் அந்தக் கல்லையும் பிளந்து கனியாக்கித் தருவான் என்கிறார் அடிகள்.

அடைக்கலமாகும் இந்தச் சரணாகதித் தத்துவத்தின் அடிப்படையைப் புரிந்து கொண்டால் உலகத்தில் துன்பமே இருக்காது. நம்பினோர் கெடுவதில்லை! என்று பாரதியார் கூறுவதும் இதையே. 'நீ பெரியவன் நான் பெரியவன் என்ற வேறுபாடும் போராட்டமும் இல்லாமல் நமக்கு மேலுள்ள ஒரு தலைவனிடம் நம் வாழ்வையே அடைக்கலப் பொரு ளாக்கிவிட்டால் துன்பமிலாத நிலை தானாக வந்துவிடும். இறைவனை எண்ணி ' அஞ்சியாகிலும் அன்பு பட்டாகிலும் ! எல்லாச் செயல்களையும் அவன் திருவடிக்குக் காணிக்கையாக்குவதே சரணாகதியாகிய அடைக்கலம் அதுவே உலகை வாழவைக்கும்.

20. தீபாவளி வடநாட்டிலும் தென் நாட்டிலும்

தீபாவளி ஒரு பழமையான பண்டிகை. பலகாலமாக இருந்து வருகிறது. பல்லாண்டுகளாக நடைமுறையில் இருக்கும் எந்த ஒன்றும் மாறுதலுக்கு உள்ளாகும் என்பது இயற்கையின் நியதி. அதனால் தீபாவளி பற்றியும் பல ஐதீகங்கள் பரவியுள்ளன. அதே போல அதைக் கொண்டாடுவதிலும் வேறுபாடுகள் உள்ளன. குறிப்பாகப் பண்டிகையன்று செய்கின்ற சடங்குகளிலும் வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் மாறுதல்கள் உண்டு.

பொதுவாக ஐப்பசிமாத அமாவாசைக்கு முந்தைய சதுர்த்தசி அன்று தென்னாட்டில் தீபாவளி கொண்டாடப்படுகிறது. ஆனால் வடநாட்டார் குறிப்பாக குஜராத், மகாராஷ்டிரா மாநிலத்தவர்கள் அமாவாசை, மறுநாள் பிரதமை அன்றுதான் தீபாவளி கொண்டாடுகிறார்கள். இந்த வளர்பிறைப் பிரதமை அவர்களைப் பொறுத்தவரை சிறப்புக்குரியது ஆகும்.

தென்னாட்டில் தேய்பிறை சதுர்த்தசி அன்று விடியற்காலை தீபாவளி தொடங்குகிறது. அப்பொழுது தீபம் ஏற்றித் திருமகளை விளக்கிலுள் தியானிக்கிறார்கள். எண்ணெய், பழம், வெற்றிலை பாக்கு, தின்பண்டங்கள் இவற்றைத் திருமகளுக்கும் திருமாலுக்கும் படைத்து வழிபாடு செய்கின்றனர். தலைக்குத் தேய்க்கும் எண்ணெய்யில் திருமகளும், குளிக்கும் நீரில் கங்கையும் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. அந்த நினைவுடன் அதிகாலை நீராடி புதிய ஆடைகளை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று சிறப்பு பூசையுடன் இறைவழிபாடு செய்து மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டிய தினமிது. இல்லங்களில் அறுசுவை உணவு, பலகாரங்கள் தயாரித்து உறவினர், விருந்தினரை வரவேற்று உபசரித்துத் தாம் உண்பதுடன் பணியாளருக்கும் கொடுத்தும் கொண்டும் உறவுகொண்டு அன்பால் மகிழ்வார்கள்.வடநாட்டினருக்கு காதர்த்திகை மாதம் முதல் நாள் தீபாவளி ஆண்டு பிறப்பாகும். அமாவாசை இரவில் பெண்கள் முறத்தைத் தட்டி மூதேவியை விரட்டிவிட்டு புத்தாண்டுக்குத் திருமகளை வரவேற்கும் சடங்கு செய்வர். வணிகத்தில்

ஈடுபட்டவர்கள் அன்று புதுக்கணக்கு தொடங்குவார்கள். வழிபாட்டின் போது 'ஆகிவந்தது' என்று கருதும் பழைய காசு ஒன்றை வைத்துக் கும்பிடுவார்கள். திருமகள் வழிபாடே அங்கேயும் சிறப்பிடம் பெறுகிறது. பட்டாசு கொளுத்துவதும், விளக்குகளை வரிசையாக வைப்பதும் சிறப்புச் சடங்குகள் ஆகும். சிலர் பிரதமை அன்று காலையிலும் இவற்றைச் செய்வர். வடநாட்டினருக்கு கார்த்திகை மாதம் முதல் நாள் தீபாவளி ஆகும்.

அமாவாசை இரவுக்கு நல்லிரவு (சுபராத்ரி) அல்லது யட்சஇரவு (யட்ச ராத்திரி) என்று பெயர். இயக்கர்களின் தலைவனாகிய குபேரனுக்கும் அன்றிரவு வழிபாடு நடக்கும் பிறகு தின்பண்டம் கொடுப்பது, உறவினர் வீடு செல்வது என்ற நிகழ்ச்சிகள் அங்கும் உண்டு.

வடநாட்டில் அந்தத் தீபாவளி பற்றி வேறு சில குறிப்புகளும் உள்ளன. விக்ரமாதித்ய மன்னன் பட்டம் ஏறிய நாளையே மக்கள் தீபாவளியாகக் கொண்டாடுகிறார்கள் என்பது ஒரு செய்தி. அது கார்த்திகை மாதத்தில் நடந்தது. அன்று விக்ரம சகாப்தம் தொடங்கியது.

காசியில் உள்ள அன்னபூரணி தேவி திருக்கோவிலில் முழுவதும் பொன்னால் ஆன திருமேனி உள்ளது. அது ஆண்டிற்கு தீபாவளிக்கு முதல் நாள், தீபாவளி அன்று, மறு நாள் ஆகிய மூன்று நாட்கள் மட்டும் வழிபடப்பெறும் தீபாவளி அன்று - திருசந்நதி முழுவதும் இனிப்பு வகைகளால் நிரப்பப்பட்டு வழிபாட்டிற்கு பின் பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்கப்படும்.

சில பகுதிகளில் திருமாலினைப்பற்றி அடியாராகிய பலிச்சக்கரவர்த்தி பட்டமேறிய நாளாக அது கருதப்படுகிறது. 'பலி பரதிபத்' என்று புத்தாண்டு கொண்டாடப் படுகிறது. அன்பு வைக்கும் தீபத்துக்கும் பலிபரதீபம்! என்று பெயர். சில இடங்களில் பலிஉருவங்கள் செய்து வைத்தும் வழிபடுவர்.

இவையல்லாமல் இன்னொரு செய்தியும் காணப்படுகிறது. ராவணனை இராமன் இலங்கையில் போரில் வென்று அயோத்தி நகருக்குத் திரும்பிவந்த நாளில், அயோத்தி

மக்கள் நகர்முழுதும் அழகுபடுத்தி இராமன் வெற்றியைப் போற்றி மகிழ்ந்தனர் அந்த நாளே தீபாவளி என்றும் சொல்கிறார்கள். வங்காளத்தில் காளி வழிபாடு தீபாவளியன்று, மிகச் சிறப்பாக நடத்தப்படுகிறது. அன்றும் திருமகளுக்குச் சிறப்பு செய்யப்படும்.

சமண, சமயக் சார்ந்தவர்கள் அவர்களுடைய புனித தீர்த்தங்கள் மகாவீரர் பரிநிர்வானம் அடைந்த நாளைத் தீபாவளி எனப் போற்றுவர்.

தீபாவளி என்பது தீபங்களின் வரிசை என்ற பொருளில் , தீபங்களை ஏற்றிக்கொண்டாடும் வழக்கமும் உண்டு. இத்தினம் ஒரு புனித புண்ணிய தினமாகும். மாயையாகிய அருளை அகற்றி உள்ளத்துக்கு ஞான ஒளியேற்றி கொண்டாடுவது நலம்.

இத்தினத்தில் இல்லங்களில் அதிகாலையில் தீபமேற்றிவைத்தால் அவ்வொளியில் திருமகளை வாசம் செய்து அனைத்துச் செல்வங்களும் மக்களுக்கு நல்குவாள். இன்னும், நமக்கு ஞான ஒளியை, ஞானப் பிரகாசத்தை அளிக்கும் விழா என்பதே தீபாவளியின் தத்துவப் பொருளாகும். அதாவது நல்லெண்ணமாகிய நல்லெண்ணெயை உடலில் பூசி, சித்தமாகிய சீயக்காய் பொடியினால் தேய்த்து உள்ளத்தில் படிந்த அழுக்காகிய அழுக்காறு அவா, வெகுளி ஆகியவற்றைப் போக்கி ஞானமாகிய வெண்ணிற உடைகளை அணிந்து, ஐம்புல வேட்டைகளாகிய அரக்கர்களைப் பட்டாசைக் கொளுத்தி எரித்துப் பேரின்ப பெருவாழ்வு எய்தும் மார்க்கத்தை அடைவதே தீபாவளி விழாவின் உட்பொருளாகும். இதனை உணர்ந்தால் நம்மையறியாமல் நமக்கு ஒரு தனி ஒளி, பிரகாசம், ஆனந்த நிலை ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

எல்லார்க்கும் இன்பம் கூடட்டும்; துன்பம் விலகட்டும்.

21. நரகாசுரன்

ஐப்பசி மாதம் அமாவாசைக்கு முந்தைய நாள் ஆகிய சதுர்த்தசியன்று தீபாவளி திருவழா கொண்டாடப்படுகிறது . இந்நாளில் திருமால் நரகாசுரனைச் சங்கரித்தாகக்கூறுவர். தமிழில் செவ்வைச் சூடுவார் பாகவதத்தில் நரகாசுரனைக் கொன்ற அத்தியாயம் என்னும் பகுதியிலும் அருளாளதாசர் பாகவதத்தின் நரகாசுரன் வதைப் படலம் என்னும் பகுதியிலும் நரகாசுரன் வரலாறு விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

நரகாசுரன் வராக அவதாரமாக வந்த திருமாலுக்குப் பூமிதேவியிடம் தோன்றிய மகன். இவன் பிராக்சோதிஷதபுரம் என்பதைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான். இவன் துவஷ்டா என்பவனின் மகளாகிய கசேரு என்பவளைச் சிறையெடுத்து வந்தான். அவனுடைய மகனின் பெயர் பகதத்தன். வராகா அவதார காலத்தில் தோன்றிய இவன் நீண்ட நெடுநாள் வாழ்ந்திருந்து கிருஷ்ணாவதாரத்தில் கொல்லப்பட்டான்.

கண்ணபெருமானின் வாழ்நாளில் நரகாசுரன் தேவர்களின் தாயாகிய அதிதியின் காதலியையும், வருணனுடைய குடையையும் கவர்ந்து கொண்டான். பதினாறாயிரம் மன்னர்களையும் அவர்கள் புதல்வியர் பதினாறாயிரவர்களையும் நரகாசுரன் சிறையில் அடைத்து விட்டான். இந்திரன் இவற்றை கண்ணபெருமானிடம் முறையிட அவர் இவனோடு போர்புரிந்து கொன்றருளினார். அப்போது நரகனின் தாயாகிய நிலமகள் கண்ணன்பால் வந்து வராகாவதாரத்தில் உமது வேர்வையால் பிறந்த நரகாசுரனைக் கொன்று விட்டீர்கள். அவளுடைய மகனையாவது காத்தருள வேண்டும் என வேண்டினாள்.

கோலமாய் எயிற்றில் என்னை ஏந்து நாள் கொடிய வேர்வின்
சீலம் அல் குணத்தன் ஆகிச் செனித்திடு நரகன் றன்னை
ஆவின் மேல் அமர்வாய்! செற்றாய்; அவன்தரு புதல்வன்
தன்னில்
பாலன்ஈங் கிவனைக் காத்தி' என்றடி பணிந்தாள் மன்னோ .

(அருளாளதாசர் நரகாசுரன் வதைப் 101)

பார்மகளின் வேண்டுகோளை ஏற்றுக் கண்ணபிரான் நரகனின் மகனாகிய பகதத்தனுக்கு ஆட்சியை வழங்கினார். மந்தாகினி

'மந்தாகினி யொடு பொங்கொளி மணிவார்கழல் அலம்பும்
செந்தாமரை புகழ்பார்மகள் செஞ்சொல்செவி திளையா
நந்தாவலம் தழைத்தோங்கிய நரகாசுரன் மதலைக்கு
அம்தாதவிழ் துளவப்புயல் அபயம் கொடுத் தனன்ஆலே

(செவ்வைச் சூடுவார். 3633)

நரகாசுரனால் கவரப்பட்ட பொருள்களை உரியவர் களுக்குத் தந்து சிறைப்பட்ட அரசர்களையும் கன்னியரையும் விடுவித்தான். அரசகுமாரிகள் அனைவரின் விருப்பப்படி அவர்களை மணந்து கொண்டான் என்பதுதான் பாகவதத்தால் நாம் அறிகிற நரகாசுரன் வரலாறு ஆகும்.

இரண்டு பாகவதங்களிலும் தீபாவளிப் பண்டிகைக்கும் நரகாசுரனுக்கும் எந்தத் தொடர்பும் உள்ளதாகக் கூறப்படவில்லை என்றாலும் எப்படியோ, தொடர்பு இருப்பதாக மரபுவழி ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது, இவ்வாறே திருமாலால் மூவடி நிலம் வேண்டிப் பாதாளத்தில் அழுத்தப் பெற்ற மாவலியின் வரலாற்றைக் கேரளத்தில் திருவோணத் திருவிழாவோடு இணைத்துக் கொண்டிருப்பதும் ஒப்புநோக்கத்தக்கது.

மிகமிகப் பழங்கால நாகரிகத்தின் கூறுகளாக வழக்கத்தில் படிந்துவிட்ட நினைவு நாள்களைப் பிற்காலத்தில் மிகப்பிரசித்தமான புராண நிகழ்ச்சிகளோடு தொடர்பு படுத்தும் போக்கிற்கு இதுவும் ஓர் உதாரணம் ஆகும் .

நரகாசுரனின் வரலாறு நமக்கு மிகத் தெளிவாகப் புகட்டும் நீதி இதுதான்.

ஒருவன் அறிவால், செல்வத்தால், அழகால், இளமையால், அதிகாரத்தால் மிகப் பெரும் சிறப்பை அடையலாம். ஆனால் அவன் அதைத் தவறாகப் பயன்படுத்தினால் மிகவும் இழி நிலையை அடைந்து அழிந்து

போவான். மிகக்குறிப்பாக ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள், வேறுவகையான துறைகளில் செல்வாக்கு மிக்கவர்கள் தம் செருக்கால் அதிகார துஷ்பிரயோகம் செய்தால் அச்செயலே அவர்களுக்கு இறுதியை ஏற்படுத்திவிடும் என்பதுவே நரகாசுரன் வரலாற்றால் நாம் அறியும் நீதி.

நரகன் திருமாலுக்கே மைந்தனாகப் பிறந்தவன்; பேராற்றல் வாய்ந்தவன்; அளவிறந்தகாலம் ஆயுள் பெற்றவன்; தன்வலியோடு பெரும் படைவலிமையும் பெற்றவன். இத்தனை சிறப்புக்கள் இருந்தும் அவன் தன் அதிகாரச் செருக்கால் செய்யத் தகாதனவற்றைச் செய்தபோது தந்தையாலேயே அழிக்கப்பட்டான்.

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின் (965)

என்னும் வள்ளுவர் வான்மறைக்கேற்ற உதாரணமாகவே நரகாசுரனின் வரலாறு திகழ்கிறது .

தீபாவளிப் பண்டிகை இந்தியா முழுவதிலும் கொண்டாடப்பட்டாலும் இதோடு தொடர்புபடுத்தி கூறும் நரகாசுரனை மரபு தென்னாட்டில் மட்டுமே காணப்படுகின்றது. அவ்வாறே திருவோணத்தையும் மாவலியையும் இணைத்துக் காண்பதும் கேரளத்தில் மட்டும் தான்.

எந்த ஒரு திருவிழாவாக இருந்தாலும் அதனை வெற்றுசடங்காக வீணடித்துவிடாமல் மக்களின் சமுதாய, ஆன்மீக முன்னேற்றத்திற்கு இன்றியமையாத சில சிந்தனைகளை அத்துடன் இணைக்கும் ஒப்பற்ற அறிவுடைமையின் விளைவே இச்செயலாகும்.

மனித குலத்திற்கு இன்றியமையாத ஒரு நீதியையும், தன்னை அடைந்தாரை இறைவன் எப்படியும் காத்தருள்வான் என்னும் ஆழமான நம்பிக்கையையும் உள்ளடக்கிய நரகாசுரன் வரலாற்றை இந்நாளில் சிந்தித்து உணர்ந்து கடைபிடிப்பது நம் எல்லோரின் கடமையும் ஆகும்.

22. உறவுகளை வளர்ப்போம்

''வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்துடுமின்'' என்பது திருமுறையின் ஆணை; ஆம் நமக்கு வாய்த்த சிறப்பான பிறவி, மானிடப்பிறவி! இந்தப்பிறவியும் ஒரே ஒருமுறைதான் வாய்க்குமாம்! இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ! என்றும் கவலைப்படுகின்றனர் நாம் அனைவரும் இந்த மானிடப் பிறப்பின் பயனை நன்றாக முழுமையாக அடையவேண்டும்.

இப்பிறவியின் பயன் பிறருக்குத் துன்பம் வரும் போது அவருக்கு உதவுவது. பிறஉயிர்கள் மீது அன்பு காட்டுவது. பின் அந்த அன்பு உறவுகளாக மலர்கின்றது. 'உறவுகள் ' என்று இருப்பதால், பலவகைப்படும் என்று புரிந்து கொள்கின்றோம். 'உறவு' அழகான தமிழ்ச்சொல். உற்ற துணையாக இருப்பவர்கள் என்றும் அடிப்படைப் பொருள் கொண்டது. இன்று உறவினர் என்று சொன்னால், அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், அக்கா, தங்கை என்ற நெருங்கிய வட்டத்தில் உள்ளவரை மட்டும் குறிக்கும். அது ஒருவகையில் சரியே. இது தனி மனிதஉறவு. ஆனால் இந்த வட்டத்தையும் தாண்டி நம்முடன் பழகுகின்ற எல்லோருடனும் எல்லா இடத்திலும் கொள்வது மேலான சமூக உறவு ஆகும் அதுவும் இன்றியமையாதது.

முன்பெல்லாம் சிற்றூர்களில் பல வீட்டிற்குச் சேர்ந்து ஒரு வீட்டில் உரல், ஆட்டுக்கல் போன்றவை இருக்கும். தாங்கள் இடிக்க வேண்டிய அல்லது அரைக்க வேண்டிய பொருள்களைக் பெண்கள் அங்கு கொண்டுபோய்ச் செய்தார்கள். தைப்பொங்கலன்று ஒரு வீட்டில் பெண்கள் கூடியிருந்து கும்மியடித்து தாங்கள் கொண்டுவந்த உணவுகளைப் பகிர்ந்துண்டு மகிழ்ந்தனர். இந்த 'உறவு' முறைகளும் பழக்கவழக்கங்களும் நம்மைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டது. இந்த உறவுகள் கிராமத்திலே நீடித்தவரை இன்பமோ, துன்பமோ விரைவில் அனைவரும் ஒன்று கூடிவிடுவார்கள்.

இன்று அறிவியலும், வாழ்க்கை வசதிகளும் அதிகமாக வளர்ந்துவிட்டகாலம் இது. எல்லோருடைய வீடுகளிலும் எந்திரங்கள் ஆட்சி செய்கின்றன. ஒவ்வொரு வீட்டிலும் மா அரைப்பது முதல் துணி துவைக்கின்ற வரை எந்திரங்கள் ஆதிக்கமே மேலோங்கி உள்ளது. அடுத்த வீட்டார்களோடு பேசிப் பழகி உறவுகளை மேம்படுத்திக் கொண்ட காலம் எங்கே? அந்த உறவுகளை இழந்த மனிதன் இன்று மன அமைதிக்காகத் தவறான பாதையில் செல்கின்றான். ஒருவரை ஒருவர் அறிவதும் உணர்வதும் அரிதாகிவிட்டது. இது ஒரு புறம். வாகன வசதிகள் பெருகிவிட்டபடியால் யாரும் யாரையும் சார்ந்திருக்க வேண்டியதில்லை என்னும் சூழல் உள்ளது. நினைத்த இடத்துக்கு நினைத்த நேரத்திற்குப் போகலாம் என்ற வசதியால் பிறரை எதிர்பார்க்கும் நிலைமை இல்லை. ஒரு வகையில் - இது முன்னேற்றமே என்றாலும் சமூக உறவு சீர்குலைந்து போகிறது என்பதையும் நாம் உணரவேண்டும். மேலும் நாட்டில் இருக்கும் ஓய்வற்ற அலைச்சல் வீட்டிலும் பரவி வருகின்றது. ஒரு வீட்டில் கணவன், மனைவி இருவரும் பணிக்குச் செல்வபவர்களாக இருந்தால் காலைப் பொழுதில் அந்த வீடு போர்க்களமாக இருக்கிறது. அதனால் சேர்ந்து உண்ணும் பழக்கம், சேர்ந்து ஒரிடத்திற்கு செல்லும் வழக்கமும் நம்மிடம் இருந்து வெகுதூரம் விலகிச் சென்று விட்டது. பரபரப்பான சூழலில் பின்ளைகள் நம்முடன் இருந்தால் சுமையென்று எண்ணி விடுதியிலே விட்டுவிடுகின்றனர். தேவைக்கு பணத்தை மட்டும் அனுப்புகின்றனர். பணம் வந்தபின் குணங்கள் எங்கே என்று தேடுவது காலைப் பொழுதின் பரபரப்பும் மாலைப்பொழுதின் சோர்வின் காரணமாகவும் உறவுகளை நினைக்கத் தோன்றவில்லை.

அப்பர் பெருமான் போற்றிய அப்பன் நீ, அம்மைநீ, அய்யனும் நீ, அன்புடைய மாமனும் நீ என்ற மானுட நியதிகள் எல்லாம் மறந்து விட்டது. இப்படி 'உறவு'கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகின்றது. ' நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்' என்றார் பாரதிதாசன். குடும்பங்கள் உள்ளன. அவை நன்றாக இல்லை. தனிமனித உறவு இப்படிச் சீரழிவதால் குடும்ப அமைதிபோய் மன இறுக்கம்

ஏற்பட்டு பலவகை நோய்களுக்கு ஆளாகிறார்கள். வசதியாக இருக்க எண்ணி வாழ்வைப் பறிகொடுப்பது அறிவுடைமையாகுமா? தனிமனித உறவை வளர்க்கவேண்டும். ஒருநிலையில் போதும் என்ற நிறைவுவேண்டும்.

அதேபோல் எவ்வளவு செல்வமும் வசதியும் அறிவும் அதிகாரமும் இருந்தாலும் சமூக உறவு இல்லை என்றால் அவற்றால் என்ன பயன்? சிரித்து மகிழக்கூட நேரமில்லாத வாழ்வு என்ன வாழ்வு? சமூகம் என்பது ஒரு பேருடல். அதில் எப்பாகத்தில் கேடு தோன்றினும் எல்லாரையும் ஏதாவது ஒருநாள் பாதிக்கவே செய்யும் ஆதலால் சமூக உறவு கட்டாயம் வேண்டும்.

நம்முடைய அருளாளர்கள் அடியார்களைப் போற்றியதும், மக்களுக்குத் தொண்டு செய்ததும் கடவுள் வழிபாடு என்றே கருதித்தான் என்பது 'உறவுகள் வளர ! நாமும் பாடுபட வேண்டும் என்று வழிகாட்டவே.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'

23. வாய்மை

வாய்மை என்பது உடன்பாடாக ஒரு பொருளையும் எதிர்மறையாக ஒரு பொருளையும் தருகின்ற சொல் ஆகும். தான் உள்ளம் அறிந்து எதை உண்மை என்று நம்புகிறானோ அதைச் சொல்வது வாய்மை என்பது உடன்பாட்டுப் பொருள். இந்தக் கருத்தைத்தான் திருக்குறள்,

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய் வாரின் தலை

என்கிறது. இக்குறள் உரை யில் பரிமேலழகர், ''புறமாகிய மெய்யால் செய்யும் அவற்றிலும் அகமாகிய மனம் மொழிகளால் செய்யும் அது பயனுடைத்து என்பதாம்'' எனக் கூறுவது ஆழமான பொருளுடையது

.எதிர்மறையான மற்றொரு பொருள் பொய் சொல்லக்கூடாது என்பது இந்தப் பொருளைத்தான் திருவள்ளுவர்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

என விளக்குகிறார். தன் உள்ளத்தால் நம்புகின்ற ஒன்றை மறைத்து வேறு ஒன்றைக் கூறுதல் பொய் எனப்படும். இதனால் உண்மை, பொய் ஆகிய இரண்டிற்கும் விளைநிலம் மனித உள்ளமே எனத் தெளிவாகிறது.

மனித உள்ளம் மிக விந்தையானது. அது நினைக்கின்ற நினைவுகள், கட்டுகின்ற கோட்டைகள் ஒன்றா இரண்டா? (கணக்கற்ற எண்ணங்களின் குவியலே மனித மனம்) எண்ணங்களே மனிதனின் குணநலன்களை, அதன் வழி அவன் வாழ்க்கையை உருவாக்குகின்றன. எனவேதான் நம் பெரியவர்கள்,

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் என்றும்
மனமது செம்மை யாகில் மந்திரம் செபிக்க வேண்டா

என்றெல்லாம் உள்ளத்தூய்மையை மிக அழுத்தமாக

வலியுறுத்துகின்றனர். இந்த உள்ளத்தூய்மைக்கு மிக அடிப்படையானது வாய்மையே எனத் தெளிவாக்குகிறது தமிழ் மறை . இது மிக நுட்பமான ஒரு செய்தி. எனவே இதனை வலியுறுத்த எல்லோருக்கும் தெரிந்த ஒரு செய்தியை உவமையாகத் திருவள்ளுவர் கூறுகிறார். நம் உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்குப் பல்வேறு துணைப் பொருள்களை உபயோகித்தாலும் மிக ஆதாரமானது நீரே ஆகும். நீர் இல்லாதபோது சோப்புப் போன்ற ஏனையவற்றால் ஒரு பயனும் இல்லை. அவ்வாறே ஒருவனிடம் வாய்மை இல்லாதபோது இன்சொல், ஈகை, அறிவுடைமை முதலிய நற்பண்புகள் இருந்தும் பயனற்றுப்போய்விடும் என்கிறார்.

புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்

என்பது திருக்குறள். இதனால் ஒருவன் தன் நெஞ்சறிந்தவற்றையே கூறுவதுதான், அதற்கேற்ப ஒழுகுவதுதான், வாய்மை என அறியலாம்.

வாய்மை, மெய்ம்மை, உண்மை என்பனவற்றைச் சத்தியம் என்றும், இந்தக் கலியுகத்தில் தருமதேவதை சத்தியம் ஆகிய ஒரே ஒரு காலில் நடந்து கொண்டுள்ளது என்றும் வடமொழி நூல்கள் கூறுகின்றன. மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் ஒத்துள்ள நிலையே சத்தியம் அல்லது வாய்மை. இதைத்தான், வாய்மையே வெல்லும் என்னும் கொள்கை முழக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த வாய்மையை உடையவன் உலகமக்கள் அனைவராலும் விரும்பப்படுவான் என்கிறார் திருவள்ளுவர்.

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

என்பது அவர் அமுதமொழி. காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு இந்தக் குறளின் விரிவுரையே ஆகும். ஆம்! அது சத்திய சோதனை தானே? சாதாரண மத்தியதரக் குடும்பத்தில் பிறந்தவராகிய மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி ஒரு தேசத்தந்தையாக, உலகம் போற்றும் உத்தமராக மகாத்மா ஆக

உயர்ந்ததற்கு முதல் அடிப்படைக் காரணம் வாய்மைதானே. சத்தியம் தான் அவருக்கு எல்லா அறங்களின் நாயகமாகவும், இறவாப்பெரும் புகழுக்கு முதற்காரணமாகவும் அமைந்தது என்பது வெளிப்படை.

தமிழ் மறை

பொய்யாமை அன்ன புகழ் இல்லை; எய்யாமை
எல்லா அறமும் தரும்.

என அறிவுறுத்துவதற்கும் காந்தியடிகளின் வாழ்க்கையே சான்று.

இதற்கு மாறாக மனம், மொழி, மெய்களின் ஒருமைப்பாடு இல்லாதவர்கள் பொய்யர் எனப்படுவர். உதவி செய்ய வழி இருந்தும் செய்யாத உலோபிகளைச் சுந்தரர்,

பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின்

என்றும், இத்தகையவர்களின் தொடர்பே இருக்கக்கூடாது என்பதை வள்ளலார்,

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்'

என்றும் கூறுவார். இத்தகைய பொய்ம்மையாளர்கள் சமுதாயத்திற்கும் தமக்கும் தீமை செய்து கொள்பவர்களே ஆவர்.

பிற உயிருக்குத் தீங்கு விளைவிக்காததும், தன்னலம் கருதாததும், மனம் மொழி மெய்கள் ஒன்றுபட்ட இடத்தில் தோன்றுவதுமாகிய ஒன்றே வாய்மை எனப்படும். அது அழிவற்றது. என்றும் வெற்றி தருவது. அறங்களுக்கு எல்லாம் ஆதாரமானது.

24. வேதத்தின் ஆறு அங்கங்கள்

'அங்கமும் வேகமும் ஓதும் நாவர்'

(16-1)

விழையார் உள்ளம் நன்கெழு நாவில் '
வினைகெட வேதம் ஆறங்கம்
பிழையா வண்ணம் பண்ணியவாற்றால்
பெரியோர் ஏத்தும் பெருமான்

(1-42-7)

வேதத்தோடு ஆறு அங்கம் சொன்னார் போலும்

(6-21-2)

'ஆறுகந்தார் அங்க நான்மறையார்

(7-19- 4)

என்பன போல நம் செந்தமிழ்த் தெய்வத் திருமுறைகள் பல இடங்களில் நான்கு வேதங்களுக்குரிய ஆறு அங்கங்களைச் சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மானுடன் இணைத்துப் பேசுகின்றன. எனவே இந்த ஆறு அங்கங்கள் எவை எவை என்பதனைத் தெளிவாக அறிந்து கொள்வது சிவநேயச் செல்வர்களின் கடமை ஆகும்.

சிட்சை, கல்பம், வியாகரணம், நிருத்தம், சோதிடம், சந்தஸ் என்பன வேதத்தின் அங்கங்கள் ஆகும். இந்த ஆறு உறுப்புக்களும் வேதக் கல்விக்கு மிக இன்றியமைதான ஆதலின் வேதாங்கங்கள் எனப்படுகின்றன. இவற்றை ஒவ்வொன்றாகச் சுருக்கமாகக் காண்போம்.

சிட்சை - இது பாணினியால் இயற்றப்பெற்றது. இந்தச் சாத்திரத்தில் வேதத்தில் பயிலும் ஒலிகளுக்கு உரிய எழுத்துக்கள், அவற்றை உச்சரிக்க வேண்டிய கால அளவு (உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம்) ஆகியன கூறப்படுகின்றன. அதாவது வேதத்தை எவ்வாறு அதற்குரிய ஓசை சற்றும் மாறாமல் ஓதவேண்டும் எனக் கற்பிப்பது சிட்சை.

கல்பம் - ஆஸ்வலாயனர், ஆபஸ்தம்பர், போதாயனர், காத்யாயனர் முதலிய பலர் கல்ப சத்திரங்களை

இயற்றியுள்ளனர். இந்நூல்கள் வேதங்களில் கூறப்பட்டுள்ள வேள்வி முதலிய சடங்குகளையும், தனி மனித வாழ்வில் நாள்தோறும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுகலாறுகளையும் விதிக்கின்றன. சுருக்கமாகக் கூறுமிடத்து வைதிகச் சடங்குகளின் செய்முறையைக் கூறும் நூல் கல்பம் எனப்படும்.

வியாகரணம் - இதன் ஆசிரியரும் பாலினியே. இந்த வியாகரண நூலுக்குக் காத்யாயனரும் பதஞ்சலியும் விரிவுரை வரைந்துள்ளனர். இது வேதத்தின் மொழி இலக்கணம் ஆகும்.

நிருக்தம் - இதன் ஆசிரியர் யாஸ்கர். வேதங்களில் பயிலும் சொற்களுக்கு இவையே பொருள் என நிர்ணயிக்கும் நூல் நிருக்தம் ஆகும். இதில் சொல்லின் தோற்றம், வரலாறு ஆகியனவும் இடம் பெற்றுள்ளன. இதனை வேதச் சொற்களுக்கான நிகண்டு எனலாம். வேதங்களின் பொருளைத் தடுமாற்றம் இன்றி உள்ளபடி உரை நிருக்தம் இன்றியமையாதது ஆகும்.

சோதிடம் - இதற்குச் சூரியன் முதலிய கோள்கள் தலைவர்கள். வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள சடங்குகளைத் தொடங்குவதற்கேற்ற காலம், நிறைவேற்ற வேண்டிய நேரம் ஆகியவற்றையும். இவ்வாறு உரிய காலத்தில் தொடங்கி முடிப்பதால் ஏற்படும் பயன்களையும் சோதிட சாத்திரம் அறிவிக்கிறது.

சந்தஸ் - இதன் ஆசிரியர் விங்கல முனிவர். இது வேதங்களில் இடம் பெற்றுள்ள பாடல்களின் யாப்பமைதியை விளக்கும் யாப்பிலக்கண நூல் ஆகும்.

இந்த ஆறு அங்கங்களோடு உப வேதங்கள் எனப்போற்றப்பெறும் ஆயுள் வேதம், அருத்த வேதம், தனுர் வேதம். காந்தருவ வேதம் என்னும் நான்கும் ஒருங்கிணைத்துச் சிந்திக்கத்தக்கன ஆகும்.

ஆயுர் வேதத்தின் ஆசிரியர்கள் பிரமன், அசுவினி தேவர், தன்வந்திரி முதலியோர். இதில் நோய்த்தொற்றக் காரணம்,

சிகிச்சை முறை, மருந்துகள் ஆகிய மருத்துவச் செய்திகள் தரப்பட்டுள்ளன.

அருத்தவேதம் என்பது பல ஆசிரியர்களால் உணர்த்தப் பெற்றது. சிற்பம் ஓவியம் போன்ற கவின் கலைகளும், யானை நூல், குதிரை ஆல் போன்ற விலங்குகளைப் பற்றிய . அறிவியலும் நீதிநூல்களும் இந்த அருத்த வேதத்தில் அடங்கும்.

தனுர்வேதத்தின் ஆசிரியர் விசுவாமித்திரர் எனப்படுகிறார். இது போர்க்கலை கூறும் நூலாகும். இதில் சக்கரம் போன்ற விடுபடை, வாள்போன்ற விடாப்படை, வேல் போன்ற அருவகையிலும் சேரும்படை ஆகியனவும் போர்முறைகளும் விளக்கப்பட்டுள்ளன.

காந்தர்வ வேதம் என்பது இசைநூல். இதன் ஆசிரியர் பரதர். இதில் சுரம், அராகம், தாளம் ஆகியனவும் நாட்டியம், இசைக்கருவிகள் ஆகியனவும் விளக்கப்பட்டுள்ளன.

மக்களினத்தின் சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளதாகிய நூல்களில் இன்று கிடைப்பனவற்றுள் எல்லாம் மிகக் காலப்பழமை உடையது வேதங்களே. முதன்மை வாய்ந்த நான்கு வேதங்களும் ஆறு அங்கங்கள் நான்கு துணை மறைகள் என்பனவற்றைத் தம் அரசியற் சுற்றமாகக் கொண்டு இன்றும் செங்கோல் செலுத்தி வருகின்றன. சமயத்தில் உண்மையான பற்றுடைய மெய்யடியார்கள் அனைவராலும் இந்த வைதிக நூல்கள் பொன்னேபோல் போற்றத்தக்கன ஆகும்.

செவ்வையார் நான்மறையைச் செப்பும் சிவ பெருமான்
கவ்வைகளைப் போக்கி நமைக் காத்தருள்வான் - எவ்வந்
தனை அகற்றி எந்நாளும் சாத்திரத்தில் மாறா
முனைப்புடனே நெஞ்சே முயல்.

ஆறங்கம் நான்மறைகள் ஆன சிவத்தைக்
கூறும் குருவாய்க் குறி.

உ5. விசாகப் பெருவிழா

செந்தமிழ் உலகில் கற்றோர் முதல் மற்றோர் வரை அனைவரும் எப்பொழுதும் முருகா முருகா என்று சொல்வதைக் காண்கின்றோம். தனிவழிக்கும் விழிக்கும் துணையாய் இருப்பவன் முருகன்.

கலியுகம் என்பது தீமைகளுக்கு ஆக்கம் அளிக்கும் யுகம், உறுதியைக் குலைத்து உண்மையை மறைத்து யாவும் தன்னறிவுக்கு மதிப்பு கொடுத்து, பழமைகள் யாவும் கிழவர்களுக்கே உரியவை என்று ஒதுக்குங்காலம். இத்தகைய காலத்தில் இறையுணர்ச்சி குன்றாவண்ணம் எல்லாரிடத்தும் எல்லா வகையிலும் பாதுகாத்து வருபவன் முருகன். கடவுள் உணர்ச்சியில் கருத்தூன்றாதவனும் காவடி எடுத்து ஆடுகிறான். காவடி எடுத்தவனைக் கண்டால் கசிந்து கண்ணீர் சிந்துகின்றான் முருகன்.

அன்புள்ள இடத்திலே இன்பம் உண்டு. இன்பமும் அன்பும் காரண காரியத் தொடர்புடையன, காரண காரியம் ஆகிய இரண்டுமாய் என்றும் இணைந்திருக்கும் பொருள் இறைவனே. நமது பெரியோர்கள் இந்த உண்மையை விளக்கவே இறைவனை 'இன்பமே என்னுடைய அன்பே '' என்று நமக்கு அறிவுறுத்துகிறார்கள். அன்பு ஒன்றே அவனை அடையும் நெறி ஆகும்.

அழகு முதலிய பண்புகள் யாவருக்குச் சொந்தமானவை? அனைவருக்கும் பொது. அங்கனமே நற்பண்புகள் அனைத்துக்கும் உறைவிடமான முருகனும் அனைவருக்கும் பொதுவானவன்.

முருகப்பெருமானை கலியுகத் தெய்வம் என்று போற்றுகின்றோம். கலியுகமானது முருகன் அவதரித்த நாளாகிய வைகாசி விசாகத்தன்று தோன்றியது என்று நூல்கள் சொல்லும். முருகனுக்கு பல நாமங்கள் அதில் ஒன்று விசாகன் என்ற நாமமும் உண்டு. விசாகத்தன்று அவதரித்ததால் அப்பெயர் ஏற்பட்டது. வி என்றால் 'பட்சி, சாகன் என்றால் சஞ்சரிப்பவன். மயிலாகியபட்சியில் சஞ்சரிப்பவன் எனலும் ஆம்.

விரதங்களும், விழாக்களும் வேறு வேறானவை. விரதங்கள் மன ஒருமைப்பாட்டிற்காக மேற்கொள்ளப்படுவன. விரதங்கள் உடலின் வன்மைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுவனவாகும். ' ஊனினை உருக்க உள்ளொலி பெருகும் ' உள்ளொளியே இறைவன் இறைவிளக்கமே கருணையின் பொலிவு மக்கள் எதிர் நோக்குவது எல்லாம் கருணையின் பொலிவால் கவலையற்ற வாழ்வும், என்றும் மாறாத இன்பப்பேறுகளுமே. இவற்றை எளிதில் அடைவிப்பன விரதங்களே. விரதங்களில் முருகனைப் பற்றியன மூன்று, அவை நாள் விரதம், வாரவிரதம், மாதவிரதம் என்பனவாகும். வெள்ளிக்கிழமை, கார்த்திகை, சஷ்டி ஆகியன இந்த விரதங்களில் அடங்கும்.

விழாக்கள் அனைத்தும் மக்களுக்கு இருமை இன்பத்தை அளிப்பன. எல்லா உலகங்களுக்கும் நன்மை அளிப்பன, புண்ணியமாயின. எப்போதும் வெற்றி கொடுப்பன, அமைதியை அளிப்பன, பகைவர்களை அழிப்பன வேண்டிய எல்லாவற்றையும் விளைவிப்பன. இவ்வண்ணம் மக்களைக் பாதுகாக்கும் விழாக்களுக்கு உற்சவங்கள் எனப்பெயர். உற்சவம் என்பது படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூத்தொழிலையும் குறிக்கும்.

இவ்விழாக்கள் மாதவிழா, பெருவிழா அன்பர்விழா என மூவகைப்படும் அவைகளில் எல்லா மாதங்களிலுமே கார்த்திகை, விசாகம் இந்நட்சத்திரங்கள் தீர்த்த விழாவுக்குச் சிறந்தன.

கார்த்திகை , சஷ்டி விழாக்கள் மாதந்தோறும் இந்நாட்களில் சிறப்பு வழிபாடு நடைபெறும் அதேபோல் வைகாசி விசாகத்தன்று முருகப் பெருமான் உற்சவரை நீராழி மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்து தீர்த்த விழா செய்வது மரபு.

சித்திரை, வைகாசி மாதங்கள் வெப்பம் மிகுந்த மாதம். இம்மாதங்களில் வெப்பங்களினால் மனிதர்களுக்கு பல நோய்கள் ஏற்படும். அந்நோய் நீக்கவேண்டும் என்றும், வெப்பமானது தணிந்து உலகமானது குளிர்ச்சி பெற வேண்டும் என்றும், நீராழி மண்டபத்திற்கு இறைவன்

எழுந்தருளுகின்றார். முருகப் பெருமானை 'குளிர்விப்பதன் மூலம் இந்த உலகமானது குளிர்ச்சி பெறும், மழைவளம் பெருகும், உலக உயிர்கள் நன்மை அடையும் என்றே நமது முன்னோர்கள் இவ்வைகாசிப் பெருவிழாவை எடுத்துள்ளனர். முன்னோர்கள் காட்டிய வழியிலேயே இவ்விழாக்கள் இன்றும் நடைபெற்று வருகின்றது.

ஒவ்வொரு மாதங்களில் வரும் விழாக்களிலும் இறைவனுக்கு ஒவ்வொரு விதமான அபிஷேகம் செய்வது மரபு. அதுவும் அந்தந்த மாதங்களில் எப்பொருள் அதிகம் கிடைக்குமோ அப்பொருட்களில் அபிஷேகம் செய்வது சிறப்பு. அவ்வகையில் வைகாசிப் பெருவிழாவில் முருகனுக்கு சந்தனத்தால் அபிஷேகம் செய்வது சிறப்பாகும். சந்தனம் குளிர்ச்சி ஆதலால் வெப்பம் மிகுந்த வைகாசியில் சந்தன அபிஷேகம் முருகனுக்கு செய்யப்படுகின்றது.

வைகாசியில் பெருவிழா நாளில் அனைவரும் 'முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும்' கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் மாயோன் மருகனை நாளும் வணங்கி வாழ்வில் எல்லா நலங்களும் பெறுவோமாக.

உ௬. தீபாவளி

தீபாவளி ஒரு பழமையான பண்டிகை. பல்லாண்டுகளாக இவ்விழா கொண்டாடப்படுகின்றது. எந்த ஒன்றும் பல ஆண்டுகள் நடைமுறையில் இருந்தால் மாறுதலுக்கு உள்ளாகும். என்பது இயற்கையின் நியதி. அதனால் தீபாவளி பற்றியும் பல ஐதீகங்கள் பரவியுள்ளன.

பூமாதேவியின் அம்சமான சத்தியபாமாவைக் கொண்டு ஸ்ரீ கிருட்டிணன் நரகாசுரனை வதம் செய்தார். அதன்பிறகு ஒருவருடம் கழித்து நரகாசுரனின் மகன் பகதத்தன் கிருட்டி தேவ பகவானைத் தனது நகரத்துக்கு அழைத்து வரவேற்று போற்றி மகிழ்ந்தான். அப்போது பகதத்தன் தனது நகரம் முழுவதும் தீபங்கள் ஏற்றி அலங்கரித்தான் அன்று முதல் தீபாவளி தொடங்கியது.

அதுபோல் தீபங்களை வரிசையாக ஏற்றும் திருநாள் தீபாவளி ஆயிற்று. அத்தினம் ஒருபுனித புண்ணிய தினமாகும். மாயையாகிய இருளை அகற்றி உள்ளத்துக்கு ஞானஒளியேற்றி கொண்டாடுவது நலம் பயக்கும்.

நரகன் என்ற சொல்லே கொடியபாவச் செயல்களைச் செய்யும் தீயவர்களைக் குறிக்கும். நரகன் ஒரு உயிருக்குப் பதிலாக நல்லவனின் உயிரை நான் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று புகார் நகரில் இருந்த சதுக்கப்பூதம் கூறியதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. கொடிய நரகாசுரனை கண்ணபிரான் வதைத்து உலக மக்களைக்காப்பாற்றிய நாளை நரகாசுரனின் மகனே கொண்டாடினான்.

சத்தியபாமாவின் தியாகஉள்ளம் தன் மகன் இறந்த சோகத்திலும் உலக மக்களின் நலனைப் பெரிதாக நினைத்து, அவளது வேண்டுகோளின்படியும் நரகாசுரனின் இறுதிக்கால விருப்பத்தின்படியும் கண்ணபிரான் வரம் கொடுத்து அருளினார்.

நரகாசுரன் வராக அவதாரமாக வந்த திருமாலுக்குப் பூமிதேவியிடம் தோன்றிய மகன். இவன் பிராக்சோதிபுரம்

என்பதைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான். நரகாசுரன் கண்ணபிரானால் வதம் செய்யப்பட்டான், உலகத்தை ஆள்பவனின் மகனே தவறு செய்தாலும் அவன் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்த திருமால் தானே கிருஷ்ணனாக வந்து நரகாசுரனை வதம் செய்தார். திருமாலின் காத்தல் தொழிலிலுக்கு பூமாதேவியான சத்தியபாமாவும் உடன் இருந்து உதவினாள்.

திருமால் மூன்று உலகங்களையும் இரண்டடியால் அளந்து, மூன்றாவது அடியை மகாபலியின் தலை மீது வைத்து அவனைப்பாதாள உலகில் வாழச்செய்தார். மகாபலி ஆண்டுக்கு ஒருமுறை பூமிக்கு வந்தபோது அருள் செய்யும்படியும், அந்த நாளை உலகமக்கள் அனைவரும் மகிழ்ச்சியாகக் கொண்டாடும்படியும் திருமாலிடம் வரம் கொடுத்து அருளும்படியும் வேண்டினான் திருமால் மகாபலி கேட்ட வரத்தை அருள அந்த நாள் தீபாவளியாயிற்று.

இராமபிரான், ராவணனை வென்று வனவாசம் முடித்து அயோத்திக்குத் திரும்பி முடிசூட்டிக்கொண்ட நாளே தீபாவளி என்றும் கூறப்படுகின்றது.

ஸ்ரீதரனின் முன்னோர்களைக் கடைத்தேற்றுவதற்காகவும் பூமிக்கு வளத்தைக் கொடுப்பதற்காகவும் கங்கை பூமிக்கு வந்த நாள் தீபாவளி என்று ஒரு கருத்து வழங்கிவருகின்றது. சதுர்த்தசி இரவு சிவ வழிபாட்டுக்கே உரியது. மாத சிவராத்திரியும், மகாசிவராத்திரியும் சதுர்த்தசி நாளில்தான் வருகின்றன. தனக்கே உகந்த நாளாகிய சதுர்த்தசி நாளில் சிவ பெருமான் கங்கையைப் பூமிக்குத் தந்தருளினார்.

கங்கை பகீரதனின் முன்னோர்களை முக்திக்கு அனுப்பியதோடு, பூமிக்கு வந்து நல்வளத்தை உலகமக்களுக்கு அருளினாள். அந்த கங்காதேவிக்கும், அவளை அனுப்பிய சிவ பெருமானுக்கும் நன்றி செலுத்தும் நாளாகவும் தீபாவளி விழா அமைந்துள்ளது. ஹரித்துவாரில் கங்கைக்கு இன்றும் நாள்தோறும் மாலை வேளையில் தீபவழிபாடு பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

தீபாவளி அன்று பெரியவர்களைச் சந்திக்கின்ற பொழுது கங்கா ஸ்நானம் ஆயிற்றா? என்று கேட்கும் வழக்கம் இன்றும் வழக்கில் உள்ளது. தீபாவளியன்று காசியில் கங்கையில் நீராடி காசி விஸ்வநாதரையும் தங்க அன்னபூரணியையும் வழிபடுவது சிறப்பாகும்.

நரகாசுரன் வரலாறு நமக்கு மிகத் தெளிவாகப் புகட்டும் நீதி இதுதான். ஒருவன் அறிவால் செல்வத்தால் அழகால், இளமையால், அதிகாரத்தால் மிகப்பெரும் சிறப்பை அடையலாம். ஆனால் அவன் அதைத் தவறாகப் பயன்படுத்தினால் மிகவும் இழிநிலையை அடைந்து அழிந்துபோவான். மிகக்குறிப்பாக ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்கள் வேறு வகையான துறைகளில் செல்வாக்கு மிக்கவர்கள் தம் செருக்கால் அதிகாரத்தை தவறாக செய்தால் அச்செயலே அவர்களுக்கு இறுதியை ஏற்படுத்திவிடும் என்பதுவே நரகாசுரன் வரலாற்றால் நாம் அறியும் நீதி.

நரகாசுரன் திருமாலுக்கே மைந்தனாகப் பிறந்தவன்; பேராற்றல் வாய்ந்தவன்; அளவற்ற காலம் ஆயுள் பெற்றவன்; தன்வலிமையோடு பெரும் படை வலிமையும் பெற்றவன். இத்தனை சிறப்புக்கள் இருந்தும் அவன் தன் அதிகாரச் செருக்கால் செய்யத்தகாதவனவற்றைச் செய்தபோது தந்தையாலேயே அழிக்கப்பட்ட டான் .

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றின் அனைய செயின் (965)

என்னும் வள்ளுவர் வாய்மைக்கேற்ற உதாரணமாகவே நரகாசுரனின் வரலாறு திகழ்கிறது.

தீபாவளி பண்டிகை இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டாலும் இதோடு தொடர்புபடுத்தி நரகாசுரனைக் கூறும் மரபு தென்னாட்டில் மட்டுமே காணப்படுகிறது. தீபாவளி தினத்தில் இல்லங்களில் அதிகாலையில் தீபமேற்றி வைத்தால் அவ்வொளியில் திருமகள் வாசம் செய்து அனைத்து செல்வங்களையும் நல்குவாள். இன்றும் நமக்கு ஞான ஒளியை ஞானப்பிரகாசத்தை அளிக்கும் விழா என்பதே தீபாவளியின் தத்துவப் பொருளாகும்.

எந்த ஒரு திருவிழாவாக இருந்தாலும் அதனை வெற்றுச்சடங்காக வீணடித்துவிடாமல் மக்களின் சமுதாய, ஆன்மீக முன்னேற்றத்திற்கு இன்றியமையாத சில சிந்தனைகளை அத்துடன் இணைக்கும் ஒப்பற்ற அறிவுடைமையின் வழிபாடே அத்தீப வழிபாடு ஆகும்.

எல்லோருக்கும் இன்பம் கூடட்டும்; துன்பம் விலகட்டும்.

27. வள்ளுவரும் வண்ணச்சரபரும் காட்டும் கொல்லாமை நெறி

திருக்குறள் பற்றிய செய்திகள் யாவரும் அறிந்ததே. வருக்கக்குறள் என்பது வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் அருளிச் செய்யப்பெற்ற ஒரு நீதி நூல். இறைவழிபாடு, இல்வாழ்வின் சிறப்பு, துறவின் மாட்சி, அரசியலறம், கல்வி, ஊழ். உழவு. மழை, நிலையாமை, மோட்சம் ஆகிய நீதிக் கருத்துகளை வலியுறுத்தியுள்ளார். ஔவையார், திருவள்ளுவர் ஆகியோரின் நன்னெறிகளை வண்ணச்சரபம் சுவாமிகள் புகழ்ந்துள்ளார்.

ஔவையோடு வள்ளுவனும் ஆராய்ந் துரைத்த நெறி
செவ்வையெனத் தேர்ந்தோர் சிலர்.

கொல்லாமை என்பது அறம். துறவியர்கள் அறங்களையும், விரதங்களையும் மேற்கொள்ள வேண்டும், விரதங்களில் கொல்லாமையை மேற்கொள்வது செயற்கரியது ஆகும். அறவினை என்பது பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்காதது, வள்ளுவர் வலியுறுத்துவது கொல்லாமை, பொய்யாமை ஆகிய இரு அறங்களை, அதில் கொல்லாமைக்கு முதன்மை கொடுக்கின்றார்.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று

தன் உயிரே போக நேர்ந்தாலும் பிறருடைய உயிரை அழிக்கும் செயலைச் செய்யக்கூடாது.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை

வண்ணச்சரபம் சுவாமிகள் தமது நூலில்,

கொல்லும் தொழில்போல் கொடும்பாவம் இல்லை எனச்
சொல்லும் சொல் பன்னல் துணிவு (வ.கு 40)

எனக் கொல்லாமையைப் பிற நூல்கள் போற்றுவதைக் கூறுகின்றார்,

உடம்பை வளர்த்துக் கொள்ளுவதற்காக கொல்வதை வள்ளுவர் ஒப்பவில்லை.

தன் ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?

இதையே வருக்கக்குறளில் சுவாமிகள்

புல் கறிப்பால் நீடும் புலாலும் புசிக்கும் அவர்
அற்கை விழை வார்எம் மலர்

என்கின்றார்.

உயிரிரக்கச் சிந்தனை உள்ள எவரும் பிற உயிரைக் கொன்று புலால் உண்ணமாட்டார்கள். ஆனால் உலக உயிரியல் வாழ்க்கை இயல்பு ஒரு உயிரியை மற்றொரு உயிரி உண்டு வாழ்வதாகவே உள்ளது. மனித வாழ்க்கையிலும் இது மிகுதியாகவே உள்ளது. கொல்லாமைக் கோட்பாட்டின் ஜீவகாருண்யச் சிந்தனையை மனிதனிடம் உருவாக்கவும், நடைமுறைப் படுத்தவும் தேவையான அடிப்படை அறங்களை வலியுறுத்த வேண்டும். நாமும் கடைபிடிக்க வேண்டும்.

வேள்வியில் உயிரிகளைப் பலியிட்டு மேன்மை அடையமுடியும் என்பது சிலரின் கருத்து, அதை வள்ளுவர் அவிசொரிந்து ஆயிரம் வேட்டல்! என்கிறார். கொலை வேள்வி செய்வதை விட ஒரு உயிரைக் கொன்று உண்ணாமையே நன்று என்பது வள்ளுவர் வகுக்கும் அறநெறி வேள்விக் கொலையைத் தண்டபாணி சுவாமிகளும் ஏற்கவில்லை.

வள்ளுவர் துறந்தவர்களுக்குள் கொல்லாமையை மேற்கொண்டு ஒழுகுபவன் சிறந்தவன் என்றும் கொல்லாமையைக் கடைபிடிப்பவன் வாழ்நாள் கருங்காது என்றும் கூறுகிறார்.

வண்ணச்சரபம் சுவாமிகள் கொல்லாநெறியை மேற்கொள்ளுபவனுக்கு இவ்வுலகில் எவ்வித அச்சமும், (அதாவது மன்னனாலும் ஊழ்வினையாலும் ஏற்படும் அச்சங்கள்) ஏற்படாது என்கின்றார்.

இராசபயம் தெய்வபயம் என்னும் இரண்டும்
வராவுயிர் கொன்று உண்ணாதார் மாட்டு

மனிதன் இவ்வுலகில் அச்சங்கள் நீங்கி உயிர் நிலை பெற்று வாழக் கொல்லாமையே காரணமாக அமைவதை இவ்விரு நூல்களும் வலியுறுத்துகின்றன.

துறவறத்தோருக்குச் சிறப்பாகச் சொல்லப்படுவன கொல்லாமையும் புலால் உண்ணாமையும் இரு நூல்களிலிருந்தும் இதனை அறிய முடிகின்றது. இந்நெறியைப் போற்றிப் பின்பற்றுவதோடு பிறர்க்கும் எடுத்துரைத்துப் பின்பற்றச் செய்பவர்களே உண்மைத் துறவிகள் என்பதை

ஊனருத்தல் தீதென்று உறுத்தாதார் உள்ள
நன்மை ஞானமுற்றும் 'தேரில் நகை (வ. கு)

என்று வண்ணச்சரபர் வலியுறுத்துகிறார்.

வள்ளுவரைப் போற்றி வழிபடும் வண்ணச்சரபர் அவரை ஒட்டியே பல கருத்துக்களையும் தம் நூல்களில் கூறியுள்ளார்.

28. முக்தி தரும் ஆன்மீகம்

உலகத்திலுள்ள மக்கள் வீடு பேறு அடைவதற்குச் சாதனமாக இருந்து உபசரிப்பது அறம் ஒன்றே யாம். நாம் சம்பாதித்த பொருள் இப்பிறப்பில் மட்டும் உதவி செய்யும், நாம் செய்யும். அறமே மறுமைக்கும் உதவி செய்யும். அதனால் அன்றே ஔவைப் பிராட்டி நமக்கு உபதேசிக்க வந்தபோது முதலில் 'அறஞ்செய்ய விரும்பு' என்று வற்புறுத்தியுள்ளார்கள். அந்த அறமானது திறப்பட்டுள்ளது. அவற்றில் தானம், தருமம் என்ற இருவகை சிறந்து விளங்குகின்றன. தான, தருமம் அறம் செய்கின்றவர்கள் வீடுபேற்றைப் பெறுகின்றனர்.

தருமம் என்ற ஒரு பொருள் இருக்கின்றது அது அழிவில்லாதது. இம்மை, மறுமை என்ற இரு நலன்களையும் எளிதில் தரவல்லது. அது அருமையானது. இதனை உத்தமர்களே உணர்வார்கள். அனைவரும் தங்களால் இயன்றளவு தருமம் செய்ய வேண்டும். தருமம் செய்தால் அன்பு உண்டாகும். அன்பு அருளை உண்டாக்கும். அருள் உண்டானால் தவம் என்ற உயர்ந்த பலன் கிடைக்கப் பெறலாம். தவத்தினால் தெளிவு பெற்று உயிர் சிவத்தைச் சேரும். தவத்தைச் செய்தவர் சிவத்தைப் பெறுவர்.

தருமமே போற்றிடில் அன்பு சார்ந்திடும்
அருள்எனும் குழவியும் அணையும் ; ஆங்கிவை
வருவழித் தவமெனும் மாட்சி எய்தும்; மேல்
தெருளுறும் அவ்வுயிர் சிவத்தைச் சேருமால்

இங்ஙனம் பல்லூழி காலங்களாக இந்த உயிர் திக்குத் திசையும் தெரியாது வழியும் குழியும் அறியாது, யாது அலைந்து திரிந்து துன்புற்று யாத்திரை செய்து இப்போது அந்த யாத்திரை முற்றுப் பெறுகின்றது. சிவப்பேறு என்ற ஒன்றில் சிவ யாத்திரை முடிவு பெறுகின்றது.

அப்போது பிறவிப்பணி தீரும். பிறவிப் பிணி நீங்கினால் பேரின்பம் உண்டாகும். மும்மலம் நீங்கும் அந்த இன்பத்தின் பெருமையை அளவிட முடியாது. ஆகவே

அறிவுடையவர்கள் நல்ல தவம் செய்ய வேண்டும்.தவம் என்ற ஒன்றே உயிருக்கு உறுதி செய்வது. இம்மை மறுமை நலங்களைத் தரவல்லது. திருவருள் பேற்றைத் தந்து இன்பத்தை நல்கும்.

ஆதலில் பிற்பகல் அருமையால் புரி,
மாதவம் இம்மையும் மறுமையுந்தரும்
ஏதுவதாகுமால் இருமையும் பெறல்
ஆதியம் பகவனத் அருளின் வண்ணமே

இந்த இனிய தவத்தினைச் செய்து வீடு பெற்றவர் சிலர் தான். தேவர்களும் திருமாலும் பிரமதேவனும் தவஞ்செய்தே மேலான அப்பதவிகளைப் பெற்றார்கள். அன்புடன் தவஞ் செய்யவேண்டும்.

இத்தவத்தின் இயல்பைக் கூறியும் பலர் உயிர்க்கொலை , புலை, களவு, காமம், சூது, வாது வஞ்சனைகளைக் செய்து பிறந்து இறந்து உழல்கிறார்கள்.

அறிந்திவை உரைப்பினும் அவனி மாக்கள்தாம்
மறங்கொலை களவோடு மயக்கம் நீங்கலாக
துறந்திடு கின்றனர் துன்பம் அற்றிலர்
விறந்தனர் இறந்தனர் முத்தி பெற்றிலர்.

நீங்கள் அவநெறி சேராமல் தவநெறி சேருங்கள், பிறப்பிறப் பென்னும் பேதமையை நீக்கி, சிறப்புச் செல்வமாகிய சிவத்தைச் சாருங்கள். சிவம் தவம் என்ற ஒன்றால் கிட்டும் தவத்திற்கு நிகரானது ஒன்றுமில்லை, அதற்கு மேலானதும் இல்லை, அதனினும் அரியதும் இல்லை தவத்திற்கு தவமே சமன் ஆகும் .

முன்வினையால் வந்த துன்பங்களைத் தாங்கிக் கொள்வதும், மற்றொரு உயிருக்குத் தீங்கு செப்பாது இருந்தாலும் தவத்தின் அங்கங்களாம்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.

நமக்கு இறைவன் தந்த வாழ்நாள் சிலவே. ஒவ்வொரு நாளாகக் கழிந்து கொண்டே போகின்றது. பொழுது விடிந்து பொழுது போனால் வாழ் நாளில் ஒரு நாள் வீணாகி விடுகின்றது.

ஆறு நாளில் கண்ணப்பர் முத்தி பெற்றார் என்று அறிகின்றோம். அதிதீவிரமாக இறைவனிடத்தில் அன்பு செலுத்தினால் கண்ணப்பர் பெற்ற பேற்றை நாமும் பெறலாம்.

இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? ஆதலால் இறைவனிடத்தில் அன்பு செய்ய வேண்டும். மால் என்றால் அன்பு மால் ஆனார்க்கு அவன் எளியவன் அன்பு செய்வார் நெஞ்சில் நீங்காது நிற்பான்.

எனவே எல்லையில்லாத காலமாக நிழல்போல் தொடர்ந்து வந்து இடர் தருகின்ற பிறவி நிழல் விலகத் தவஞ்செய்து சிவபெருமானுடைய திருவடி நிழலைச் சார்ந்து உய்வு பெறுங்கள்.

வெந்துயரந்தரும் சிந்தையை அடக்கி செந்தண்மை பூண்டு, அந்தமிழில் அருந்தவம் புரிந்து அந்த வண்ணனுடைய கந்தமலர்க் கழல் பெற்று பேரின்ப பெருவாழ்வைப் பெறுவோமாக.

29. மெய்ப்பொருள்

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (355)

மெய்ப்பொருள் என்பது மெய், பொருள் என்னும் இரண்டு சொற்களால் ஆகிய தொடர். மெய் என்றால் உண்மை, அதாவது உளதாம் தன்மை. பொருள் என்பது பண்டம், அல்லது ஒரு சொல்லின் பொருள் இருபொருள் தரும். எனவே மெய்ப்பொருள் என்பதற்கு உண்மையில் உள்ள ஒரு பண்டம் அல்லது ஒரு சொல்லின் சரியான பொருள் என பொருள் கொள்ளலாம். மெய்ப்பொருள் என்னும் தொடர் சமய உலகில் இப்பொதுப் பொருளோடு நின்றுவிடாமல், ஆழமான வேறு பொருளையும் தருமாறு ஆளப்பட்டுள்ளது.

தமிழ்மறை ஆகிய திருக்குறளில் மெய்ப்பொருள் என்னும் தொடர்;

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் ; தேரின்
அருளாதான் செய்யும் அறம் (249)

கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி (356)

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (423)

மிகல் மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவினவர் (857)

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என ஐந்து இடங்களில் பயிலப்பட்டுள்ளது. இவற்றுள் உண்மையான நீதி நூல்களில் சொல்லப்பட்ட அல்லது பிறரால் உரைக்கப்பட்ட வாக்கியப் பொருள் என்னும் பொதுப்பொருள் நான்கு குறட்பாக்களுக்குப் பொருந்துகிறது.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்னும் குறளின் உரையில் மெய்ப்பொருள் காண்பது என்பதனைப் பரிமேலழகர், 'பொருள் தோறும் உலகத்தார் கற்பித்துக் கொண்டு வழிபடுதலையே தம் உயிர்க்கொள்கையாகக் கொண்டிருந்தார். தில்லைக் கூத்தப்பெருமானின் அடியராக இருந்த அவரைச் சேக்கிழார் பெருமான்,

திரைசெய் நீர்ச் சடையான் அன்பர் வேடமே சிந்தை செய்வார் (2) என்றே அறிமுகப்படுத்துகிறார். தன்னைக் கொல்லவந்த பகைவன் ஆகிய முத்தநாதன் தன் எண்ணத்தை முடித்துக்கொண்ட பிறகும் அவ்வேடத்தைப் போற்றும் மெய்ப்பொருள் நாயனார் அத்தீயவனைப் பாதுகாப்பாகத் திரும்பச்செய்தார் இந்த செயற்கரும் செயலைத் தெய்வச் சேக்கிழார்.

மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது வென்றார் என்கிறார். முத்தநாதனுடைய வேடம் போலியாக இருக்கலாம். ஆனால் சிவசின்னங்களை தன்னால் வழிபடற்குரியது என்னும் தம் கொள்கையில் நிலைத்து நின்றதால்தான் அவர் வென்றார் என்று சொல்லப்படுகிறார். சிவசின்னங்கள் மெய்ப்பொருள் எனப்போற்றியதால் அந்த சேதிநாட்டு அரசர் மெய்ப்பொருள் நாயனார் என்னும் சிறப்புப் பெயராலேயே வழங்கப்படுகிறார்; அவருடைய இயற்பெயர் வழக்கொழிந்துவிட்டது.

''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்'' என்னும் சேக்கிழாரின் செம்மொழியும், ''வேதமும் முடிவு காண மெய்ப்பொருள்'' என்னும் கம்பர் வாக்கும் பரம்பொருள் என்றே பொருள் தருவதை அறியமுடிகிறது.

30. எல்லாம் சிவமயம்

இறைவன் என்ற சொல் இறு என்ற பகுதி அடியாகப் பிறந்தது. எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்து உள்ளான். எல்லாம் அவனிடத்திலேயே இருக்க, அவன் அவைகட்கு உறைவிடமாக இருக்கின்றான். இது இறைவனுடைய மிகப்பெரும் அருட்காட்சி.

சிவப்பரம்பொருள் எங்கெல்லாம் நீக்கமற நிறைந்துள்ளார் என்பதை அப்பர் பெருமான் அழகாக படம்பிடித்துக் காட்டுகிறார். உலகிலே ஏற்படுகின்ற ஓசைகளிலே, சப்தங்களிலே, ஒலிகளிலே, இறைவனுக்கு சூடுகின்ற நறுமணம் நிறைந்த மலர்களிலே, காணுகின்ற மலைகளின் வடிவங்களிலே, நாம் பேசுகின்ற இனிய சொற்களிலே, எரிகின்ற தீப ஒளிகளில் எல்லாம் இறைவன் உள்ளான்.

ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீயே,
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே,
வாசமலரெல்லாம் ஆனாய் நீயே,
மலையாய் மருகனாய் நின்றாய் நீயே,
பேசப் பெரிதும் இனியாய் நீயே,
பிரனாய் அடியென் மேல் வைத்தாய் நீயே,
தேச விளக்கெல்லாம் ஆனாய் நீயே.

என்கின்றார் அப்பர் பெருமான்.

மணிவாசகர் கூறும்போது வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாய், உயிராய், உண்மையுமாய், இன்மையுமாய் என்கின்றார்.

இப்படி இறைவன் எல்லாப் பொருள்களிலும் தங்கவேண்டுமானால் சிறிய மிகச்சிறிய பொருளாக இருக்கின்றான். மேருகிரி முதலிய பொருள்கள் யாவும் அவனிடத்திலேயே தங்கும்படி அப்பெருமான் மிகப்பெரிய பொருளாக விளங்குகின்றான்.

அணுவுக்கு அணுவாக விளங்குபவன் இறைவன்.

ஒரு பழங்கதை, பழக்கதை யாவரும் அறிந்தது. இறைவனிடத்திலே ஒரு கனி. உலகை முதலில் வலம் வருபவர்களுக்கு இக்கனி தரப்படும் என்று இறைவன் அருளினார். முருகப்பெருமான் மயில் மீது ஏறி உலகை வலம் வந்தார். விநாயகப்பெருமான் தாய் தந்தையரைச் சுற்றி வந்து கனியைப் பெற்றார் இது கதை. இதன் தத்துவம் எதை உணர்த்துகின்றது.

தந்தைக்கு உபதேசித்த தயாபரனுக்கு சிவத்துக்குள் எல்லாம் ஒடுக்கம் என்பது தெரியாதா? தெரியும். எல்லா உயிர்களையும் சர்வ வல்லமையுடைய வல்லபை விநாயகரால் வலம் வர இயலாதா? இயலும். இன்னும் இதுபோல் பல வினாக்கள் எழும் இவற்றிற்கான விடை

இறைவனைப்பற்றி நாம் என்ன சிந்தித்தோம்?' எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் அவன் தங்கி இருக்கின்றான்', 'அவனிடம் எல்லாம் தங்கியிருக்கின்றன' என்று இருவிதமாக நினைத்தோம் அல்லவா?

சிவத்துக்குள்ளே எல்லாவற்றையும் பார்த்தார் விநாயகர். எல்லாவற்றுக்குள்ளும் சிவத்தைப் பார்த்தார் முருகர். இந்த அரிய பெரிய உண்மையை உணர்த்துகின்றது அப்பழங்கதை. இதனை தாயுமானவர் கூறுகின்றார்.

'அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த மூர்த்தியாகி
அருளொடு நிறைந்தது எது? தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும்படிக்கு இச்சை வைத்து உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது.

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றனோ? உலக மாயை அவனைப் பற்றாதோ? என்ற வினா எழும். உப்பு விளைகின்ற இடம் கடல், அந்நீரில் வாழ்கின்ற மீனுக்கு உவர் ஏறுவதில்லை. அதுபோல் இறைவன் யாண்டும் உறைகினும் உலக மாயை அவனைப் பற்றாதென உணர்க.

எங்கும் நிறைந்த பொருள் இறைவன் என்றால் ஏன் அது நமது கண்ணுக்குள், தெரியவில்லை? என்பாரும் உளர். விறகிலே நெருப்பு இருக்கின்றது, பாலில் நெய் இருக்கின்றது. ஆனால் கண்ணுக்குத் தெரிகின்றனவா? இல்லை. விறகிலே நெருப்பும், பாலில் நெய்யும் கண்ணுக்குத் தெரியாமையால் இல்லையென்றால் நமக்கு அறிவு இல்லை என்று உலகம் சிரிக்காதா?

விறகை கடைந்தால் நெருப்பு வெளிப்படும், பாலைக் கடைந்தால் நெய் வெளிப்படும். அதுபோல் தியானம் புரிந்தால் இறைவன் வெளிப்பட்டுக் காட்சி தருவான். சாதனைகள் செய்தால் தேவரும் மூவரும் காணமாட்டாத சிவம் தானே வந்து வெளிப்பட்டுத் தோன்றும்.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியும், மற்றவர் அறியா மாணிக்க மலையும் ஆகிய இறைவன் 'சாருப நிலையில் ' சிவம்' என்று பேர்பெறுகின்றான்.

இறைவனும் உலகமும் ஒன்றி நிற்குங் கலப்பினால் ஒன்றாகியும், பொருள் தன்மையால் வேறாகியும், உலகத்துக்கு உதவும் பொருட்டு உடனாகியும் இறைவன் ஒன்றாகி, வேறாகி, உடனாகி நிற்கின்றான்.

இந்த விரிந்த கருத்துக்களை மெய்கண்டார் சுருங்கிய சொற்களால் 'அவையே தானேயாய்' ஈறு கூறியுணர்த்துகின்றார்.

ஈறாய் முதல் ஒன்றாய் இரு, பெண் ஆண்குணம் மூன்றாய் மாறாமறை நான்காய் வருபூதம் வை ஐந்தாய் ஆறாய் சுவை ஏழோசையோடு எட்டுத்திசை தானாய் வேறாய் உடன் ஆனன் என்று ஞானசம்பந்தர் விளக்குகின்றார்.

எனவே உயிர்களை உய்விக்கும் பொருட்டு இறைவன் ஒன்றாய், வேறாய், உடனாய் நின்றான். காணுகின்ற அத்தனையும் எல்லாம் சிவமயம் என்பதை நாம் அறிகின்றோம்.

எல்லாமாய், அல்லதுமாய் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம் பொருளை வழிபட்டு அனைவரும் எல்லா நலங்களும் பெறுவோமாக.

31. கண்ணப்பரைத் தந்த கந்தவேள்

ஞானமே வடிவாகிய முருகப் பெருமானை இணையற்ற பரம்பொருளாக வழிபடும் நெறி கௌமாரம் ஆகும். ஈசனோடாயினும் ஆசைஅறுத்து விடும் வேண்டா விறலினர் ஆகி அன்பு செலுத்துவதை மட்டுமே பயனாகக் கொள்வது சமயவாழ்க்கையின் மிக உயர்ந்த இலட்சிய நிலை. இது பலகோடியில் ஒருவருக்குக் கூடவாய்ப்பது அரிது.

இறைவழிபாட்டின் தொடக்கநிலை துன்பநீக்கத்தையும் இன்ப ஆக்கத்தையும் எதிர்பார்ப்பதாகத் தான் அமையும். இது தவிர்க்க முடியாததுமாகும். இதனால் தான் நம் அருளாளர்கள் அனைவரும்.

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்.
எண்ணில் நல்ல கதிக்கு யாதும்ஓர் குறைவு இலை'

(தேவாரம் 3- 24-1)

வேண்டுவார் .வேண்டுவதே ஈவான் கண்டாய்

(தேவாரம் 6-23-1)

இம்மையே தரும் சோறும் கறையும் .
எத்தல் ஆம் இடர் கெடவம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயறவு இல்லையேல்

(தேவாரம் 7 - 34 - 1)

சகலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருகும்.
அருளொடு பெருநிலம் அளிக்கும்

(நாலாயிரம். பெரிய . 1-1-9)

அடியவர் இச்சையில் எவை எவை உற்றன ' '
அவைதரு வித்தருள் பெருமாளோ

(திருப்புகழ் 733)

என அருளிச் செய்துள்ளனர். இதனால் இறைவனிடம் எதையாவது வேண்டி வழிபடுதலைப் பழித்துரைப்பது அறிவுடைமையாகாது

தன் தேவையை இறைவனிடம் வேண்டி நிறைவேற்றிக் கொள்ள முயல்வது ஞானத்தின் முதல்படி என்பது வண்ணச்சரபம் சுவாமிகளின் கருத்து.

'நாசிச் சரத்தை நடத்தும் கடவுளை தேக (௪)
யாசிக்கை ஞானம்என் றுந்தீபற !

என்பார் அவர். ஒரு பயனை வேண்டி அதற்காகச் செய்யும் வழிபாடு நேர்த்தி, பராய்க்கடன், காயம் என்று பல பெயர்களால் கூறப்படும். கைம்மாறு (காமியம்) கருதாத இறையன்பு பக்தி ஆகும்.

கலியுக வரதனாம் கந்தக் கடவுள் அடியார்களுக்கு நல்லன எல்லாம் தருபவன். என்றாலும் மகப்பேறு இல்லாதவர்கள் குமாரக் கடவுளை வேண்டினால் நன் மக்களைப் பெற்று மகிழ்வர் என்பது இன்றும் கண்கூடான உண்மை. தனயர்களை வேண்டுவோர் சட்டி விரதம் இருந்து பயன் பெறுகின்றனர். இது பற்றி எழுந்ததே ''சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்'' என்றும் முதுமொழி. பாத்திரத்தில் இருந்தால்தான் கரண்டியில் எடுக்க இயலும் என்னும் வெளியான பொருள் கூறுவதன்று இப் பழமொழி. சட்டிதிதியில் சண்முகனை நினைந்து நோன்பிருந்தால் கருப்பையில் மகள் தோன்றும் என்பதே இதன் மெய்ப்பொருள்.

கந்தனை வேண்டிக் கான்முளை பெறுதல் என்னும் வழிமுறை தமிழ்நாட்டில் மிகப்பழங் காலந்தொட்டே நடைமுறையில் இருந்து வருகிறது என்பது பெரியபுராணத்தால் உறுதியாகிறது. கண்ணப்ப நாயனார் மிகப் பழங்காலத்தில் வாழ்த்திருந்தவர். அவர் பொத்தப்ப நாட்டு உருப்பூர் என்னும் பழைய ஊரினர். காஞ்சித் திணையைச் சேர்ந்த அவருக்குத் தலைவன் நாகன் என்பான். அவனுடைய மனைவியின் பெயர் தத்தை.

வேடர்குலத் தலைவனாகிய நாகன் தத்தையோடு திணையொழுக்கம் குன்றாமல் - தன் பிறப்பொழுக்கத்தில் மாறுபடாமல் வாழ்ந்து வந்தான் என்கிறார் சேவையர் காவலர்

பெற்றியால் தவம்முன் செய்தா
னாயினும் பிறப்பின் சார்பால்
குற்றமே குணமா வாழ்வான்;
கொடுமையே தலை நின் உள்ளான்:
விற் றொழில் விறலின் மிக்கான்:
வெஞ்சின மடங்கல் போல்வான்;
மற்றவன் குறிச்சி வாழ்க்கை
மனைவியும் தந்தை என்பாள்.

(பெரிய . கண்ணப்ப .8)

நாகனும் தத்தையும் இல்லற வாழ்க்கையில் நீண்ட நாள் இணைந்திருந்தும் அவர்களுக்கு மக்கட் பேறாம் நன்கலம் வாய்க்கவில்லை. இனிமேல் மக்கட் பேற்றுக்கே வழியில்லை! என்னுமளவிற்கு வயது முதிர்ந்து விட்டதால் அனைவரும் இனி குழந்தை பிறக்காது என்று கூறத் தொடங்கிவிட்டனர். இந்நிலையிலும் தங்களுக்கு மைந்தன் வேண்டும் என அத்தம்பதியர் ஆசைப்பட்டனர்.

அதனால் நாகனும் தத்தையும் முருகக் கடவுளை வழிபட்டு, மக்கட்பேற்றை வேண்டி, முறைப்படி நோன்பிருந்தனர் என்கிறார் சேக்கிழார் பெருமான்.

பொருவரும் சிறப்பின் மிக்கார்
இவர்க்கினிப் புதல்வற் பேறே
வசியர்கன் றெவரும்
அதற்படு காத லாலே
முருகலர் அலங்கல்ச் செவ்வேல்
மருகவேள் முன்றில்ச் சென்று
பரவுதல் செய்து நாளும்
பராய்க்க டன் நெறியில் நிற்பார்

தொண்டர்சீர் பரவுவார் இத் திருவிருத்தத்தில் பராய்க்கடன் நெறியில் நிற்பார் எனக் கூறுவது ஆழ்ந்து நோக்கத்தக்கது. மக்கட்பேறு வேண்டி முருகப் பெருமானை வழிய நீவதற்காகத் தனியான ஒரு நெறிமுறை அக்காலத்திலும் நடைமுறையில் இருந்தது என்பதை இது தெளிவாக்குகிறது. ஆனால், அந்தப் பராய்க்கடன் நெறி (விரத பத்ததி) , என்ன, என்பது இந்த நூலில் விளக்கப்படவில்லை

கண்ணணை வாரவச் சேவ லோடும்
வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரன மணிகன் தூக்கிச்
கரும்பணி கதம்பம் நாற்றிப்
போரன் நெடுவே லோற்குபட
புகழ்புரி குரவைட தங்கப் பட்ட பக்
பேரனங் காடல் செய்து
பெருவிழா எடுத்த பின்றை

(மேலது. 11)

'எனக் கூறப்பட்டுள்ளது. பொதுவான குறிஞ்சிநிலக் குமரன் வழிபாடேயன்றிச் சிறப்பான 153 நோன்புநெறி ஆகாது என்னை?

மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையிலும்
ஆண்டலைக் கொடியாடும் மண் அமைவர்.
நெய்யோ டையவி அப்பி ஐதுரைத்துக் கட்ட ஃபது.
கடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி.
முரண்கொள் உருளின் இரண்டுடன் உடீஇக்
செந்நூல் யாத்து வெண் பொரி 'சிதறி
மதவலி நிலை இய
குருதியொடு விரைஇய தூ வெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரிஜச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தன் கணவீர நரம்தான் மாலை
துனை அற அமத்துத் தங்க நாற்றி.
நளிமலைச் சிலம்பின் நல் நகர் வாழ்த்தி

நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவினொ டின்னியம் கறங்க
உருவப் பல்பூத் தூ உம் வெகுவரக்
கருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்:
முருகிய நிறுத்து முரணினர் உட் பார்ட்டி
கால் முருகாற்றுப் படுத்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபடல்)
-திருமுருகாற்றுப்படை 226-248

குறிஞ்சி நில மக்கள் குமரனை வழிபடும் பொது நெறியாதலின் என்க.

திருத்தொண்டர் மாக்கதையின் சட்டைக்கையே நுட்பமாக நோக்கினால் நாக்குப்யும் முதலில் முருகப் பெருமானை வேண்டி மகப்பேற்றுக்காக அதற்கே உரிய சிறப்பு நோன்பில் சில நாள் ஈடுபட்டிருந்தனர் எனப் புலனாகிறது. இதைத்தான் பெரிய புராணம் நாகும் பராய்க் கடன் நெறியில் நிற்பார் (10) எனக் குறிப்பிட்டுள்ளது. இந்தச் சிறப்பு நெறியில் பராய்க்கடன் நோன்பை முற்றுவித்த பிறகு வெளிப்படையாக விழா எடுத்து அவர்கள் முருகு ஆற்றுப்படுத்தினர் எழுந்தருள்வித்தனர் என்பதுதான் பெரிய புராணச் செய்தி.

நோன்பும் விழாவும் முடிந்த பின்பு முப்புரம் எரித்த முதல்வனின் குமாரனாகவும் விளங்குகின்ற முருகப் பெருமானின் திருவருளால் தந்தை கருவுற்றான். இதை அறிந்த உடனே நாகன் (தான் பராய்க்கடன்நெறியில் நின்று முன்டி வேண்டிக்கொண்டபடி).

கவனம் இல் பலிகள் போக்கி .
உறுகடன் வெறியாட் டோடும் ஒப் (2.- 4.3) 3)
(பெரிய. கண்ணப்ப .13)

செலுத்தினான். மகப்பேறு அளித்தால் இன்னது செய்வேன் என முன்னர் வேண்டிக் கொண்டது குறைவற்ற பலிகள் ஆகிய உறுகடன். இந்தச் சிறப்பு நேர்த்திக் கடனோடு குறிஞ்சிக்குரிய வெறியாடலாகிய பொதுவழிபாட்டையும் செய்தான் எனச் சேக்கிழார் பெருமான் தனித்தனியாகப்

பிரித்துக் கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். எப்போதும் வழக்கமாகச் செய்யப்படுவது வெறியாட்டு என்பதால் தான் அதை ஒடுக் கொடுத்துப் பிரித்துக் காட்டியுள்ளார். இதனால் மகப்பேறு வேண்டி முருகக் கடவுளை நினைந்து நோன்பிருத்தலும் விருப்பம் நிறைவேறிய பிறகு பிராத்தனையைச் செலுத்துவதும் தமிழகத்தில் மிகத் தொன்மையான வழக்கம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்குகிறது.

குமரப்பெருமான் அருளினாலே தத்தை கருவுற்றாள் எனக் கூறும் குன்றையர் கோமானின் பாடல் சிந்தைக்கினிய ஓர் இலக்கிய விருந்தாக்கம். அதனைச் சற்று நோக்குவோம்.

முருகவேள் முப்புரம் எரிசெய்த முதல்வனின் மைந்தர் ஆனவர் என்கிறார் சேக்கிழார். இதனால் தன்னை மைந்தனாகப் பெற்றதால் சிவபிரான் அடைந்த மகிழ்ச்சியை அறிந்துள்ள முருகன் அந்த மகிழ்ச்சியைத் தன்னைச் சரணடைந்துள்ள நாகனுக்கும் அளிக்க முன்வந்தார். என்பது குறிப்பு. முப்புரமாவது மும்மல காரியம் ஆதலின் மலங்களின் வலிமையை அடக்கிய சிவபெருமானுடைய அம்சமான முருகனின் வரத்தால் பிறந்ததால்தான் கண்ணப்ப நாயனார் கண் இடந்து அப்ப முன்வருமளவு பக்குவம் அடைந்தார் என்பதும் இந்த அடைச்சொற்களின் கற்றலால் பெறப்படுகிறது. வரைபகை எறிந்த திண்மை சேர் வேலனின் அருளினால் தோன்றியதால்தான் குழந்தை திண்ணனாக இருந்தான் என்பதையும் பெரிய புராணத் திருவிருத்தம் மிக அட்பமாகப் புலப்படுத்துகிறது.

குமாரக் கடவுளாகத் தோன்றியவர் ஆதலின் பிள்ளை வரம் தந்தார்: மலத் தொடர்பு அற்றவரின் அருளால் பிறந்த மகன் மிக எளிதில் இறைவனின் பேரன்பன் ஆனான்; அவனிடம் வெற்றிவடிவேலனின் தன்மையும் அமைந்தது எனக் குறிப்பால் உணர்த்தும் திருப்பாமாலை நவில்தொறும் மிகுகின்ற நூல் நயம் உடையதோர் கவிதை ஆகும்.

பயில்வடுப் பொலிந்த யாக்கை
　　வேடர்தம் பதியாம் நாகற்கு
எயிலுடைப் பரங்கள் செற்ற
　　எந்தையார் மைந்த ரான
மயிலுடைக் கொற்ற ஊர்தி
　　வரைஉரம் கிழிந்த திண்மை,
அயிலுடைத் தடக்கை வென்றி
　　அண்ணலார் அருவி னாலே ,
கானவர் குலம்வி ளங்கத்
　　தத்தைபால் கருப்பம் நீடா.

(மேலது . 12, 13)

மைந்தரான, திண்மை கொண்ட என்றும் பொருள் பொதிந்த இரண்டு அடைச் சொற்களால் இவ்வளவு பொருள்வளத்தைத் தரும் சேக்கிழார் பெருமானின் புலமையாற்றல் போற்றத்தக்கது.

32. ஆறுமுகச் செவ்வேள்

முருகன் என்ற பதத்தின் பொருள்:

முருகன் - என்பதற்கு முருகினை உடையவன் என்பது பொருள். முருகு என்பதற்கு அழகு, இளமை, மணம், தேன், கடவுட்டன்மை என்பன பொருள்களாம். ஆகவே 'முருகன்' என்ற பதம் என்றும் அழியாத அழகினை உடையவன் என்றும், என்றும் மாறாத இளமையினை உடையவன் என்றும், என்றும் நீங்காத நறுமணத்தினை உடையவன் என்றும், பரிபூரண கடவுட்டன்மை நிறைந்துள்ளவன் என்றும் பொருள்படுகின்றது. நம்முடைய அழகு இளமை முதலியன, என்றும் நிலை பெற்று நிற்பவையல்ல. ஆனால் முருகன்றன் அழகு. இளமை முதலியனவோ. என்றும் நிலை பெற்று நிற்பன.

முருகப் பெருமான் அவதாரம்:

சூரபதுமன் முதலிய அசுரர்களின் கொடுமைகளைப் பொறுக்கமுடியாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று,

'ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும் '
எதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்புமின்றி
வேதமும் கடந்து நின்ற விமலா. ஓர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்கா

என்றார். இப்பாட்டினை உற்று நோக்குவோம். முழுமுதற் கடவுளின் இலக்கணங்களை எல்லாம் தேவர்களே எடுத்துக்கூறி, ஆதியற்ற குமரனை நின்பால் நீயேதரல் வேண்டும் என்கின்றனர். ஆகையால் தேவர்களுக்கும் சிவ பெருமானே ஆறுமுகங்களை ஆறு நெற்றிக் கண்களிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் தோற்றுவிக்க அந்த ஆறும் சரவணம் சேர்ந்து ஆறுமுக ஒருவனாய்த் திருஅவதாரமாயின் என்றே நாம் அறிகிறோம். கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபரர் முருகப் பெருமானின் அவதாரத்தின் கூறும் பொழுது,

தேசுதிகழ்
பூங்கயிலைவெற்பில் புனைமலர்ப்பூங் கோதைஇடப்

பாங்கு உறையும் முக்கண் பரஞ்சோதி - ஆங்குஒருநாள்
வெந்தவர்க்கு ஆற்றாத விண்ணோர் முறைக்கு இரங்கி
ஐந்து முகத்தோடு அதோமுகமுத் - தந்து
திருமுகங்கள் ஆறுஆகி

இவற்றிலிருந்து ஈசனே ஆறுமுகனாய்த் தோன்றினான் என்பது வெளிப்படும். இக்கருத்தை வலியுறுத்தவே என்பதும் வெளிப்படும். இக்கருத்தை வலியுறுத்தவே கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்

'ஈசனே அவ னாடலால் மதலையாகினன்காண்
பேசில் ஆங்கவன் பரனோடு பேதகன் அல்லன்'

என்று கூறியுள்ளார்.

முருகப்பெருமானுடைய அவதாரத் தத்துவத்தை இனிச் சற்று சிந்திப்போம். உலகத்தின் நன்மைக்காக கடவுள் பஞ்சபூதங்களில் படிப்படியாக வெளி, காற்று. கனல். புனல், மண் இவற்றின் வழியே தோற்றம் பெறுகிறார் என்பது முருகன் அவதாரத்தின் தத்துவம். இறைவனின் நெற்றிக் கண்ணிலேயிருந்து புறப்பட்ட பேரொளிச் சுடர் வானத்தில் நின்று, பின் காற்றின் கையில் புகுந்து. தீயைச் சென்றடைந்து. அங்கிருந்து கங்கையாகிய நீரில் தவழ்ந்து, நிலத்தில் எய்தியது. ஞானாக்கினியில் அருவமாகத் தோன்றிக் கருணைப் பொய்கையில் உருவமாகப் பொலிந்தது. அருவமான ஞானமயப் பரம்பொருள் பக்தர்களிடம் கருணை கொண்டே அன்றோ வடிவு கொள்கிறது.

இந்த வடிவத்தை ஊமையாகயிருந்து ஐந்துவயதிலே திருச்செந்திற்கடவுள் அருளால் அருள்பெற்ற குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில் மிக அழகாக குறிப்பிடுகின்றார்.

திருமுகங்கள் ஆறு ஆகிச் செந்தழல்கள் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறி ஆறுஉய்ப்ப - விரிபுவனம்
எங்கும் பரக்க 'இமையோர்கண்டு அஞ்சுதலும்
பொங்கும் தழல்பிழம்பைப் பொன்கரத்தால் - அங்கன்
எடுத்து அமைத்து வாயுனை கொண்டுஎகுதி என்று எம்மான்

கொடுத்து அளிப்ப மெல்லக்கொடுபோய் - அடுத்தது ஒரு
பூதத் தலைவ. கொடுபோதி எனத் தீக்கடவுள்
சீதப் பகீரத்திற்கே சென்று உய்ப்பர்-போது ஒரு சற்று
அன்னவரும் கொண்டு அறைத்தற்கு ஆற்றாள் சரவணத்தில்
சென்னியில் கொண்டு உய்ப்ப.....

அருவமான ஞானமயப் பரம்பொருள் பக்தர்களிடம் கருணை கொண்டே அன்றோ வடிவு கொள்கிறது.

தமிழ் மொழி என்றும் இளமை மாறாத மொழி. எம்பெருமான் முருகன் என்றும் அகலாத இளமையுடையவன். தமிழ் மொழியில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு. முருகப்பெருமானின் தோள்கள் பன்னிரண்டே. முருகனுக்குத் திருமுகம் ஒவ்வொன்றிலும் மூன்று கண்களாக மொத்தம் பதினெட்டு கண்கள்; தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு.

உருவம் இல்லாத அருட்பெருஞ்சோதி ஆண்டவன் . ஆறுமுகங்கள், பன்னிரண்டு தோள்கள், பதினெட்டுக் கண்கள் கொண்ட இந்த அருள் உருவத்தை உலகம் உய்யும் பொருட்டு எடுத்துக்கொண்டான்' என்பது இதனுடைய உள்பொருள்.

சூரியன் ஆறு கண்களாகவும், சந்திரன் ஆறு கண்களாகவும், அக்னி ஆறு கண்களாகவும் முருகப் பெருமான் பதினெட்டுக் கண்களமைந்தாற் போல் தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டாக நின்றன. முருகவேளின் முகங்கள் ஆறு. வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு. இடையினம் ஆறு மு-ரு-க என்ற எழுத்துக்களில் ஒவ்வொன்றும் மெய்யெழுத்தில் ஒவ்வோர் இனத்தைச் சார்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கந்தவேல் கரத்திலுள்ள வேல் வேறு எந்த தெய்வத்திற்கும் இல்லாத சிறப்புடைய ஆயுதம், இவ்வாறு வேறு ஆயுதத்தின் திருநாமங்களை மக்கட்கு இடுவதில்லை. வேறு எந்த மொழியிலும் இல்லாத ஆயுத எழுத்து தமிழில்தான் உண்டு. ஆயுதம், இச்சை, கிரியை ஞானம் என்ற மூன்றும் மூன்று புள்ளிகளாகச் சேர்ந்தது. இது வேலின் உருவையொத்தது.

கண்ணிகர் மெய்யும் சென்னிக்
கன நிக ரினத்தன் கூறும்
திண்ண மை தோள்க ளேபோல்
திகழ்தரு முயிரும் வேறொன்
றெண்ணுதற் கரிய தான
எஃகமும் இயலிற் காட்டும்
புண்ணிய முனிக்கோன்
செல்வேள் பொற்பதத் தடிமையாகும்.

ஆறுமுகங்கள் ஒவ்வொன்றும் செய்யும் தொழில்

சிவத்துக்குரிய ஐந்து முகத்தினையும், ஞானியரின் உள்நோக்குக்கு மட்டும் புலப்படும் சிவனின் உள்முகமாக ஆறாவது வதனம் - அதே முகமாக உள்ளது. அனைத்தையும் பரிபாலஞ்செய்ய இறைவன் அறுமுகனாயினன் எனவும் கூறும்.

மாட்டுள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம். ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலிதுவந்து வரங் கொடுத்தன்றோ ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி விழா அது
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே; ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவு கொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே; ஒருமுகம்
குறவர் மடல்கள் கொடிபோல் நசும்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே
- திருமுருகாற்றுப்படை

(அ) ஒரு முகமாவது பெருமையாகிய இருளையுடைய உலகம் குற்றமில்லாமல் விளங்கும் பொருட்டு பல கிரணங்களையும் தோற்றுவித்தது .

(ஆ) ஒரு முகமானது அன்பர்கள் துதித்ததால் அவர்கள் குற்றங்களை நீக்குவதற்கு உடன்பட்டு அவர்களுக்கு இனிதாய்

நடந்து அவர்கள் மேற்சென்ற விருப்பத்தினாலே மகிழ்ந்து அவர்கள் வேண்டும் வரங்களைக் கொடுத்தது:

(இ) ஒரு முகமானது மந்திரத்தையுடைய வேதத்திற் சொல்லிய முறைமை தவறாக பிராமணர்களுடைய யாகங்களிலே தீங்கு வராதபடி துணையாக நிற்கும்.

(ஈ) ஒரு முகமானது வேதாகமங்களிலே மறைந்து கிடைக்கும் பொருள்களை இருடிகள் இன்பம் பொருந்தும்படி ஆராய்ந்து, போதித்துச் சந்திரனைப் போலத் திசைகளெல்லாவற்றையும் விளக்கும்.

(உ) ஒரு முகமானது திருவுள்ளத்திலே நிகழா நின்ற சமத்துவத்தை ஒழித்துக் கோபங்கொண்ட திருவுள்ளத்துடனே பகைவராகிய அசுரர்களை வதைத்துப் போர்க்கள வேள்வியை வேட்டது.

(ஊ) ஒரு முகமானது வேடருடைய மடப்பத்தையுடைய மகளும் கொடிபோலும் இடையினையுடைய இளம் பெண்ணுமாகிய வள்ளிநாயகியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று.

இங்ஙனம், ஆறுமுகங்களும் அவ்வம் முகங்களுக்கேற்ப ஒவ்வோர் தொழிலினைக் கண்டு விளங்கும்.

பன்னிரு கரங்கள் செய்யும் தொழில்கள்:

ஒரு கை தேவர்களையும், ரிஷிகளையும் பாதுகாக்க அமைந்தது. அதற்கிணையாக ஒரு கை மறுபக்கத்திலே கிடந்தது. மூன்றாவது கை அங்குசத்தைச் செலுத்துகின்றது. அதற்கிணையான கை ஆடை உடுத்திய தொடையில் கிடக்கின்றது . ஐந்து, ஆறாவதுமாகிய கைகள் அழகிய பெரிய பரிசையொடு வேலாயுதத்தை வலமாகச் சுழற்றுகின்றன. ஏழாவது கை முனிவர்களுக்கு உரையிறந்த பொருளை உணர்த்த மார்போடு சேர்ந்து விளங்க, எட்டாவது கை மார்பில் தாழ்ந்து தொங்கும் மாலை யுடனே சேர்ந்து விளங்குகின்றது. ஒன்பதாவது கை வளையலுடனே மேலே சுழன்று களவேள்வியை வேட்கும் முத்திரை கொடுக்கிறது. இதற்கிணையான கை மணியை மாறி ஒலிக்கப் பண்ணுகிறது. பதினொன்றாவது கை மழையைப் பெய்விக்கின்றது. ஒரு கை தெய்வப் பெண்களுக்கு மணமாலை சூட்டுகின்றது.

வள்ளி இச்சா சக்தியாகவும், தெய்வயானை கிரியாசக்தியாகவும், வடிவேல் ஞான சக்தி என்பதையும் உணர்த்துகின்றன.

சூரசம்ஹாரம்:

இறைவனது கருணை, அறக்கருணை: மறக்கருணை என இருவகைப்படும். நல்லவர்களை அறக்கருணையாலும், பொல்லாதவர்களை மறக்கருணையாலும் இறைவன் ஆட்கொள்ளுகின்றான். சூரன் தான் பெற்ற வரத்தால் நன் மக்களுக்கும் தேவர்களுக்கும் துன்பம் பல செய்தான். அவன் மேலும் இவ்வுடலோடு நீண்ட காலம் இவ்வுலகில் தங்கினால் பலப்பல பாவச் செயல்களைச் செய்து மீளா நரகத்திற்கு ஆளாவான் என்பதனையும், தவத்தால் வரம் பல பெற்ற இவன் பெரும் பாவியாகிவிடக்கூடாது என்பதனையும் கருணையால் நினைத்து, இறைவன் குமார நாயகனாய்த் தோன்றி வேலாயுதத்தால் அவனது உடலினை இருகூறாக்கி, அவற்றுள் ஒன்றினை மயில் வாகனமாகவும் மற்றொன்றினைச் சேவற் கொடியாகவும் தன்னோடு சேர்த்துக் கொண்டான். இதனை விளக்கவே, திருவிழாக்களில் சூரசங்காரம் முடிந்தவுடன் முருகனை மயில்வாகனத்தில் ஏற்றுகின்றார்கள். அப்பொழுது அவனுக்குச் சேவல் கொடியாகிறது. இதிலிருந்து முருகன் சூரனைக் கொல்லவில்லை என்பதும், மறக்கருணையால் ஆட்கொண்டான் என்பதும் நன்கு விளங்குகின்றன.

பெற்றோர் தம் பிள்ளைகளிடம் நோய் ஒன்று கண்டால் தாமே அந்நோயினை மாற்ற வேண்டியதைச் செய்கின்றார்கள். கத்தியால் அடித்தும் சுட்டும் கடுந்துன்பம் செய்வித்தும் அதனைக் போக்குகின்றார்கள். இச்செயல் அவர்களுக்குப் பிள்ளைகளிடமிருக்கும் அன்பினைக் காட்டுகிறதா? பகைமையைக் காட்டுகிறதா? அன்பினையல்லவா காட்டுகின்றது. அது போல நம்மிடம் பற்றிய பாவங்களைத் தீர்ப்பதற்கு பரமன் கருணை யாலேயே இவை போல்வனவற்றைச் செய்கிறான். இதனை,

தந்தைதாம் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொல் ஆற்றின்
வந்திடாவிடில் உறுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடிற் பரிவி?யாகும்
இந்த நீர் முறைமையன்றோ ஈசயார்முனிவு யென்றும்

சூரசம்ஹாரத்தின் தத்துவம்:

சூரன் லவமலம் நிறைந்த ஓர் உயிர். ஆணவமலம் மூதிர்ந்த உயிர் ஒரு போதும் இறைவனைக் காணாது. அம்மூனைப்பு ஒடுங்கிய போது அஃது இறைவனைக் காணும் ஆணவமலம் நிலை நிற்கும் காலம்வரை அது பிறந்து இறந்து பேதமையுற்றுத் தவிக்கும். ஆதலால், அம்முனைப்பாம் அரக்கனைக் கொன்றாலல்லது உயிருக்குப் பிடிப்புச் சாக்காடொழிந்து இறைவனொடு ஒன்றிவாழ இயலாது. அவ்வாறே ஆணவ மலத்தைப் போக்கும் ஆற்றலுடையவன் இறைவனே. அவன் உயிர்களிடத்துக் கொண்ட கருணையால், ஆணவ மலமாகிய சூரனது ஸ்தூல உடம்பைக் கொன்று, ஆணவமலம் நீங்கின அநாதித் தன்மையுள்ள ஆத்மாவாகிய அவ வது உயிரினைத் தன்னோடு சேர்த்துக் கொள்ளுகின்றான் என்பது தத்துவம்.

முருகப்பெருமானின் வேறு திருப்பெயர்கள் விளக்கம்:

இவருக்குக் 'குகன்' என்ற ஒரு திருப்பெயருண்டு. இப் பெயர் மலைக்குகையில் வசிப்பவன் என்று பொருள்படினும் அன்பர்களது உள்ளமாகிய குகைகளில் உறைபவன் எனவும் பொருள்படும். 1 சுப்பிரமணியன்! என்ற பெயர் சுத்தப் பிரமத்தினின்றும் தோன்றிய மணி போன்றவன் என்று பொருள்படும்: 'குமரன்! என்ற திருப்பெயர் அழகில் மன்மதனை வென்றவன் எனப் பொருள்படும். 'கந்தன்!' என்ற பெயர் உமாதேவியாரால் சேர்க்கப்பட்டவன் என்றும் , நறுமனத்தினை நமக்குத் தருபவனாயும் இருக்கின்றான் என்றும் பொருள்படும். 'சச்சிதானந்தன்! என்ற திருப்பெயர் சத்தும், சித்தும் சேர்ந்த வழிப்பிறக்கும் ஆனநதத்தினை நிகர்த்தவன் என்று பொருள்படும். இவருக்கு வேலாயுதன், உஷ்ணமுகம், ஆறுமுகன், கந்தன், கடம்பன், கார்த்திகேயன் முதலிய வேறு பல திருப்பெயர்களும் உண்டு. இத்தகைய பெருமைவாய்ந்த கலியுக வரதனால் கந்தக் கடவுளின் கழலினைப் போற்றிக் கடைத்தேறுவோமாக.

33. ஆன்மநேய ஒருமைப்பாடு

ஆன்மநேய ஒருமைப்பாடு என்றால் என்ன?

உலகத்தில் உள்ள எல்லாவகையான உயிரினங்களிடத்திலும் அன்பு காட்டுவதே ஆன்ம நேயம் எனப்படும். மனிதர்கள் மட்டுமல்லாமல் விலங்குகள், பறவைகள், புழுபூச்சிகள், தாவரங்கள் என்னும் நிலைத்தினை இயங்குதினை அனைத்திற்கும் உணர்ச்சிகள் உண்டு என அன்றைய கால அறிவியலாளர்கள் நிரூபித்துள்ளனர். எனவே தன்னைப்போலவே பிற உயிர்களுக்கும் இன்ப துன்பங்கள் உண்டு என உணர்ந்து கொள்வது ஆன்ம நேயத்தின் முதல் நிலை.

தனக்குத் துன்பம் உண்டாவதைப் போன்றே பிற உயிர்களுக்கும் உண்டாகும் என உணர்ந்து அவற்றிற்குத் தீமை புரியாமல் இருப்பதுதான் அறிவுடைமை என்பார் வள்ளுவப் பெருந்தகை

துன்பம்

‘‘அறிவினான் ஆவது உண்டோ பிறிதின்நோய் தன்நோய்போற் போற்றாக் கடை’’. தன் உயிர்க்கு இன்னாமை தான் அறிவான் என்கொலோ மன்உயிர்க்கு இன்னா செயல்.

என்னும் இரண்டு குறட்பாக்களிலும் திருவள்ளுவர் பிறிதின், உயிர்க்கு என அஃறிணைச் சொற்களையே ஆண்டுள்ளார். இதன் கருத்து என்ன? நிலைத்தினை, இயங்குதிரை உயிர்கள் அனைத்திற்கும் ஆன்மா ஒரு தன்மையானதுதான்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்

என மாணிக்கவாசகரும் ஒரே ஆன்மா பல்வேறு யோனி பேதங்களில் சென்று சென்று பிறவி எடுப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். முதலாவதாக இதனைத் தெளிவாக உணர்ந்து கொள்வதுதான் ஆன்மீகத்தின் முதல்படி. உடல்கள் வேறுவேறாக இருக்கலாம்; ஆனால் அவற்றுள் இயங்குகின்ற உயிர் - ஆன்மா - ஒரே தன்மையானது என்பது நம் உள்ளத்தில் படிந்துவிட்டால் பிற உயிர்களுக்குத் தீமை செய்வோமா?

இதன் அடுத்த நிலை புலால் உண்ணாமை.
தன்னுன் பெருக்கற்குத் தான்பிறிதின் உண்பான்
எங்ஙனம் தரும் அருள்?

என்பது தெய்வப் புலவரின் வினா. நாம் அன்பு, அருள் என்றால் என்ன என்று அறிவோம். நம்மோடு தொடர்புடையாரிடம் அதாவது பெற்றோர், உடன்பிறந்தோர், வாழ்க்கைத்துணை, சுற்றத்தார். மக்கள், நண்பர், இனத்தார் என விரியும் உற்றார் உறவினர்களை நேசித்தல் அன்பு எனப்படும். அதாவது அன்பு என்னும் உணர்வு தன்னை மையமாக வைத்துத் தோன்றுகிறது. எனக்கு இந்த வகையில் தொடர்புடையவர் என்ற காரணம் கொண்டு நேசிப்பது அன்பு.

ஆழமாகச் சிந்தித்தால் இந்த அன்பு சாத்திரங்கள் கூறுகின்ற யான், எனது என்னும் அகங்கார மலமாகிய ஆணவச் செயலாகிய தன்னலம்தான் என விளங்கும். இதில் மற்றவரை.

நேசிப்பது நமக்காக - அவர்களால் நமக்கு நன்மை கிடைக்கும் என்பதற்காகத்தான்.

ஆனால் அருள் என்பது இதைவிட மிக உயர்ந்தது. தன்னோடு எந்தத் தொடர்பும் இல்லாத உயிர்களிடத்திலும்- அவையும் உயிர் என்னும் ஒரே காரணத்திற்காக, எந்தவகையான எதிர்பார்ப்பும் இல்லாமல் நேசிப்பதே அருள் எனப்படும். இதுதான் ஆன்ம நேயம். இந்த நிலையைத்தான் திருவருட்பிரகாச வள்ளலார் 'ஆருயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்' என இறைவனிடம் வேண்டுகிறார்.

இந்த ஆன்ம நேயம் ஏற்பட்டால் மக்களுக்குள் இயற்கையாக இருக்கின்ற வேற்றுமையைப் பெரிதுபடுத்திப் பகைமை பாராட்டும் கொடுமை நீங்கிவிடும். மொழி, ஊர், மாவட்டம், மாநிலம், தேசம், சாதி, சமயம், பொருளாதார ஏற்றத்தாழ்வு என்னும் இயற்கையான வேற்றுமைகள் மட்டுமல்லாமல் இன்று செயற்கையான அரசியல் கட்சிகளும் மனித ஒற்றுமைக்குப் பெருந்தீங்கு விளைவிக்கின்றன. இந்த வேற்றுமைகளைச் சற்றும் கருதாமல் - மனிதனை மனிதனாக மட்டும் பார்த்து அன்பு பாராட்டுதல் மனிதநேயம் ஆகும். இதனைத்தான் வள்ளற்பெருமான் ஜீவ ஒழுக்கம் என்கிறார்.

எல்லா மனிதரிடத்தும் சாதி, சமயம், குலம், கோத்திரம்,
ஆத்திரம், சாத்திரம், தேசம், மார்க்கம், உயர்வுதாழ்வு
முதலிய பேதம் அற்றுத் தான் ஆகி நிற்றல்

என்பது அவர் வாக்கு. தான் ஆகி நிற்றல் என்றால் மனிதன்தான் ஒரு மனிதப்பிறவி என்னும் நினைவு மட்டும் கொண்டிருத்தல். இந்த ஆன்ம நேயம் பிறந்தால் ஒருமைப்பாடு தானாக மலரும்.

'ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் -
ஒருமை உளர் ஆகிஉல கியல் நடத்த வேண்டும்.
'எவ்வுயிரும் பொது எனக் கண்டு இரங்கிட
கரிக்கின்றார் யாவர் அந்தச் செவ்வியர்'
எத்துணையும் பேதம் உறாது எவ்வுயிரும்
தம்உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்

என்பனபோலப் பல இடங்களில் வள்ளலார் இந்த ஆன்ம நேய ஒருமைப்பாட்டை விளக்குகிறார்.

பள்ளிக்கல்வி, சொற்பொழிவுகள் ஆராய்ச்சி ஆகியவற்றால் அந்த ஆன்ம நேயத்தை அறிவாக அறிய முடியும் ஓரளவு உணர்வாகவும் உணர முடியும். ஆனால் அநுபவத்தில் வரவேண்டுமெனின் கட்டாயம் இறையுணர்வு வேண்டும். எல்லா உடல்களும் பரம்பொருள் குடிகொண்டுள்ள கோயில் என்னும் உணர்வு ஆழமாக

ஏற்பட்டால்தான் உண்மையான ஆன்ம நேயம் மலரும். பரம்பொருளாகிய ஒரு தந்தைக்கு உயிர்கள் எல்லாம் மக்கள் என உணர்ந்தால்தான் அனைத்துலக சகோதரத்துவம் உண்டாக முடியும்.

'எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்
இயல் உண்மை அறிவின்ப வடிவாகி நடக்கும்
மெய்ப்பொருளாம் சிவம் ஒன்றே என்றறிந்தேன்,

என்னும் அநுபவ அறிவால்தான் ஆன்ம நேய ஒருமைப்பாடு உண்டாகும் . இந்தத் தலை சிறந்த பண்பினைப் பெறுவதற்கு ஒருவருக்கு இறையன்பு - பக்தி - மிகமிக வேண்டப்படும். அந்தப் பக்தியின் முதிர்ச்சிதான் ஆன்ம நேயத்தின் சிகரமாகிய,

பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே பகைவனுக் கருள்வாய்

என்னும் மகாஞானியின் பேரருள்வாசகம்.

எல்லா உயிர்களும் ஒத்த தன்மையை உடையன, பரம்பொருளோடு தொடர்புடையன என உணர்ந்து, நமக்குள் உள்ள வேற்றுமைகளை முற்றிலும் மறந்து இறையருளைத் துணை கொண்டு நன்னெறியில் ஒழுகி மக்களினம் மாண்புடையதாகுக.

34. திருப்பேரூர் ஆதீனமும் சிரவை அருளாளர்களும்

திருப்பேரூர் ஆதீனத்தைத் தோற்றுவித்த தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் - 17 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் வீரசைவ நன்னெறியைப் பரப்பிய அருளாளர்களுள் சிறப்பிடம் பெற்றுள்ளவர் ஆவார். சிரவையாதீனத்தாபகர் ஆகிய தவத்திரு. இராமானந்த சுவாமிகளின் குருநாதராகிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அவர்கள் சாந்தலிங்க சுவாமிகள்பால் பேரீடுபாடு கொண்டவர். வண்ணச்சரபர் சாந்தலிங் அடிகளாரை,

''எம்மதத்தில் உள்ளவர்கள் எந்நிட்டை சொன்னாலும்
சம்மதமே எமக்குத் தற்போதம் மாயில் எனப்
பொய்ம்மதத்தோர் நாணப் புகன்றருளும் அப்புனிதன்
மும்மத மாப் போலும் முழுஞான வீரன் அம்மா'

எனப்போற்றுவதோடு, அவரால் இயற்றப்பட்டுள்ள கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் ஆகிய நான்கு நூல்களை,

'நன்குமுத்தி வீட்டில்உறும் நான்கு பெரு வாயில்களே'' 1
என் குணங்கட் போற்றிடும் நூல் என் இரண்டு செய்தானே'2

எனப் பாராட்டுகிறார்.

சிரவையாதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானம் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் அவர்கள் சாந்தலிங்கரைப் போற்றிப் பிள்ளைத்தமிழ் ஒன்றும், தோத்திரப்பதிகம் ஒன்றும் இயற்றியுள்ளார். அவற்றில் பேரூராதீன முதல்வரை ,

'பிணிவேர் அறக்கீண்டு எறிந்து சுகவீடு அமைத்து
ஊன்றுகின்று
பிறவா நெறிச் சாந்தலிங்க தேசிகர் ' 3
''குணமேரு என்று திகழ் வர சாந்தலிங்க முனி ' 4
''சிவம் ஏந்தும் அங்கைபெறு தவ சாந்தலிங்க குரு'' 5

''திகழ்ஞான இன்பம் நிறை சாந்தலிங்கர் ' 6
'மாற்று இயல் மணத்தை மாற்று இயல் பொன்னா
மாற்றிடும் தோத்திரப்பாக்கள் சாற்று இயல்பெரும் '7

என்றெல்லாம் வாய்மணக்கப் புகழ்கிறார்.

சிரவையாதீனத்தின் புகழைத் திக்கெட்டும் பரப்பிய எம் குருநாதர் தவத்திரு கஜபூசைச் சுந்தரசுவாமிகள் பேரூர் ஆதீனத் தமிழ்க்கல்லூரியில் பயின்று புலவர் பட்டம் பெற்றதுடன் அக்கல்லூரியிலேயே சிறிதுகாலம் ஆசிரியப்பணியும் புரிந்தார். திருப்பேரூர் ஆதீன அடிகளாரோடு இணைந்து சமய, தமிழ்ப் பணிகளை இடைவிடாமல் ஆற்றிவந்ததால் , மக்கள் இந்த இரு அருளார்களையும் கொங்குநாட்டு இரட்டையர் என அழைத்து மகிழ்ந்தனர். தவத்திரு. சுந்தர சுவாமிகளும், தவத்திரு. பேரூர் அடிகளாரும் நன்கு கலந்து சிந்தித்த பிறகே இரு ஆதீனப் பணிகளும் தொடங்கப்பெறும்.

இப்பொழுது எம் ஆட்சிக்காலத்தில் பேரூராதீனம் கயிலைக்குருமணி சீர்வளர்சீர் அடிகளார் அவர்கள் சிரவையாதீனத்தின் செயல்பாட்டிற்கும், சமய, மொழி, சமுதாயப்பணி வளர்ச்சிக்கும் தக்க ஆலோசனைகளைக் கூறி வழிநடத்துவதோடு மரபுமுறைகளையும் அறிவித்து வருகிறார். மேலும் பேரூர் தவத்திரு. மருதாசல அடிகளார் அவர்களும் வருகிறார். இவ்வாறு திருப்பேரூர், சிரவை ஆதீனங்களுக்கு இடையிலுள்ள தொடர்பு வழியாகப் பேணப்பட்டு வருகிறது. கொங்குநாட்டின் நல்லூழின் பயனாக இந்தத் தொடர்பு என்றும் நீடிக்கும் என்பது ஒருதலை.

திருப்பேரூர் ஆதீனக் குருமரபை ஆதீனமுதல்வர் தொடங்கி இராமலிங்க அடிகளார் வரையில் ஒரு மரபாகவும் வரலாற்று முறையில் பிரித்து நோக்கலாம். தவத்திரு சச்சிதானந்த அடிகளார் தொடங்கி வாழையடி வாழையாக வளர்ந்து வருகின்ற சிறப்புமிக்க குருமரபு சாந்தலிங்கரின் தண்ணருளோடு சிரவையாதீன முதல்வராகிய தவத்திரு. இராமானந்த சுவாமிகளின் திருவருள் தொடர்பும் உடையது என்பதுதான் இப்பிரிவினைக்குக் காரணம்.

தவத்திரு இராமலிங்க அடிகள் பராபவ கார்த்திகை அவிட்டத்தன்று (1906) ஆடல்வல்லானின் திருவடி நீழலை அடைந்தார். இவர் பேரூரைச் சேர்ந்த வேம்பன் என்னும் கந்தசாமி என்பவரைச் சச்சிதானந்த கருப்பண்ணப் பரதேசி என்ற துறவுப்பெயருடன் துறவி, ஆக்கியிருந்தார் பிற்காலத்தில் சச்சிதானந்த அடிகள் திருமடப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். மடத்திற்குத் தொடர்புடைய ஒரு சிலருக்கு இது பிடிக்கவில்லை. அவர்கள் தலைமையை மாற்ற விரும்பினர். இதற்காக மாற்றுக் கருத்தினர் சிரவைக் குருமுதல்வர் தவத்திரு. இராமானந்த சுவாமிகளை அணுகிப் பேரூர்த் திருமடத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினர். தவத்திரு சிரவைச் சந்நிதானங்களோ அவர்களுடைய அன்பர்களோ இந்த ஏற்பாட்டிற்கு உடன்படவில்லை என்றாலும் அழைத்தவர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி அன்பர்கள் சிலருடன் திருப்பேரூர் சாந்தலிங்கப் பெருமான் திருமடத்திற்குச் சென்றார்கள். அப்போது தலைமைப் பொறுப்பிலிருந்த சச்சிதானந்த அடிகள் தம்மை இராமலிங்க அடிகளே தலைவராக அமர்த்தியிருக்கிறார் என வற்புறுத்தினார். மாற்றுக்கருத்தினர் சச்சிதானந்தரின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்நிலையில் தவத்திரு. சாந்தலிங்கர் மடாலயத் தலைமைப் பொறுப்பை எப்படியாவது ஏற்றுக்கொள்ளக்கூடாது எனக்கருதியிருந்த சிரவைச்சந்நிதானங்கள் அவையினர் முன் தம் கருத்தாக, சச்சிதானந்தருக்கு அவருடைய குருநாதரே தலைமைப் பொறுப்பை அளித்திருந்தால் நாம் அதை மாற்றக்கூடாது. சச்சிதானந்தர் சாந்தலிங்கரின் திருமுன்பில் இருந்து இந்தச் செய்தியை உறுதிப்படுத்தினால் நம்பி ஏற்றுக்கொண்டு இவரையே தலைமைப் பொறுப்பில் நீடிக்கச் செய்யலாம் என்றார். அதன்படி சச்சிதானந்தர் சாந்தலிங்கப்பெருமானின் திருஉருவத்தின் முன் நின்றுகொண்டு தம்மை இராமலிங்க அடிகள் திருமடத்தின் தலைவர் ஆக்கியது உண்மையே என உறுதியாகக் கூறினார். அதனால் சிரவைச் சந்நிதானங்கள் இந்தச் சச்சிதானந்தரே தலைமைப் பொறுப்பில் இருக்கட்டும் என மொழிந்து அனைவரையும் ஏற்றுக்கொள்ளவைத்தார். இவ்வாறு பேரூர்ச் சாந்தலிங்கர் திருமடத்தலைவராகச்

சச்சிதானந்த அடிகளார் நிரந்தரமாக அமர்ந்ததற்குச் சிரவைச் சந்நிதானங்களே முதன்மைக் காரணம் ஆகிறார்.

தவத்திரு . சச்சிதானந்த அடிகள் 1910 வரை திருமடத்தின் தலைமைப்பொறுப்பில் இருந்தார். பிறகு உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் தவத்திரு. மாணிக்க அடிகள் தலைமையை ஏற்றார். இந்த மாணிக்க அடிகள் சிரவைச் சந்நிதானங்களின் முதல் சீடர்களாகிய விளவை நால்வரில் ஒருவர். இவருடைய பூர்வாசிரமப்பெயர் விளாங்குறிச்சி கூழையக்கவுண்டர் என்பது ஆகும். இவர் கொங்கு வேளாளர்களுள் பயிரன் குலத்தைச் சேர்ந்தவர். இவருடைய தந்தையாரின் பெயர் சின்னத்தேவண கவுண்டர் திருமணமான கூழையரின் மனைவி பச்சையம்மாள் என்பவர். இவர்களுக்கு மங்கயைர்க்கரசி என மகள் ஒருத்தி இருந்தாள். இளம் மனைவியையும் மகளையும் நீத்துக் துறவுநெறியைக் கைக்கொண்டவர் இந்த மாணிக்கசாமிகள்.

தவத்திரு. மாணிக்க அடிகள் கௌமாரமடாலயத்தில் இருந்தபோது சந்நிதானங்களின் அணுக்கத் தொண்டராக விளங்கிக் குருநாதரின் திருவருட் பார்வைக்கு இலக்கானவராக இருந்தார். சிரவையாதீனம் தண்டபாணி திருக்கோயில் பூசையை இவரே செய்துவந்தார். தலயாத்திரையாகக் கௌமார மடாலயத்திலிருந்து புறப்பட்டவருக்குப் பேரூர்ச் சாந்தலிங்க அடிகளார் மடாலயத் தலைமைப் பொறுப்பு வந்து வாய்த்தது. அப்பொறுப்பினை மாணிக்க அடிகள் சந்நிதானங்களின் அருளாணைக்கேற்ப ஏற்றுக்கொண்டார்.

இந்த மாணிக்க அடிகள் மடத்தைச் சுற்றியுள்ள வளமான வயல்களில் எல்லாம் அறுவடையான நெல் முதலியவற்றை மடத்திற்குக் களமானியமாகப் பெறத்தக்க ஏற்பாடு செய்தார். இவ்வாறு பெற்ற பொருட்களைக் கொண்டு திருமடத்துத் துறவிகள், மடத்திற்கு வரும் அன்பர்கள், அடியார்கள் ஆகியோருக்கு அன்னம் பாலித்து வந்தார். இவர் காலத்தில் பேரூர் ஆதீனத்தின் அருட்பணிகள் விரிவடைந்தன. அதனால் 1924 -ல் புதிய கட்டடத்தை கட்டி முடித்தார்.

கொங்குநாட்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், சைவ சமய வரலாற்றிலும் சிறப்பிடம் பெறத்தக்க சத்வித்யா சன்மார்க்க சங்கம் என்னும் சிறந்த அமைப்பு இவரால் 1916-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. சாந்தலிங்கப் பெருமானின் குருபூசையாகிய மாசி மகத்தை ஒட்டி நடத்தப்படும் சத்வித்யா சன்மார்க்க சங்க மாநாடுகள் பெரும் சிறப்பு வாய்ந்தவை. இத்தகைய பெரும்பணிகளால் மிகுதியாகப் பொருள் தேவைப்பட்டது. அதற்காக ஒற்றை மாட்டுவண்டியில் கிழக்கே ஈரோடு, தெற்கில் உடுமலைப்பேட்டை, மேற்கே வெள்ளியங்கிரி அடிவாரம், வடக்கே நீலகிரி வரை சென்று பொருளீட்டி வருவார். மேலும் நிரந்தர வருவாய்க்காக விளைநிலங்கள் பலவற்றை வாங்கி வளம் சேர்த்தார். இந்த அடிகள் 1938 இல் இறைவன் திருவருளில் இரண்டறக் கலந்தார். திருப்பேரூராதீனத்தின் இன்றைய உன்னதமான நிலைக்கு அடித்தளம் அமைத்தவர் இந்தத் தவத்திரு. மாணிக்க அடிகள் என்றால் அது மிகையாகாது.

தவத்திரு மாணிக்க அடிகளை அடுத்துத் திருப்பேரூர் ஆதீனத் தலைவராக அமர்ந்த தவத்திரு. ஆறுமுக அடிகளாரும் சிரவைச் சந்நிதானங்களின் திருத்தொண்டரே. இவர் கோவை மாநகரைச் சேர்ந்துள்ள கணபதி என்னும் பகுதியில் சாத்தந்தை குலத்தைச் சேர்ந்த நஞ்சப்பக் கவுண்டர் உத்தமக்காள் என்னும் இணையருக்குப் புதல்வராகத் தோன்றியவர். ஆறுமுகனாரின் பெற்றோர் அக்கால வழக்கப்படி மிக்க இளமையிலேயே பத்துவயதுப் பெண் ஒருத்தியை இவருக்கு மணமுடித்து வைத்தனர். இவர் இல்லறத்தில் நாட்டம் இன்றி இருந்ததால் வீட்டுப்பற்று இல்லாதவராகக் கணபதி விநாயகர் ஆலயத்திலேயே தங்கி வந்தார். அப்போது சிரவைச் சந்நிதானங்களின் அருட்பார்வைக்கும் இலக்கானார். அவருடைய அருளாணைப்படி ஆறுமுகம் சாந்தலிங்கர் திருமடத்தில் நிலையாக இருந்து மடாலயப் பூசைப் பணியை மேற்கொண்டார். 1906 ஆம் ஆண்டிலேயே சாந்தலிங்கர் திருமடத்திற்கு வந்துவிட்ட தவத்திரு ஆறுமுக அடிகள் அங்கிருந்த துறவிகள் அடியவர்கள் முதலிய அனைவருக்கும் அணுக்கமாக இருந்தார். தவத்திரு மாணிக்க அடிகள்

பொருளாதாரத் தேவைக்காக நீண்டகாலப் பயணம் மேற்கொண்ட போதெல்லாம் மடாலயத்தில் அருட்பணிகள் எல்லாம் தொய்வின்றிச் செம்மையாக நடைபெறுமாறு இவர் பார்த்துக்கொண்டார். 32 ஆண்டு மடாலயப் பணிகளைச் செய்து முடித்த பிறகு 1938 இல் தலைமைப் பொறுப்பில் அமர்ந்தார். இவர் ஆட்சிக்காலத்தில் தான் பேரூராதீனத்தின் கல்விப்பணிகள் தொடங்கின. இக்கல்விப் பணிகளுக்கு மூலகாரணமாக அமைந்தவர் அப்போது இளைப்பட்டமாக இருந்த முதலிபாளையம் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகள் அவர்களே. 1950 ஆம் ஆண்டில் உயர் தொடக்கப்பள்ளி தொடங்கப்பெற்றது. 1953 இல் தமிழ்க்கல்லூரி உருவாயிற்று. உயர் தொடக்கப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக உயர்ந்தது. தவத்திரு ஆறுமுக அடிகள் காலத்தில் கோயில் திருப்பணிகளும் கணிசமாக நடைபெற்றன. இந்த அடிகள் தம் மூப்பின் காரணமாகத் தலைமைப் பொறுப்பை நீத்து இளைய பட்டத்திற்கு 1967 ஆம் ஆண்டு மடத்தின் முழுப்பொறுப்பையும் ஒப்படைத்தார். அன்றுமுதல் இன்றுவரை திருப்பேரூராதீனம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பலதுறைகளிலும் ஈடுபட்டுப் பெரும்புகழுடன் பணியாற்றி வருகிறது. தவத்திரு. ஆறுமுக சுவாமிகள் 1957 ஆம் ஆண்டு சற்குருநாதன் திருவடியை அடைந்தார்.

தவத்திரு. ஆறுமுக அடிகளார் காலத்தில் இளைய பட்டமாக இருக்கும்போதே முழுப்பொறுப்பையும் ஏற்றவர் கயிலைக் குருமணி சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள். இவர்கள் வழிவழியாகச் சிரவைச் சந்நிதானங்களின் பேரடியார்கள்.

தவத்திரு கயிலைக்குருமணி அவர்கள் முதலிபாளையத்தைச் சேர்ந்தவர். திரு. சிவன்மலைக்கவுண்டர் என்பவரின் மைந்தர். இந்தச் சிவன்மலைக் கவுண்டர் தவத்திரு. இராமானந்த சுவாமிகளைத தம் தோட்டச் சாலையில் சில நாள் தங்கியிருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். சுவாமிகள் இசைந்து அங்கு பத்து மாதங்கள் தங்கியிருந்தார். அப்போது சிவன்மலைக்கவுண்டர் துறவு பெற்றுச் சிவராமசாமி அடிகள் எனப் பெற்றார். சிரவைச் சந்நிதானங்கள் கௌமார

மடாலயத்ததுக்குத் திரும்பினார். சிவராமசாமி அடிகளின் பூர்வாசிரமப் புதல்வராகிய இராமசாமி ஐயா கௌமார மடாலயத்திலேயே சந்நிதானங்களுக்கு அணுக்கத் தொண்டு செய்துகொண்டே இரண்டாவது குருமகா சந்நிதானம் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்பால் கல்வி கற்றுவந்தார். தவத்திரு. சந்நிதானங்களின் அருளாணையைச் சிரமேற்கொண்டு 1950 ஆம் ஆண்டில் இராமசாமி அடிகளார் சாந்தலிங்க மடாலயத்தின் இளையபட்டம் ஆனார். முன்பே கூறப்பட்டவாறு இளையபட்டமாக இருந்தபோதே 1967 இல் திருமடத்தின் முழுப்பொறுப்பையும் ஏற்றார். இவருடைய அருளாட்சி ஏற்புவிழாவைச் சிரவையாதீனத்தின் மூன்றாம் குருமகா சந்நிதானமாக விளங்கிய தவத்திரு. கஜபூசைச் சுந்தர சுவாமிகள் அவர்கள் பொறுப்பேற்று மிகச் சிறப்பாக நடத்திவைத்தார். சாந்தலிங்கர் திருமடத்தின் தலைவர் கயிலைக்குருமணி சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரும், தவத்திரு கஜபூசைச் சுந்தரசுவாமிகளும் சமய, மொழி, சமுதாயப்பணிகளை ஒன்றாக இணைந்தே செய்துவந்தனர். இந்த இரு ஆதீனங்களின் ஒன்றிணைந்த செயல்பாடுகள் பிற மடாலயங்களுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தன எனலாம்.

திருப்பேரூராதீனத்தின் தலைமைப்பீடத்தில் விளங்கியவர்கள் மட்டும் அல்லாமல் அந்த ஆதீனத்தோடு தொடர்புடைய பல அடியார்களும் கௌமாரமடாலயத் தொண்டர்கள் ஆவர். முன்னர்க் குறிப்பிடப்பட்ட விளவை நால்வரும் ஒருவர் பேரூர் தெற்கு நந்தவனம் சுந்தர சுவாமிகள் என வழங்கப்படுவர். இவரது இயற்பெயர் விளாங்குறிச்சி செங்கணகவுண்டர் என்பது ஆகும். இந்தச் சுந்தர சுவாமிகள் கல்வியறிவும் பல நூலாராய்ச்சியும் வாய்த்தவர். செய்யுள் புனையும் புலமை பெற்றவர். தம் குருநாதரைப் போற்றி இராமானந்தப் பிரதாபம் என்னும் வாழ்க்கை வரலாற்றுக் காப்பியத்தை இயற்றியவர். பல நூல்களுக்கு இவர் அளித்துள்ள சிறப்புப் பாயிரங்கள் புராண நடையில் அந்நூலின் வரலாற்றை முழுவதும் தெரிவிக்கும் ஒரு சிற்றிலக்கியம் போல விரிவாக இருக்கும். இவர் தம் பிற்காலத்தில் பேரூரில் உள்ள தெற்கு நந்தவனத்தை நன்கு

பாதுகாத்து வந்தார். இந்தத் தெற்கு நந்தவனம் சுந்தரசுவாமிகள் சாந்தலிங்க அடிகளார் திருமடத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார்.

திருப்பேரூராதீன வளர்ச்சிக்காக அத்திருமடத்துத் துறவியர்களுடன் இணைந்து பல பணிகளை ஆற்றிய கருணாலய அடிகள் என்பவரும் சிரவைச் சந்நிதானங்களின் திருவருள் நோக்கம் பெற்றவரே. இவர் பேச்சாற்றலும் செயல்திறமையும் மிக்கவர். 1931 ஆம் ஆண்டு வரை இவர் பேரூராதீன நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டுள்ளார்.

இவரைப்போன்றே குறிப்பிடத்தக்க மற்றொருவர் கற்பூர சாமிகள் எனப்படுவார். இவர் சந்நிதானங்களின் மாணவர்களுள் ஒருவர். பேரூரில் தெற்கு நந்தவனத்தை நிறுவி மலர்த் தொண்டு புரிந்துவந்த இந்த அடிகள் சாந்தலிங்கர் திருமடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். நந்தவனத்தில் பல மலர்ச்செடிகளை வளர்த்து , மாலைகட்டி, பட்டிப்பெருமான் திருக்கோயிலுக்கு வழிபாட்டு நேரங்களில் கற்பூரம் தருவதை வழக்கமாக கொண்டிருந்ததால் இவர் கற்பூரச்சாமி என அழைக்கப்பட்டடார். இதற்காகக் கற்பூரக்கட்டளை என்றே ஒரு கட்டளையை ஏற்படுத்தினார். அந்தக் கட்டளைப் பணி இன்றும் நடைபெற்று வருகின்றது. இவருடைய சமாதி சாந்தலிங்க அடிகளார் திருமடாலய வளாகத்திற்குள்ளேயே அமைந்துள்ளது.

இப்பொழுது திருப்பேரூராதீனத்தின் கல்வி, சமயப்பணிகளில் பேரார்வத்துடன் உழைத்துவரும் கௌமாரச் செல்வி மரகதம் அவர்களும் வழிவழியாகச் சிரவையாதீன அடியவரே. கௌமார மடாலயத்தைச் சேர்ந்த செல்வி தாயம்மாள் அவர்களுக்கு அணுக்கத் தொண்டு புரிந்து பக்குவப்பட்டவர் மரகதம் அம்மையார்.

ஆதீனத்தலைவர்கள், அடியார்கள் என்ற அளவில் சிரவை, பேரூர் ஆதீனத் தொடர்புகள் நின்று விடவில்லை. பேரூர்த் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய கவியரசு கு.நடேச கவுண்டர் ஐயா அவர்கள் சிரவையாதீனம் தவத்திரு. கந்தசாமி சுவாமிகளின் மாணவர் ஆவார்.

இவ்வாறு சிரவையாதீனமும் பேருராதீனமும் ஆகிய இரண்டும் ஒரு நூற்றாண்டுக் காலமாகத் தம்முள் பிணைந்து கொங்குநாட்டில் அரும்பணி ஆற்றி வருகின்றன. இந்தப் பகுதியில் கல்வி, சமயப் பண்பாட்டு வளர்ச்சிகளில் இந்த இரண்டு திருமடங்களின் பங்களிப்பு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்தத் தொடர்பு இதேபோல என்றும் நீடித்துத் திருப்பணிகளை ஒன்றாக இணைந்து செய்து சமுதாய முன்னேற்றம் காணத் குருவருள் துணைபுரிவதாகுக.

ஏந்து புகழ் பெற்ற எழிற்பேரை ஆதீனச்
சாந்தலிங்கப் பெம்மான் தவமடமும் - சேந்தன்றன்
சீரார் சிரவைத் திருமடமும் என்றும்
பாரோரால் ஏந்தப் படும்.

குறிப்புகள்

1. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் - புலவர் புராணம், சாந்தலிங்கசாமி சருக்கம் செய் 13

2. மேலவர் மேலது செய். 5

3 சிரவைக் கந்தசாமி சுவாமிகள் - தவத்திரு. சாந்தலிங்க சாமிகள் பிள்ளைத் தமிழ், காப்பு 2

4. மேலவர் மேலது சப்பாணி 8

5. மேலவர் மேலது சிற்றில் 6-7

6. மேலவர் மேலது சிறுதேர் 9

7. மேலவர் சாந்தலிங்கசாமிகள் துதிப்பதிகம் செய்3

35. கௌமாரம் காட்டும் சமரசமும் சமயாதீதமும்

இந்து சமய வழிபாட்டு நெறிகள் பொதுவாகச் சௌரம் , சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம் , கௌமாரம் என ஆறு வகைப்படும். இது வழிபடப்படும் கடவுளைக் கொண்டு வகைப்படுத்தப்படும் வகைப்பாடு. சைவ சித்தாந்தம், அத்துவிதம், விசிட்டாத்துவிதம், துவைதம் என்னும் தத்துவக் கோட்பாடுகளைப்பற்றி அல்லாமல் வழிபடப்படும் கடவுள் பற்றிய வகைப்பாட்டை மட்டும் கருத்தில் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது.

முற்சொன்ன ஆறு சமயங்களில் இப்பொழுது சைவம், வைணவம் என்னும் இரண்டே மிகப் பெரும் பான்மையானவையாக உள்ளன. சாக்தம், காணாபத்தியம், கௌமாரம் ஆகிய மூன்றும் சைவத்தின் பிரிவாகவே அடங்கிவிட்டன. எனினும் தமிழ் முருகனைப் பரம் பொருளாகப் போற்றும் கௌமார வழிபாடு சைவ, வைணவ வழிபாட்டிற்கு இணையாக இருப்பதோடு நாளும் வளர்ந்து வருகிறது. தத்துவத்தில் பெரும்பாலும் மெய்கண்டாரின் சைவ சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளது எனலாம்.

கௌமாரம் என்னும் வடசொல் குமாரக்கடவுளை முதன்மைக் கடவுளாகப் போற்றும் நெறி என்னும் பொருள் கொண்டது. இதனை முருக வழிபாட்டு நெறி எனத் தமிழில் வழங்கலாம். இந்த நெறிக்கான தோத்திர நூல்களோடு, பல சாத்திர நூல்களையும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றியருளியுள்ளார். அவரால் உபதேசிக்கப்பட்ட கோட்பாடுகளைத்தான் சிரவையாதீனம் கடைப்பிடித்து வருகிறது.

கௌமாரம் என்றால் முருகக்கடவுளைப் பரம்பொருளாகப் பாவித்து வழிபடுவது என்று பொருள்படுமே அன்றி, இந்து சமயத்தின் ஏனைய தெய்வ வடிவங்களைப் புறக்கணிப்பது எனப் பொருள் கொள்ளக்கூடாது. சிரவையாதீனம் கௌமார நெறியைப் பரப்புவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டது. அப்படியிருக்கக் கௌமார

மடாலயத்தில் முருகப்பெருமான் ஆலயத்தோடு மற்ற ஐந்து சமய ஆலயங்களும் ஏன் இருக்கின்றன, இவ்வாதீன அடியார்கள் திருமால் உள்ளிட்ட வேறு தெய்வத் தோத்திரங்களை இயற்றியது ஏன் என மிகப்பலருக்கு விளங்குவதில்லை. அத்தகையோரின் ஐயத்தை அகற்றுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

வழிபாட்டு நிலையில் முருகக் கடவுளைப் பரம்பொருளாக ஏற்றுப் போற்றினாலும் தத்துவ நிலையில் சமயப் பொதுமையையே தன் அடிப்படைக் கொள்கையாக உடையது கௌமாரம். இன்று எல்லாத் துறைகளிலும் சமயப் பொதுமை மிகச் சிறப்பாகப் பேசப்படுகிறது. ஆனால் இதில் வருந்தத்தக்கது யாதெனில் சமயப் பொதுமை பற்றிப் பேசுபவர்கள் சமயத்தின் அடிப்படை நோக்கம் என்ன என்பதைப்பற்றி அறியாதவர்களாகவே உள்ளனர் என்பதுதான். எந்தச் சமயமாயினும் அதன் அடிப்படை நோக்கம் தனி மனித ஆன்ம ஈடேற்றமே. சமயப்பொதுமை பேசும் உலகியல் அறிஞர்கள் உயிர் என்ற ஒன்றைப்பற்றியோ அது சென்று சேர வேண்டிய இலக்கைப்பற்றியோ சிந்திப்பதே இல்லை.

ஒருவனைப் பற்றி ஓரகத்திருப்பதாகிய ஒரு தெய்வ வழிபாடு இல்லாத சமயப்பொதுமை பெரும்பாலும் சூனியவாதத்திலேதான் போய் முடியும். அப்பொதுமை பூசலற்ற சமுதாய அரசியல் நிலைகளை உருவாக்க மட்டுமே ஓரளவு தற்காலிகமாகப் பயன்படும். ஆன்ம நேய ஒருமைப்பாட்டையோ தனி மனிதனின் ஆன்ம ஈடேற்றத்தையோ அதனால் நிரந்தரமாகப் பெற முடியாது. ஆனால் கௌமாரம் காட்டும் சமயப்பொது பொதுமை பூசலற்ற சமுதாயத்தை நிரந்தரமாகப் படைப்பதோடு, அச்சமுதாயத்தின் அடிப்படை அலகுகளாகிய ஒவ்வொரு தனிமனிதனின் இம்மை மறுமை நலன்களையும் தருவதாகும். வண்ணச்சரபம் சுவாமிகளால் வகுக்கப்பட்ட கௌமாரநெறி சமயப் பொதுமையைச் சமரசம், சமயாதீதம் என்னும் இரு படிகளில் விளக்குகிறது.

இந்து சமயம் பல தெய்வங்களையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டதாக அமைந்திருப்பது சமயப் பொதுமைக்குப் பெரிய இடையூறாக இருப்பதாக இந்நாளில் பலர் கருதுகின்றனர். ஆனால் கௌமாரப் பார்வை வேறு விதமாக உள்ளது.

பன்மதம் கூறும் பழைய சுருதியே
நன்மதம் ஆகும் என்று உந்தீபற.
நல்லார் உணர்வர் என்று உந்தபற. (சதக உந்தி 32)
ஒருவேதம் பலசமயம் சொல்லு மாகில்
உள்ளநெறி அத்தனைக்கும் ஒருவன் தானே
குருவாகும் விதம் உணர்மெய் ஞானத்திற்கு ஓர்
கொழுகொம்பு ஆம்; ஒன்றுஉரைக்கில் குவலயத்தில்
பெருவாது செய்யும் ஒரு மதரால் ஆகும் ;
பிரான்மொழி என்று அவரவரும் பேசல் உண்டு;
திருவேதம் அனந்தம் எனப் பகர்கின்றோரே
சீரியோர்: மற்று எவரும் சிறியோர் தாமே.
(கௌமார முறைமை 1-4)

என்பன இந்நெறியின் அடிப்படைக் கருத்துக்கள். இறைவன் ஒருவனே என்றாலும் அவனை அடைய முயலும் உயிர்கள் பலதரப்பட்டவை. எல்லாவகையான நிலைகளுக்கும் ஒரு சமய நெறியில் ஏற்ற முறைகள் இன்றியமையாமல் இருத்தல் வேண்டும். உயிர்களின் தராதரம் பற்றி அமைந்துள்ள வழிகளின் பன்மை, சேருமிடம் ஒன்றே என்னும் தெளிவிருக்குமாகில் பொதுமைக்கு இடையூறு ஆகாது. ஒருவன் தனக்கேற்ற வழியைத் தேர்ந்தெடுத்துக் கடைப்பிடிக்க வாய்ப்பளிக்காத சமயம் முழுமை உடையது ஆகாது . கடவுள் முழுமையான ஒப்பற்ற தனிப் பொருளாக இருப்பதால் சமய வேறுபாடுகள் அதனைச் சிறுமைப்படுத்தா. இதனைக் கௌமார சாத்திரம்,

தற்பரம் ஒன்று; சமயம் பலவாறு
நிற்பதே உண்மை என்று உந்தீபற வாதம்
நீங்கா நிறைவு அது என்று உந்தீபற. (சதகஉந்தி 3)

என விளக்குகிறது.

ஒருவன் தனக்குப் பிடித்த வழியைக் கடைப்பிடிக்கலாம், அது அவன் உரிமை. ஆனால் ஏனைய நெறிகள் தவறானவை எனக் கருதலாகாது. கடவுளின் வடிவம் அல்லது பெயர் பற்றிய வேறுபாடுகளை பெரிதுபடுத்திக்கொண்டு பிற சமயங்களை வெறுத்தல் அறிவீனம் ஆகும். தெய்வம் மனிதர்களால் கூறப்படும் அனைத்து வகையான வரையறைகளுக்கும் அப்பாற்பட்டது. இதனை வண்ணச்சரபம் சுவாமிகள்,

எவ்வண்ணம் யாவர் இசைவுற்று இறைஞ்சிடினும்
அவ்வண்ணம் தோன்றும் அருளினை விட்டு
இவ்வண்ணத் தெய்வம் நன்று; மற்று அனைத்தும் தீது
என்போர் சிற்றறிவால்
நைவது கண்டு ஒன்று நகும் (சிறப்பு நூல் 1-2)

என அறிவுறுத்துகிறார்.

எல்லாச் சமயங்களும் - எந்த விதிவிலக்கும் இன்றி - இறையருள் பெற்றவர்களால் உண்டாக்கப்பட்டவைதான் என்பது கௌமாரக் கோட்பாடு சமயத்தைப் வளர்ப்பதற்காகச் செய்யும் முயற்சிகளில் தவிர்க்கமுடியாதபடி சில உண்மைக்கு மாறான செய்திகள் இடம்பெற்று விட்டாலும், எல்லாச் சமயங்களின் அடிப்படைக் கோட்பாடுகளும் மெய்யானவையே எனக் கௌமாரம் பறைசாற்றுகிறது.

எத்தேயத்து எச்சமயத்து யாவர்அருள் பெற்றாலும்
மெய்த்தேவு அருட்செயலின் வேறு அல்ல;- பொய்த்தேவு
இங்குவகுத்தாலும் இருக்கைக்கு இடம் இல்லை;
எங்கும் நிறைந்தது அதுவே
(அருளாட்சி 125)

எனக் கௌமார தத்துவ நூல் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது. எனவேதான்

எந்தச் சமயத்தையும் இழிந்தது என்றோ, அழிக்கப்பட வேண்டியது என்றோ கூறாமல்,

'எல்லாச் சமயங்களும் வாழ வேண்டுவனவே
அவைகளில் உள்ள
குற்றங்களை மாத்திரம் களைய வேன்டும் என
முயற்சிக்கின்றவன்
பொதுக்குரு எனப் பெயர் பெறுவான்
(சத்திய வாசகம் 18)

என்று வண்ணச்சரபர் கூறுகிறார்.

ஒரு தெய்வக்கொள்கையைத் தெளிவாக உணர்ந்து கடைப்பிடிப்பது தொடக்க நிலையில் கடினம். எனவே ஆரம்ப நிலையில் ஒருவன் பல தெய்வ வழிபாடு உடையவனாக இருந்தாலும் தவறில்லை எனக் கௌமாரம் போதிக்கிறது. அனுபவ முதிர்ச்சி ஏற்பட ஏற்பட ஒரு தெய்வக் கொள்கை தானாகவே வந்துவிடும் என்பதே இந்நெறியின் நம்பிக்கை.

. . . . .கலங்கிவாழும்
அற்பமதியால் பலதேவு உண்டு என்று எண்ணி
ஆராதித்தாலும் நன்றே; முற்றிப்
பிற்படுநாள் அந்த நிலை விளங்கும்,
(கௌமார முறைமை 1-67)

என்பது சாத்திரம்.

பல பெயர்களையும் பல வடிவங்களையும் பல வழிபாட்டு முறைகளையும் ஏற்றுக்கொண்டால் அவற்றுள் பொதுமை காண்பது எப்படி என்பது அடுத்த வினா. இந்தப் பொதுமையை இரு படி நிலைகளில் காண வேண்டும் எனக் கூறும் கௌமார நெறி அவற்றைச் சமரசம் சமயாதீதம் என அறிமுகப்படுத்துகிறது.

ஒருவன் தன் வழிபடு கடவுள் ஒன்றை மட்டுமே மிக உயர்ந்ததாகவும் ஏனையவற்றைத் தாழ்ந்தவை அல்லது பொய்யானவை என்றும் ஆழமாக நம்பிக் கடைப் பிடிப்பதே சமய வாழ்வின் தொடக்கநிலை. இந்த நிலையில் இறை அனுபவம் முதிரமுதிரத் தன்னுடைய வழிபடு கடவுள் தான் பிற சமயத்தாரால் வேறு நாம் ரூபங்களுடன் வழிபடப்படுகிறது

என்னும் உணர்வு ஏற்படும். இந்த எண்ணம் ஏற்படும் பொழுது மற்றவர்களால் வழிபடப்படும் தெய்வங்களையோ, பிற சமயக் கொள்கைகளையோ இழிவுபடுத்தாத மனநிலை உண்டாகும். தன் வழிபடு தெய்வத்தின்மீது உரிமைமிக்க பற்று இருந்தாலும் பிற தெய்வவடிவங்களின்மீது வெறுப்புத் தோன்றாது. இந்த நிலை தான் சமரசம் எனப்படும். இந்தச் சமய சமரசநிலை எளிதில் அனைவரிடமும்அமைந்து விடாது. இந்தச் சமரசம்தான் உண்மைமையான சமய சமரசம்.

இதை அடைந்த ஒருவன் ஒரு வழிபடுகடவுளை அழுத்தமாகப் பற்றி நிற்பான்; ஆனால் பிற தெய்வங்களை இகழமாட்டான்.

யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவார்

(சித்தியார். அபக்கம் 115)

என்று சித்தாந்த சாத்திரம் கூறுவது இந்த நிலைதான்.

தன்னால் வழிபடப்படுவது ஒன்று மட்டுமே கடவுளின் உண்மையான வடிவம் என்னும் நிலையைக் கடந்து இந்தச் சமரச நிலையை அடைந்தவன் சமயவாழ்க்கையில் இறை யனுபவத்தில் மூழ்க மூழ்கப் பரம்பொருள் ஒன்றே என்றும், அதுதான் தன் வழிபடு கடவுள் உள்ளிட்ட எல்லா நாமரூபங்களையும் தாங்கி அருள்பாலிக்கிறது என்றும் உணர்வான். இந்த இரண்டாவது நிலையே சமயாதீதம் எனப்படுகிறது. இச்சொல்லுக்குச் சமயங்களைக் கடந்த நிலை என்று பொருள். தன் சமயம் பிற சமயங்கள் ஆகிய அனைத்தையும் கடந்து ஒன்றே பரம் என்று உணர்ந்ததால் இது சமயாதீதம் ஆயிற்று.

இந்த நிலையில் இருப்பவனுக்கு நன்மை தீமை, உயர்வு தாழ்வு எதுவுமே இல்லை. இந்த நிலையிலிருந்து சொல்லும்பொழுது தான் எம்மதமும் சம்மதம் என்னும் தொடர் உண்மையான பொருள் படைத்தது ஆகிறது. இந்தச் சமயாதீத நிலையைக் கௌமார சாத்திரம்,

எங்குளறிந்த கல்லும் நிலத்தினில் வீழ்ந்தாற் போல
எவ்வுலகத்து பாவர் எவ்வாறு எண்ணினாலும்
அங்கு அவன் போய் அருளுவது ஓர் பொருளே ஆம் என்று அதி
அறிந்தவரே யோக நிலையாளர் ஆவார்

(நானிலைச்சதகம் 50)

எனச் சுட்டுகிறது. இந்தச் சமயப் பொதுமை உணர்வு வராமல் உதட்டளவில் கூறப்படுகின்ற ஒருவனே தேவன் என்னும் பேச்சு பொருளற்ற வெற்றுக் கூப்பாடே ஆகும்.

எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படை நோக்கம் தனிமனிதனின் ஆன்ம ஈடேற்றம் என்பதுதான். மக்கள் இயற்கை மற்றும் சூழல்களின் காரணத்தால் அறிவு . உணர்வு நிலைகளில் பல்வேறு நிலைகளில் உள்ளனர் என்பது உண்மை. இவ்வாறு பல்வேறுபட்ட நிலையில் உள்ளவர்களுக்கு அவரவர்களின் பக்குவத்திற்கு ஏற்ற சமய நெறிகளைக் காட்ட வேண்டியது முழுமையான ஒரு சமயத்தின் கடமையாகிறது. இந்தப் பக்குவ வேறுபாடே பல சமயங்களில் தோற்றத்திற்கும் நிலைபேற்றிற்கும் அடிப்படைப் காரணம் அதனால்தான் முருக வழிபாட்டு நெறியாகிய கௌமாரம் சமயப் பொதுமையை வலியுறுத்துகின்ற அதே சமயத்தில், தனி மனிதன் தொடக்க நிலையில் ஏதாவது ஒரு தெய்வ வடிவத்தை அதற்குரிய வழிபாட்டு முறையில் வழிபட வேண்டும் என வலியுறுத்துகிறது. இது

ஒரு சமயத்தின் வழியே சகுணப் பிரம்ம உபாசனை
செய்கின்றவர்களுக்கே
யதார்த்த ஞானம் உண்டாகும்

(சத்திய வாசகம் 86)

என வண்ணச்சரபரால் உணர்த்தப்படுகிறது. மேலும் தெளிவாக மற்றோர் இடத்தில்

சமயத் தொடக்கர் சொல்லில் சாராமல் எல்லாம்
அமையப் படைத்து அளிப்போர்க்கு ஆளாய் - இமை
அணையும்

போதும் மறவாதுஓர் பொற்புஉருவம் பற்றி நிற்பது
ஓதும் தவத்துள் உயர்வு *(சிறப்பு நூல் - 64)*

என்பார் சுவாமிகள்.

இப்படி ஒரு தெய்வழிபாட்டில் தொடங்கினாலும் இறையனுபவம் மீதுற மீதுறச் சமரசம், சமயாதீதம் ஆகிய படிநிலைகளால் சமயப் பொதுமை தானாகத் தோன்றும். சமயப் பொதுமையை நாம் தேட வேண்டியது இல்லை; அது தானாக வரும் என்பதை.

பலவற்று ஒன்று எனப் பழகப்பழக
யாவும் தானா இலங்கும் அன்றே

(சத்திய சூத்திரம் 94)

என அவர் விளக்குகிறார்.

எனவே தான் வழிபடும் அன்பர்களின் உணர்வு நிலைகளுக்கு ஏற்ப வழிபடுவதற்கு வாய்ப்பாகப் பரிதி, ஈசன், பராசக்தி, மாயவன், கரிமுகன், குகன் என்னும் அறுசமய வழிபாடுகளுக்கும் கௌமார மடாலயம் பேதமற்ற வாய்ப்பு அளிப்பதோடு சமயாதீதமாகிய குருவழிபாட்டை முதன்மையாகப் போற்றுகிறது. இதுதான் உண்மையான, நிலையான, மாசற்ற சமயப் பொதுமை என்பது கௌமாரக் கோட்பாடு.

36. புறநானூற்றில் முருகப் பெருமான்

தமிழ்மொழியின் பழமைக்கும் இலக்கிய வளத்திற்கும் தமிழர்களின் பண்பாட்டிற்கும் சான்றாக விளங்குபவை சங்க இலக்கியங்கள். எட்டுத் தொகை பத்துப் பாட்டு என இப்போது கிடைப்பவை மட்டும்தான் சங்ககாலத்தில் இயற்றப்பெற்ற செய்யுள்கள் எனக் கருதிவிடக் கூடாது. சில புலவர்கள் குறிப்பிட்ட பொருள், செய்யுள் அடி, யாப்பு அடிவரையறைகளைக் கொண்டு தொகுத்த நூல்கள் மட்டுமே இன்று கிடைக்கின்றன.

சங்ககாலத்தில் இறைவழிபாட்டில் பாடப்பெற்ற தோத்திரப் பாடல்கள் நடுகல் வணக்கத்தில் பயன்பட்ட வீர வணக்கப் பாடல்கள், திருமணம், பிள்ளைப்பேறு போன்ற சடங்குகளிலும் மரணச் சமயத்திலும் பாடப்பட்ட சடங்குப் பாடல்கள், முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை போன்ற வெற்றிக் கூத்துப் பாடல்கள் மட்டுமல்லாது உழுதல், நீர் இறைத்தல், நடுதல், அறுவடை செய்தல், பயணம் செய்தல் போன்ற தொழிற்பாடல்களும் கட்டாயமாக இருந்திருக்கும். அவற்றையெல்லாம் எழுதிவைத்துத் தொகுத்துப் போற்றுநரின்மையால் காலவெள்ளத்தில் அழிந்து ஒழிந்துவிட்டன . யாரும் எதற்காகவும் திட்டமிட்டுத் தமிழ் இலக்கியங்களை அழித்தாக நம்பத்தகுந்த சான்றுகள் இல்லை. நம்முடைய நல்லூழால் தொகுத்துப் போற்றப் பெற்ற தொகை நூல்களையாவது இன்று பெற்றுள்ளோம்.

இன்று கிடைக்கும் சங்க நூல்கள் தமிழின் பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்த சமயம் சாராத நூல்கள். எனவே இந்த நூல்களில் சமயக் கருத்துக்கள் ஓரளவே காணப்பெறும். எனினும் இவற்றைக் கொண்டே சங்ககாலத் தமிழர்கள் தெய்வ நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர் என்றும், ஏதோ ஒரு வகையில் கடவுள் வழிபாட்டையும் கைக்கொண்டிருந்தனர் என்றும் சற்றும் ஐயத்திற்கு இடமில்லாமல் அறிகிறோம்.

அவ்வகையில் குறிஞ்சிக்குரிய குன்றுதோறாடும் குமரவேளைப் பற்றிப் புறநானூற்றில் கூறும் செய்திகளைத் தொகுத்துச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

சங்கப் பாடல்களுள் திருமுருகாற்றுப்படையும், பரிபாடலில் எட்டுப்பாடல்களும் (இப்பொழுது கிடைப்பவை இவ்வளவே பரிபாடலில் மொத்தம் செவ்வேளுக்குரியன முப்பத்தொன்று ஆகும்) முருகப்பெருமானையே போற்றுவன. பாட்டும் தொகையுமாக உள்ள ஏனைய நூல்களில் ஆங்காங்கு அறுமுகப் பரமனைப் பற்றிய செய்திகள் உவமையாகவோ, வேறு பயன் கருதியோ இடம் பெற்றுள்ளன. இவ்வாறு வருவனவற்றுள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளவற்றைக் காண்போம்.

முருகப்பெருமானின் அவதார நோக்கமே சூரபதுமனை வெற்றி கொள்வதுதான். அந்தச் சூரன் வலிமை மிக்கவன். எனவே அவனை வென்ற முருகப் பெருமானின் வெற்றிச் சிறப்பே வீரத்தைப் போற்றும் புறநானூற்றில் அதிகமாக எடுத்துக் கூறப்படுகிறது :

பொருநர்க்கு இரு நிலத்து அன்ன நோன்மைச் செருமிகு சேஎய் (14:17-19) என்பது பொய்யா நாவிற் கபிலர் கூற்று. எதிர்த்துப் போர் புரிபவர்களால் துளைக்கப்படமுடியாத காரணத்தால் பெரிய நிலத்தினைப் போன்ற வலிமையை உடையவரும், பேராற்றல் மிக்கவருமாகிய செவ்வேள்' என்பது இதன் பொருள். கபிலரின் செருமிகு சேஎய்' என்னும் இந்தச் - சொற்றொடரையே இவருடைய நண்பராகிய பரணரும் அகநானூற்றில், திருமனி விளக்கில் அலைவாய்ச் செருமிகு சேயொடு' எனப் பயன்படுத்தியுள்ளமை கண்டு மகிழத்தக்கது. (26:21)

சூரனாகிய பெரிய பகைவன் மீது முருகப் பெருமான் கொண்ட சினம் 'முருகற் சீற்றத்து' (16:12) என்றே வியந்துரைக்கப்படுகிறது. புறநானூற்றின் பழைய உரையாசிரியர் இத்தொடருக்கு, முருகனது வெகுட்சி போலும் வெகுட்சியினை உடையா எனப் பொருள் உரைக்கிறார். இக்கருத்தையும் கபிலர் அகப்பாடல் ஒன்றில், முருகன் அன்ன சீற்றத்துக் கடுந்திறல் எந்தை' (158:16 என்கிறார்.'

நக்கீரர், 'சிவ பெருமான், பலராமர், திருமால், முருகவேல் ஆகிய நான்கு தெய்வங்களும் உலகைக் காப்பாற்றுகின்றனர்.

அவர்களுள் முருகப் பெருமான் தான் கருதிய செயல் எவ்வளவு செயற்கரியதாயினும் இனிதே செய்து முடிக்கும் பேராற்றல் உடையவர்' என்று கூறுகிறார். இங்கு புலவர் கருதுவது இருசம்மாரமே என்பது வெளிப்படை. நக்கீரர் வாக்கு வருமாறு:-

மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஆர்தி ஒண் செய் யோனும் என
ஞாலம் காக்கும் கால முன்பில்
தோலா நல்இசை நால்வருள்ளும்
....
முரு கொத் தீயே முன்னியது முடித்தலின் (56:7-15, 14)

சூரபதுமனை எதிர்த்தபோது குமரக்கடவுள் பல பூத கணங்களைத் தம் படை வீரராக அழைத்துச் சென்றார். அப்பூதகணங்கள் வலிமை வாய்ந்தவை; பல படைக் கலங்களை ஏந்தியவை; தம் தலைவனுக்குப் போரில் வெற்றி பெற்றுத் தந்தவை. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனின் படைவீரர்களும் இத்தகையவர் என உவமையாக்கிக் கூறுகிறார் கல்லாடர். அப்போது முருகப்பெருமான் கடம்ப மலர்களையும், பசிய இலைகளையும் சேர்த்துக்கட்டிய மாலையை அணிந்தவன் என்றும் கூறுகிறார்.

'கார் நறும் கடம்பின் பாசிலைத் தெரியல்
சூர்நவை முருகன் சுற்றத் தன்னநின்
கர்நல் அம்பில் கொடுவில் கூளியர். (23 : 3-5)

(கார்-மழைக்காலத்தில் மலரும். நறும்-நறுமணம் உடைய .பாசிலை -பசிய வலை. தெரியல்-மாலை. தர்-தரனை . நவை முருகன்-கொன்ற குமரன் , வினைத்தொகை)

உலகம் தோன்றியபோது முதன்முதலில் தோன்றியவை மலைகள். மலையும் மலைசார்ந்த இடமும் தமிழில் குறிஞ்சி என வழங்கப்பெறும். இதற்குரிய கடவுள் முருகப்பெருமான் என்பது அருந்தமிழின் அகப்பொருள்மரபு. தொல்காப்பியம் இதனை, சேயோன் மேய மைவரை உலகமும்'' (பொருள்-அகத்திணை. 5) என வரையறுத்துள்ளது.

புறநானூற்றில் இக்கருத்தையும் காண்கிறோம்.

பெருமழைக்கு, இருக்கை நான்ற உயர்மலைத்
திருத்தகு சேஎய்' (125:18-20)

என்பன அவ்வடிகள். பழைய உரையாசிரியர் இப்பகுதிக்கு, பெரியமழைக்கு இருப்பிடம் ஆதற்கு அமைந்த உயர்ந்த மலையை உடைய திருத்தக்க சேய் என்று உரை கண்டுள்ளார்.

திருமுருகாற்றுப்படை, ''வேலன் தைஇய வெறிஅயர் கனலும், காடும், காவும், கவின்பெறு 'துருத்தியும், மாறும், குனனும், வேறுபல் வைப்பும், சதுக்கமும் சத்தியும் புதுப்பூங் கடம்பும், மன்றமும், பொதியிலும் (222-226) முருகப்பெருமானை வழிபடுதற்குரிய இடங்கள் என்கிறது. இவற்றுள் ஆற்றங்கரையில் வழிபடப்பெறுபவர் ஆறுமுகவேள் என்னும் கருத்தைக் கல்லாடனார் புறநானூற்றில் காட்டுகிறார்.

வெளிறில் நோன்காழ்ப் பலைன நிலை முனைக்
களிறுபடிந் துண்டெனக் கலக்கிய துறையும் (23:1-2)

என்பது அப்பகுதி. வயிரம் பாய்ந்த வலிய தூண்களை உடைய கூடத்தில் தங்கி இருப்பதை வெறுத்த யானைகள் சென்று இறங்கித் தண்ணீர் குடித்தலால் கலங்குகின்ற ஆற்றங்கரையை (உடையவன் முருகப்பெருமான்) என்பது கருத்து. பெருங்கதையிலும் முருகப்பெருமான் ஆற்றங்கரையில் உறைவதை, பெருவேள் மறைந்து பெரும்புனல் ஆடும் (1:42:56) என்கிறார் சமயராகிய கொங்குவேளிர்.

திருச்சீரலைவாய் ஆகிய செந்திற்பதி முருக வழிபாட்டிற்குத் தலைமைவாய்ந்த தொன்மையான இடம். புறநானூற்றிலும் இக்குறிப்பு இடம் பெற்றுள்ளது. 'தாழ்நீர், வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில் நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை (55:17-19) என்பது புறப்பாடற் பகுதி. இதற்குப் பழைய உரைகாரர் ''தாழ்ந்த நீரை உடைய கடலின்கண் வெள்ளிய தலையை உடைய திரை அலைக்கும் 'செந்திலிடத்து நெடிய

முருகவேள் நிலைபெற்ற அழகிய அகன்ற துறை என்று பொருள் சொல்லியுள்ளார்.

முருகப்பெருமான் பேரழகன். அவனுடைய கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு கற்பென்னும் திண்மைஉடைய நல்ல பெண்களின் உள்ளத்தில் கூடச் சிறிய சலனத்தை ஏற்படுத்தி விடுகிறதாம். 'தேம் கடம்பின் மால்பட்டு அழிந்தது பூங்கொடியார் மனம் (கந்தர் அலங்காரம் 40) என்கிறார் அருணகிரி நாதர். இந்தக் கருத்தை அப்படியே நாம் கபிலர் வாக்காகப் புறநானூற்றில் காண்கிறோம். நல்லவர்க்கு ஆர் அணங்கு ஆகிய மார்பின் ....சேஎய் (14:16,18,19) என்னும் இவ்வடிகளுக்கு. நற்பண்புகளை இயற்கையாகப் பெற்றுள்ள மகளிருக்கு மிகுந்த துன்பத்தைத் தருவதாகிய மார்பினை உடைய செவ்வேள் என்பது பொருளாகும்.

இனிப் பிலிமுக ஊர்தி எனவரும் சொற்றொடர் பற்றிய சிந்தனையோடு இக்கட்டுரையை நிறைவு செய்வாம்.

மணிமயில் உயரிய மாறா வென்றிப் பிலிமுக ஊர்தி ஒண் செய்யோன் (56:7, 8) என்னும் புறப்பாட்டின் அடிகளுக்குப் பழைய உரையாசிரியர், நீலமலி போலும் நிறத்தை உடைய மயிற் கொடியை எடுத்த மாறாத வெற்றியை உடைய அம் மயிலாகிய அந்தியை உடைய ஒள்ளிய செய்யோன்' என்று தம் உரை கறிப் பிற்குறிப்பாக, பிலிமுகம்பிள்ளையார் ஏறும் யானை என்றும் சொல்லுபா என்று பிறர்கோளாகக் குறிப்பிடுகிறார்.

சங்க இலக்கியங்களுள் திருமுருகாற்றுப்படையில், ஓடாப் பூட்கைப் பிலி முகம் வாழ்த்திசு (247) எனவும், பரிபாடலில், சேயுயர் பிரிமுகம் கூர்ந்து அமர் உழக்கி' (5:2), 'பின் முகம் ஊர்ந்த வெல்போர் இறைவா (17:49). பிலிமுகம் உள்படப் பிறவும் ஏந்திய (8:102) எனவும் இச்சொல் ஆளப்பட்டுள்ளது.

திருமுருகாற்றுப்படை உரையாசிரியர்களுள் நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும் யானை என்று தம் கருத்தை உரைத்து, மயில் என்பாரும் உளர் எனச்சுட்டிச் செல்கின்றனர். உரையாசிரியரும் (இளம்பூரணர்), பரிதியாரும் மயில் என்று கூறி அமைகின்றனர்.

பரிபாடலின் 5, 17 ஆம் பாடல்களுக்கு உரை எழுதும்போது பரிமேலழகர் யானை என்றே சொல்கிறார். 8ஆம் பாடலில் பிண்முகம் ஏந்தி என்றதால் ஐயமின்றி மயில் என்பது பெறப்படுகிறது.

இப்பொழுது முருகப்பெருமானின் வாகனமாகக் கூறப்படும் சங்க இலக்கியப் பகுதிகளில் பிலிமுகம் என்னும் சொல்லிற்கு எப்பொருள் சிறக்கும் என்பது வினா.

சங்ககாலத்தின் இறுதி நாட்களில் வழக்கில் இருந்த ஓர் வரலாறு வருமாறு: சூரபதுமனோடு போரிடச் செல்லும் போது தேவர்கள் குமரவேளைத் தமக்குச் சேனாதிபதி ஆக்கிக் கொண்டனர். அப்போது தீக்கடவுள் முருகப் பெருமானுக்குச் சேவலையும், இந்திரன் மயிலையும், இயமன் ஆட்டுக்கடாவையும் தத்தம் உடம்புகளிலிருந்து உண்டாக்கி அளித்தனர். இதனைப் பரிபாடல், பிடி,

அல்லலில் அலைன் தன்மெய்யில் பிரித்துச்
செல்வ வாரணம் கொடுத்தோன்; வானத்து
வளங்கெழு செல்வன்தன் மெய்யில் பிரித்துத்
திகழ்பொறிப் பீலி அணிமயில் கொடுத்தோன் ;
திருந்துகோன் ஞமன்றன் மெய்யில் பிரிவித்து
இருங்கல் வெள்யாட் டெழில்மறி கொடுத்தோன்
ஆஅங்கு, அவரும் பிறரும் அமர்ந்துபடை அளித்த
மறியும் மஞ்ஞையும் வாரலச் சேவலும்,
பொறிவ ரிச் சாபமும் மாலும் வாளும்
செறிஇலை ஈட்டியும் குடாரியும் கலிச்சியும்
தெறுகதிர்க் கனலியும் மாலையும் மணியும்
வேறுவேறு உருவின்இவ் வாறிரு கைக்கொண்டு'

(5:57-68)

என்று விரிவாகக் கூறுகிறது. தேவர்களால் கொடுக்கப்பெற்ற வேறுவேறு வடிவங்கள் உள்ள பொருள்களை முருகப்பெருமான் தன் பன்னிரு கரங்களில் கொண்டார் எனத் தெளிவாகக் கூறியுள்ளதால் அவற்றில் வாகனங்களைக் கொள்ளுதல் முறை அன்று; படைக்கலங்களையும் கொடிகளையுமே கொள்ளவேண்டும். இதனால் மயிலை

ஊர்தியாகக் கொள்வதைவிட - தொண்மை வாய்ந்த பழைய நூல்களைப் பொறுத்தவரை- கொடியாகக் கொள்வதே சிறப்பு.

இக்காரணத்தால் மயில் என்னும் வாகனம் என்பதைவிட, பிணிமுகம் என்னும் யானை ஊர்தி என்னும் பொருளே பழைய இலக்கியங்களுக்குப் பொருத்தமானதாகும்.

நக்கீரர் தெளிவாகவும் தனித்தனியாகவும் 'மன்மயில் உயரிய மாறா வென்றிப் பிண்முக ஊர்தி (புறம், 56:7-8) எனக் கூறியிருப்பது சிந்தனைக்குரியது.

நளிவரும் பரப்பின் மாக்கடல் முன்னி
'அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
தருடை முழுமுதல் தடிந்த பேர்இசைக்
கடுஞ்சின விறல்வேல் களிறுவர்ந் தாங்கு' (11:3-8)

என்னும் பதிற்றுப்பத்து அடிகளும் இக்கருத்தை அரண் செய்கின்றன.

இதுகாறும் நோக்கியவற்றால் தமிழகத்தில் சங்ககாலத்திலேயே முருகப்பெருமான் பெருங்கடவுளாகப் போற்றப்பட்டார் என்பதும், அவர் வீரத்தின் சின்னமாக மதிக்கப் பட்டார் என்பதும், போரில் அவருக்குரிய சிறந்த வாகனமாகப் பிலிமுகம் என்னும் யானை கருதப்பெற்றது என்பதும் தெளிவாயின.

செந்தமிழர் போற்றிசெயும் சேந்தனை எந்நாளும்
வந்தித்தல் நல்ல வரம்.

37. பெற்றோர் வாக்கு வேத வாக்கு

வாழப் பிறந்தது மானிடச் சாதி! இப்பிறப்பின் நோக்கம் குறிக்கோள் சாதித்தலே ஆகும். அதுவும் மண்ணகத்தில் வாழ வேண்டும். அதனால்தானே மறையெனப் போற்றப்படும் திருக்குறளில் வாழ்வாங்கு வாழ வழி காட்டப் பெறுகின்றது.

வாழ்தல், அறிவியல் சார்ந்த ஒரு கலை. உளவியல், சமூகவியல், தாவரவியல், வேளாண்மையியல், கால்நடையியல், கட்டுமானவியல், தொழிலியல், பொருளியல், நிர்வாகவியல் ஆகிய அறிவியல் துறைகள் அனைத்தும் சங்கமித்த தனிச்சிறப்புடைய வாழ்க்கையே வாழ்க்கை! மானிட வாழ்வியல், விலங்குத் தன்மையுடையதல்ல.

வரலாற்று ஆசிரியர் சென்ற காலத் தலைமுறைகளை விவரித்துப் பேசுவான். ஆனால் இலக்கியப் படைப்பாளன் எதிர்வரும் தலைமுறையினரைப் பற்றிச் சிந்திப்பான். எழுதுவான். எப்போதும் அறிஞர்களுடைய கவலை அடுத்த தலைமுறையைப்பற்றியதாகவே அமையும்.

இன்று வாழ்வோரின் கடமை, இவர்கள் வாழ்ந்து முடிப்பது மட்டுமல்ல; அடுத்து வரும் தலைமுறையினர் சிறப்போடு வாழ்தலுக்குரிய சூழலை உருவாக்கித் தரவேண்டும். என்பது திருக்குறளின் கருத்து; முடிவும் கூட மனையற வாழ்க்கையின் மாண்பு, சுவைமிக்க உணவில் இல்லை; நாம் குவித்த பொருளில் இல்லை. வேறு எதில் தான் இருக்கிறது.மனையறத்தின் சிறப்பு? ஆம்! அறிவார்ந்த மக்களைப் பெறுவதிலும் அவர்களை நல்வழி வளர்ப்பதில் தான் மனையறத்தின் மாண்பு பொருந்தியிருக்கிறது.

'பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற'

என்பது திருக்குறள். 'அறிவறிந்த' என்ற சொல்லை மக்களுடன் சேர்ந்து அறிவறிந்த மக்கள் என்பார்கள் உரையாசிரியர்கள்.

அறிவு, கல்வி கேள்விகளாலும், வாழ்க்கை அனுபவங்களின் அடிப்படையில் தோன்றுவது. ஆதலால் மக்கள் பிறந்து வளர்ந்த பிறகுதான் அறிவறிந்த மக்களாதல் இயலும். ஆதலால் அறிவறிந்த என்ற சொல்லை மக்களின் பெற்றோர்கள்பால் சேர்த்துக் கூறுவதே பொருந்தும். ஆம்! பெற்றோர்கள் மனையற வாழ்க்கையை அறிவறிந்த நிலையில் நடத்துதல் வேண்டும். அறிவார்ந்த நிலையில் அன்பும், அறமும் கலந்த மக்கள் தோன்றுவர்.

பிறப்பில் கவனமாக இருந்தால் மட்டும் போதாது. அதைப் போலவே வளர்ப்பிலும் கவனமாக இருத்தல் வேண்டும். பொதுவாகவே நமது நாட்டில் கிராமப் புறங்களில் குழந்தைகள் வளர்க்கப்படுவதில்லை. அவர்களாகவே வளர்கின்றனர். அதனால்தான் நமது சமூதாயத்தில் தரம் குறைந்திருக்கிறது. குடும்பம் மனையறத்தில் சிறந்து விளங்கினால் அக்குடும்பம் மனிதகுல வரலாற்றிலேயே இடம்பெறும்.

அப்பூதியடிகளின் வரலாறு ஓர் எடுத்துக்காட்டு. திங்களூர் எனும் ஊரில் அப்பூதியடிகள் அப்பர் பெருமான் திருப்பெயரால் பல அறப்பணிகள் செய்து வந்தார். ஒருமுறை அப்பர் அவரது இல்லத்துக்கு வந்தார். அவரை அமுது செய்ய அழைத்தார். அவரும் இசைந்தார். அப்பூதியடிகள் தமது மூத்த பிள்ளை மூத்த திருநாவுக்கரசை அழைத்து வாழைக் குருத்தை அரிந்து வருமாறு கட்டளையிட்டார். அச்சிறுவன், 'நல்ல தாய், தந்தை ஏவ நான் இது செய்யப்பெற்றேன்'. என்று மகிழ்ச்சியுடன் தோட்டத்திற்குச் சென்றான். தோட்டத்தில் உள்ள வாழைக் குருத்தை அறியும் போது ஒரு கொடிய நாகம் அந்த சிறுவனைத் தீண்டியது. அதைப் பொருட்படுத்தாது அதை அந்த தாயிடம் கொடுத்தான். விஷம் தலைக்கேறியதால் தன்னை நாகம் தீண்டிய செய்தியை அறிவிக்காமல் வீழ்ந்து மாண்டான். அச்சிறுவன் 'பெற்றோர் வாக்கை வேத வாக்காக' கொண்டு அச்சிறுவன் தமது கடமையைச் செய்தான். தனக்கு இட்ட பணிக்குத் தடைவந்துவிடக் கூடாது என்று செயலாற்றினான்.

அதுபோல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வளர்க்க வேண்டும். ஒருவர் தமது முன்னோரைச் சொல்லி

அறிமுகப்படுத்திக் கொள்ளுதல் வளர்ச்சி இன்மையைக் குறிப்பதாகும். மாறாக தனக்குத்தானே அறிமுகமாக விளங்கி வாழ்பவர்கள், தமது குடும்பத்திற்கும் விளக்கம் தருகிறார்கள். இவரைப் பெறுவதற்கு இவருடைய தந்தையும் தாயும் என்ன தவம் செய்தனரோ என்று வியக்கும் வண்ணம் வாழக்கூடிய தகுதி, திறன்களுடன் குழந்தைகளை வளர்க்க வேண்டும். அது போல் வளர்ந்த பிள்ளைகளும் தங்களது தாய், தந்தையின் சொற்களை ஒரு வேத வாக்காக நினைத்து நமது நல்வாழ்க்கையை அவர்கள் காட்டும் அறவழி பின்பற்றி நடக்கவேண்டும். பெற்றோர்கள் காட்டும் நல்வழியிலே செல்பவர்கள் மட்டுமே வாழ்வில் வெற்றி பெறுகின்றனர். 'நல்ல தாய், நல்ல தந்தை' என்று பெயர் விளங்க வாழ்தலே சிறப்புற அமைந்த மனையற வாழ்க்கை.

' மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லென்னும் சொல்'.

39. வேற்றுமை இனி இல்லை நம்மில்

அறிவு, உணர்வு, உழைப்பாற்றல், மானிட சாதி அனைத்துக்கும் ஒன்றுபோல் அமைந்துவிடுவதில்லை. சில வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் இருத்தல் இயற்கை. நாம் இன்று இயற்கைக்குப் புறம்பான வாழ்க்கையைத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உண்ணும் பொருள்களில் சுவை வேறுபாடுகள் இல்லையா? சுவை வேறுபாடுகளை மனிதன் மதிநுட்பத்துடன் கையாண்டு சுவையைக் கூட்டுகின்றவாறு கூட்டியும் சமைக்கின்றவாறு சமைத்தும், சுவைக்கின்றவாறு சுவைத்தும் மகிழக் கற்றுக் கொள்கின்றோம்.

உணவின் சுவையைப் பிரித்தறியும் மனிதன், தமக்குள்ளே ஏற்படும் வேற்றுமைகளைக் களைந்து இணைந்து வாழும் வாழ்வைப் பெறமுடிவதில்லை. இதற்குக் காரணம் ஒருவருக்கொருவர் கொள்ளும் வேற்றுமைக் கருத்தே ஆகும். சாதி வேற்றுமை, சமய வேற்றுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், இனவேற்றுமை என்ற வேற்றுமையும் பலவிதமாக இருக்கிறது.

அடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பற்றிய முனைப்புக் கொண்டவனாக இருக்கின்றான். எல்லோருக்கும் ஒரே மாதிரியான உயிரணுக்கள், கரணங்கள், பொறிகள், புலன்கள் அமைந்து விடுவதில்லையே. நான்கு விலங்குகள் ஒன்றாக கூடி வாழ்ந்தாலும் இறைதின்னும் போது ஒன்றையொன்று விரட்டுகின்றன. மனிதனும் அப்படித்தான் உள்ளான். கற்றவனாயினும், கல்லாதவாயினும் தான், தன்குடும்பம் என்ற அளவில் சுருங்கிப் போய்விடுகின்றான். ஏதோ ஒரு வகையில் வேற்றுமை கொண்டு மற்றவரைத் தள்ளிவைக்கிறான். ஒப்புரவு உணர்வு எல்லோருக்கும் உருவாவதில்லை.

சமுதாயத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளின் காரணமாக வேறுபாடுகளைப் பெரிதாக்கி வளர்த்து இலாபம் ஆக்க நினைப்பது சமுதாயக் குற்றம். ஏற்றத்தாழ்வுகள் விலங்கின் இயற்கைக்கு அது பொருந்தும். ஆனால் விலங்கிலிருந்து மேம்பட்ட மனிதனுக்கு அது பொருந்தாது. ‘விலங்கொடு

மக்கள் அனையர் இலங்குநூல் கற்றரோடு ஏனையர் ' என்னும் திருக்குறளில் திருவள்ளுவர் நுட்பமாக ஒரு செய்தியைப் புலப்படுத்துகிறார். விலங்கிற்கும் மனிதனுக்கும் என்ன வேற்றுமை? கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் என்ன வேற்றுமையோ அதுதான் என்பது இந்தக்குறளின் கருத்து. அப்படியானால் வள்ளுவப் பெருமான் சொல்வது என்ன உண்மையான கல்வி பெற்றவனாய் ஒருவன் இருந்தால் விலங்கை விட மேம்பட்டவன் என்று சொன்னால் அவன் யாரிடமும், வேற்றுமை கொள்ளக்கூடாது. எல்லோரையும் தம்மவர்' என்று ஏற்றுக் கொள்ளவேண்டும். எல்லோர்க்கும் அன்பு காட்டுவதே மக்கட்பண்பு என்கிறார் திருவள்ளுவர். வேற்றுமை பாராட்டாது இருந்தால் தான் அன்பு வளரும் என்பது தெளிவு.

மனிதருள் நான்கு வகை உண்டு. ஒன்று பாவியிலும் பாவி, இரண்டாமவன் பாவி, மூன்றாமவன் உத்தமன், நான்காவது வகை உத்தமோத்தமன் ஆவான். முதலாமவன் நன்மையே புரிவர்க்குத் தீங்கு புரிகின்றவன் கடைநிலையிலும் கடைசி. தீமை புரிந்தவனுக்குத் திரும்பத் தானும் தீமை செய்பவன். கடைநிலையன். நன்மை புரிகின்றவனுக்கு நன்மை புரிகின்றவன் உத்தமன், தீமையே புரிகின்றவனுக்கும் நன்மை புரிகின்றவன் உத்தமோத்தமன் அவன் தான் மகாத்மா. இது ஏன் ஏற்படுகின்றது என்றால் மனித மனத்தின் ஏற்றத் தாழ்வுகளால் இந்த வேறுபாடுகள் ஏற்படுகின்றது.

பாரதியாருடைய முரசுப் பாட்டு யாவரும் அறிந்தது.

' வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றது அப்பூனை - அவை
பேருக்கு ஒரு நிறமாகும்
சாம்பல் நிறம் ஒரு குட்டி - கருஞ்
சாத்து நிறம் ஒரு குட்டி
பாம்புநிறம் ஒரு குட்டி - வெள்ளைப்
பாலின் நிறம் ஒரு குட்டி '

என்று பூனைக் குட்டிகளின் வழியாக ' எந்த நிறம் இருந்தாலும்

அவையாவும் ஒரேதரம் அன்றோ ?' என நம் சிந்தனையைத் தூண்டுகிறார்.

' வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் அதில்
மானுடர் வேற்றுமையில்லை'

என்ற சொற்கள் இன்றும் பொருந்துபவையாகும். வண்ணம், வர்ணம் என்று சாதியையும் குறிக்கும்; நிறத்தையும் குறிக்கும்.

பக்கத்து வீட்டுக்காரனின் வளர்ச்சியும் வேற்றுமையில் முடிகின்றது. மொழியால் வேறுபடுகின்றோம். நீர் பங்கீட்டினாலும் மாநிலங்களுக்கிடையே வேறுபாடுகள். இப்படி வேறுபாடுகள் ஒவ்வொரு நிலையிலும் தொடர்கின்றது.

வேறுபாடுகளைக் களைந்து வேற்றுமையில் ஒற்றுமை காண்பவனே மனிதன். அவன் மனிதருள் மாணிக்கம் எனப் போற்றப்படுகின்றான். எந்த வகையிலும் வேற்றுமை வேண்டாம் என்பது பின்பற்றதக்க உயர்ந்த கோட்பாடு ஆகும்.

வேற்றுமை இனி இல்லை நம்மில்

வாழ்க! வளர்க!!

39. அறுவகை இலக்கணத்தில் எழுத்ததிகாரப் புதுமைகள்

நூல் அறிமுகம்

அறுவகை இலக்கணம் என்பது வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அவர்களால் (1839 -1898 இயற்றப்பெற்ற ஒரு தமிழ் இலக்கண நூல் ஆகும். வழக்கமான ஐந்து அதிகாரங்களோடு புலமைக்கும் ஓர் இலக்கணம் வகுத்துரைத்துள்ளதால் இந்நூல் அறுவகை இலக்கணம் எனப் பெயர் பெற்றுள்ளது. இந்நூல் தெளிவான உரையுடன் சிரவையாதீனத்தில் கிடைக்கும்.

அறுவகை இலக்கணத்தின் எழுத்திலக்கணம் ஆகிய முதல்பகுதி 165 நூற்பாக்களால் ஆனது. அதில் கூறப்பட்டுள்ள புதுமையான இலக்கணக் கோட்பாடுகளைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

எழுத்துக்களுக்கு வரிவடிவம் கூறுதல்

'எழுத்து எனல் வடிவுடன் ஓசையும் உடைத்து''1 எனத் தொடங்கும் வண்ணச்சரபர் அதன் வரிவடிவத்தை விரிவாக விளக்குகிறார். இது எந்த இலக்கண ஆசிரியரும் நினைக்காத செயல் ஆகும். இரா.இளங்குமரனார், ''எழுத்தை ஓவியமாக்குதல் இங்கு புலப்படும். இம்முயற்சியில் தொல்காப்பியர் ஊன்றியிருப்பின் வடிவம், அதன் மாற்றம் பற்றிப் பலப்பலரும் பலப்பல பேசும் ஒரு நிலை தோன்றியிருக்கவே முடியாது. என்பது தெளிவாம்'' என்கிறார்.

எகர ஒகரங்களுக்குத் தலைப்புள்ளி இட்டு அவை குறில் எனக் குறிப்பதை வீரமாமுனிவர் மாற்றினார் என்பர். அந்த மாற்றத்தைச் சுவாமிகள் பாராட்டி ஏற்றுக் கொள்கிறார். நூற்பா 49) அகரமுதல் னௌகார இறுதியான எழுத்துக்களுக்கே அன்றி வழக்காற்றில் உள்ள அவர்காலத்தில் இருந்த-கூட்டெழுத்துக்கள், குறிப்பெழுத்துக்கள் ஆகியவற்றிற்கும் வரிவடிவங்களைக் காட்டுகிறார்.

ஐ, ஔ எழுத்துக்களின் ஒலி அளவு

ஒரு மாத்திரை அளவுள்ள உயிர்க்குறில், இருமாத்திரை கொள்ளும் உயிர்நெடில், அரை மாத்திரை ஒலிக்கும் மெய் என்னும் பொது விதியை அனைவரும் அறிவர். அக்கொள்கையின்படி ஐ, ஔ ஆகிய இரண்டு எழுத்துக்களும் நெடில்களாகக் கொள்ளப்பட்டு இரண்டு மாத்திரை கொண்டதாகக் கருதப்படும். எனினும் தொல்காப்பியர் ஐகாரக் குறுக்கத்தைக் கூறுகிறார் நாளடைவில் இதனோடு ஔகாரக் குறுக்கமும் சேர்ந்து கொண்டுவிட்டது. இந்த இரண்டும் ஒரு மாத்திரை அளவின எனப்படுகின்றன. ஆனால் இந்த எழுத்துக்கள் தன்னைச் சுட்டும் இடத்தைத் தவிர மற்ற எல்லா இடத்திலும் சொல்லின் முதல், இடை, கடை ஆகிய மூன்று இடங்களிலும் குறுகியே வழங்கும்.

''தற்சுட்டு அளபு ஒழி ஐமூ வழியும்
நையும்; ஔவும் முதல் அற்று ஆகும்,'3

என்பது நன்னூல். இந்த இரண்டு எழுத்துக்களையும் நெடில் என்று பெயரிட்டுவிட்டு மொழியில் அவை குறுகியே ஆளப்படுவதால் குறுக்கம் என் ஒன்றைப் புதியதாகக் கூறுவதால் என்ன பயன்? இதனைக் கருத்தில் கொண்டு சுவாமிகள் ஐ, ஔ ஆகிய இரண்டு எழுத்துக்களும் ஒன்றரை மாத்திரை கொண்டவை என்கிறார். இது குறிலுக்கும் நெடிலுக்கும் நடுவானது என்கிறார்.

''ஐ ஔ என்பவை குறில் நெடில் நடு ஆம்;
இவற்றில் ஒன்றொன்று ஒன்றரை மாத்திரை;
இவை நெடில் தாம் என்று இயம்புநர் சிலரே.

என்பது நூற்பாப்பகுதி. இக்கோட்பாட்டின்படி இந்த இரண்டு எழுத்துக்களும் இயல்பாகவே ஒன்றரை மாத்திரை ஒலியே உடையன. எனவே ஐகார

ஔகாரக் குறுக்கம் என்பன தேவையற்றன. இக்கருத்து இவரால் இயற்றப்பட்டுள்ள வண்ணத்தியல்பு என்னும் யாப்பு நூலிலும்,

'அருந்தமிழ்ச் சந்தத்து ஐயும் ஔவும்
ஈற்றில் குறளாய், இடையினும் முதலினும்
குறிலொடு ஒற்று எனவும் குலாஅய்ச் சிறிதும்
நெடில் எனல் இன்றி நிகழும்'

என வற்புறுத்திக் கூறுகிறார்.

இன்றைய மொழியியல் அறிஞர்கள் ஐ ஔ என்பனவற்றை அய், அவ் எனக் கொள்வதைப் பார்க்கும் போது இக்கருத்து ஏற்புடையதாகவே தோன்றுகிறது.

ஆய்த எழுத்து

தொல்காப்பியர் முதலியோர் கொள்ளும் முதல், சார்பு என்னும் எழுத்துப் பிரிவினையை வண்ணச்சரபர் கூறவில்லை. எனினும் ஆய்தத்தை உயிருக்கும் மெய்க்கும் இடையே வைத்து,

''ஆய்தம் துணை இழந்து அலமரும் காக்கை
குளறலில் மிடற்றில் குமுறொலி தருமே''8

என்கிறார். இளம்பூரணர் தம் தொல்காப்பிய உரையில், ''ஆய்தத்திற்குக் குற்றெழுத்துச் சார்பே எனினும் அது தலைவளியான் பிறத்தலின்'' எனக் கூறியதைக் கொண்டு பவணந்தியார்,

ஆய்தக்கு இடம் தலை அங்கா முயற்சி'' 10

என்கிறார். நச்சர் அந்நூற்பா உரையில், ''ஆய்தம் தமக்குப் பொருந்தின நெஞ்சுவளியால் பிறக்கும்... இனி ஆய்தம் தலைவளியானும் மிடற்றுவளியானும் பிறக்கும் என்பாரும் உளர்'' 11 என்கிறார். இவ்வாறு பழைய இலக்கணிகள் உந்தி, தலை, நெஞ்சு ஆகிய மூன்றையும் பிறப்பிடம் ஆக்கச் சுவாமிகள் மட்டுமே ஆய்தத்தின் பிறப்பிடம் மிடறு என்கிறார்.

'ஆய்தம் இடையினத்து ஒற்றுப் போலுமே' 12
'இடையினத்து ஒற்றொடு உறழும் ஆய்தமே' 13

என இவரால் ஈரிடங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆவி இடைமை இடம்மிடறு ஆகும்''14 என்றதற்கேற்ப இவரும் இடையின மெய்களுக்கு மிடற்றொலியைக் கொள்கிறார். அடுத்து முயற்சியைக் காண்போம்.

யரலவழள என்னும் இடையின மெய்கள் ஆறில் ரழலள 15 என்னும் நான்கும் நானுனி மேல்அண்ணத்தின் தொடர்பால் பிறக்கின்றன. யகரம் அடிநா கீழ் அண்ணத்தில் பொருந்தத் தோன்றுகிறது. 16 ஆக இடையின மெய்களுள் ஐந்து நாக்கு அண்ணம் தொடர்பு பெற்றே தோன்றுகின்றன; இவை நாவதிகாரம் பட்டவை என்பது உறுதி.

இலக்கண நூல்கள் கூறுவது போல் அங்காத்தலால் மட்டும் ஆய்தஒலி உண்டாகாது. அடிநா மேலேறி மேல்வரிசைப் பற்களின் இருமுனைகளோடும் பொருந்துவதாலேயே ஆய்தம் தோன்றுகிறது. இக்காரணத்தினால் ஆய்தம் நாவும் அண்ணமும் கொள்ளும் தொடர்பால் தோன்றும் இடையின எழுத்துக்களுக்கு இனம் ஆகிறது. நாவும் அண்ணமும் பொருந்துதலாகிய முயற்சி, அரை மாத்திரை ஆகிய அளவு என்னும் இரண்டாலும் ஒப்புமை உடைய இடையின மெய், ஆய்தம் ஆகிய இரண்டிற்கும் மிடற்று வளியே காரணமாதல் வேண்டும் என்று சுவாமிகள் கருதுகிறார். இது இலக்கண வரலாற்றில் தர்க்கரீதியாக வளர்ந்ததொரு கருத்து வளர்ச்சி எனலாம்.

தொல்காப்பியமே ''ஆய்தப் புள்ளி'17 என்கிறது. 'ஆய்தமாகிய ஒற்று'' என்கிறார் நச்சர். 18 மற்றொரு கண்ணோட்டத்திலும் நோக்குவோம். லகர ளகர ஈற்றுக் சொற்கள் தகர முதன்மொழிகளோடு புணருமிடத்து அவை முறையே றகரமாகவும் டகரமாகவும் திரிதலே

அன்றி ஆய்தமாகவும் திரிகின்றன.19 எ-டு:- கஃறீது, முஃடீது, அஃகடிய, மேலே காட்டியவற்றுள் ஆய்தமாகத் திரிபவை ல,ள,வ, என்னும் இடையின மெய்களே. ஆய்தம் அவற்றின் இனமாக இருப்பதால்தான் இத்திரிபு நேர்கிறது எனத் தடையில்லை. ஆய்தம் பற்றிய தண்டபாணி சுவாமிகளின் கருத்தை உள்ளடக்கியதாக அறுவகை இலக்கண உரையாசிரியர் யாத்துள்ள உரைச் சூத்திரம் வருமாறு:

மிடற்றெழு வளியால் மேவிய பிறப்பும்
நாவொடு அண்ணத் தொடர்பு உறு முயற்சியும்
ளளவ மெய்யீறு தனிநிலை ஆகச்
சிற்சில புணர்வில் திரிதரல் உண்மையும்
ஆயும்காலை அருந்தமிழ் எழுத்தில்
ஆய்தம் இடையினத்து ஒற்றுப் போலுமே.20

வண்ணச்சரபம் சுவாமிகள் ஒற்றளபெடையை ஏற்பதில்லை

'ஒற்றினை இரட்டித்து இந்தும் ஓர் அளபெடை
என்பார் உளர்; எமக்கு இனிது அஃது அன்றே ' 21

என்பது நூற்பா.

இந்த இலக்கணக் கோட்பாடுகளின் விரிவை அறுவகை இலக்கண உரைப்பதிப்பில் காணலாம்.

அடிக்குறிப்புக்கள்

1.அறுவகை இலக்கணம் நூற்பா 5

2.இலக்கண வரலாறு - இரா.இளங்குமரன். ப. 426

3.நன்னூல் - பவணந்தி முனிவர் நூற்பா 40

4.அறுவகை இலக்கணம். நூற்பா 28

5.வண்ணத்தியல்பு - வண்ணச்சரபர், நூற்பா 2

6.அறுவகை இலக்கணம் நூற்பா 4

7.வீரசோழியம் - புத்தமித்திரர் படலம் 1 நூற்பா

நேமிநாதம் - குணவீரபண்டிதர். இயல் 1 நூற்பா 1

8.அறுவகை இலக்கணம் நூற்பா 4

9. இளம்பூரணம் - தொல். எழுத்து. நூற்பா 101 உரை

10.நன்னூல் - பவணந்தி முனிவர் நூற்பா 87

11. நச்சினார்க்கினியம், தொல், எழுத்து. நூற்பா 101 உரை

12.அறுவகை இலக்கணம் நூற்பா 92

13. வண்ணத்தியல்பு - வண்ணச்சரபர், நூற்பா 3

14. நன்னூல் - பவணந்தி முனிவர் நூற்பா 75 15. தொல்காப்பியம் - எழுத்து நூற்பா 95,96

16. தொல்காப்பியம் - எழுத்து நூற்பா 99 17. தொல்காப்பியம் - எழுத்து நூற்பா 38 18. தொல்காப்பியம் - எழுத்து நூற்பா 39 19. தொல்காப்பியம் - எழுத்து நூற்பா 370

20. அறுவகை இலக்கணம் உரை - நூற்பா 90 இல் உரைச்சூத்திரம்.

21. அறுவகை இலக்கணம் - நூற்பா 164.

40. கௌமாரத் தொகை

சமய உலகத்தில் ஆண்டவனைப் போன்றே அடியார்களும் சிறப்பாகப் போற்றுதற்கு உரியவர்கள் ஆவர். சிறப்பாக நம் இந்த சமயத்தில் அடியார்களை ஆண்டவனுக்கு இணையாகவே - சில இடங்களில் ஆண்டவனை விட மேலாகவும் - போற்றுதல் மரபு. இறைவனுக்குத் தொண்டு புரிபவரைவிட இறையன்பர்களுக்குத் தொண்டு புரிபவர்கள் மிக விரைவில் திருவருள் பெறமுடியும் என்பது சாத்திரம். இதனால்தான் தாயுமானவர், ''அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே'' என்கிறார்.

இந்தவகையில் சிவபிரான்மீது பக்தியின் பாலராகித் திருத்தொண்டு புரிந்து இறையருள் பெற்றவர்களை ஒன்றாக நினைந்து வாழ்த்த வாய்ப்பாக எழுந்தது சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டைத் தொகை. ஏழாம் திருமுறையின் 39 ஆம் பதிகமாக அமைந்த திருத்தொண்டத் தொகை பதினொரு எண்சீர் விருத்தப் பாக்களால் ஆனது. இந்தத் திருப்பதிகத்தில் திருநாவலூரர் 63 தனியடியார்களுக்கும் 9 தொகையடியார்களுக்கும் தனித் தனியே வணக்கம் செலுத்தியுள்ளார். ஒவ்வொருவருக்கும் நான் அடியேன், நான் அடியேன் என்னும் வாய்பாட்டால் வணங்கி உள்ளார். ஆருரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே என்பது இப்பதிகத்தின் மகுடம் ஆகும். இந்தத் திருத்தொண்டத்தொகையின் வகையாக நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திரு அந்தாதியும், விரியாகத் தெய்வச் சேக்கிழார் பெருமானின் பெரியபுராணமும் தோன்றிச் சைவத் தமிழ்ச் சோலையைச் செழிப்படைய வைத்தன.

சைவ அடியார்களைப் பட்டியலிட்டுச் சுந்தரர் போற்றியதைப் போலக் கௌமார அடியார்களைத் தொகுத்துப் போற்ற வேண்டும் என நம் தாத்தாசுவாமிகள் ஆகிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் விரும்பினார். அவர் திருநாவலூரரை அப்படியே பின்பற்றிக் கௌமாரத் தொகை என்னும் பதிகத்தை இயற்றியுள்ளார். இதுவும் திருத்தொண்டத்தொகையைப் போலவே எண்சீர்

விருத்தங்களால் இயற்றப்பட்டுள்ளது. இந்தக் கௌமாரத்தொகை வண்ணச்சரபம் சுவாமிகளின் வழக்கத்தின்படி காப்பு வெண்பா ஒன்றும், நூற்பயன் வெண்பா ஒன்றும், நூலாக 12 விருத்தங்களையும் பெற்று எண்ணிக்கையில் அதிகமாக உள்ளது. கௌமாரத் தொகையில் 97 தனியடியார்களும் 11 தொகையடியார்களுமாக மொத்தம் 108 முருகனடியார்கள் போற்றப்படுகின்றனர். ஆரூரன் தம் பெயரோடு மகுடம் அமைத்துள்ளதைப் போலவே வண்ணச்சரபரும் ''திருப்புகழான் முருகன் இரு சேவடி போற்றுவனே'' என இயற்றியுள்ளார்.

திருத்தொண்டத் தொகையில் ஒவ்வொரு அடியாரையும் அடுத்து வருகின்ற அடியேன் என்னும் சொல் பெயர்ப் பயனிலையாக நின்று அங்கங்கேயே வாக்கியத்தை முற்றுவித்து விடுகின்றது. ஆனால் கௌமாரத் தொகையில் ஒவ்வொரு அடியாரையும் அடுத்து வருகின்ற போற்றி என்னும் சொல் வினையெச்சமாக நின்று ஈற்றில் வருகின்ற போற்றுவன் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகிறது. இதனால் திருத்தொண்டத்தொகையின் ஒவ்வொரு பாடலும் பல வாக்கியங்களைக் கொண்டதாக இருக்கக் கௌமாரத் தொகையின் ஒவ்வொரு பாடலும் ஒரே வாக்கியமாக அமைந்துள்ளது.

திருநாவலூரார், "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' எனத் தொடங்கினால், வண்ணச்சரபர் '' செந்தில்நகர்த் திரிலோக சுதந்தரரைப் போற்றி'' என்று ஆரம்பிக்கிறார், அவர் ஈற்றுப் பாடலில் "சடையன் இசைஞானி காதலன்'' எனத் தம்பெற்றோர்களை அறிமுகப்படுத்தும் அளவில் அமைகிறார், கௌமாரத் தொகையின் எட்டாம் பாடலில் சுவாமிகள் ''கங்கை குலம் மதித்த செந்தினாயகனை, அவன் சொல் நிலை நின்று என் உடலதனைப் பெற்றாளை, வளர்த்து நடுத் தெருவில் விட்டாளை, நிதம் போற்றி,'' எனக் கூறுவதன் மூலம் தம் பெற்றோர்களுக்கு முருகனடி யார்கள் பட்டியலில் இடமும் கொடுத்துள்ளார். இவ்வாறே தம் ஆசிரியர்கள் மூவரையும் முருகனடியார்களாகக் கூறுகிறார். அடுத்துத் தமக்கு மந்திரோபதேசம் செய்த சீதாராம நாயக்கருக்கும் இந்த வரிசையில் இடம் கொடுத்துள்ளார்.

திருத்தொண்டத் தொகையின் பத்தாம் பாடலில் ஏழு தொகையடியார்கள் கூறப் பெற்றுள்ளதைப் போன்றே கௌமாரத்தொகையிலும் பத்து தொகையடியார்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் முருகனின் அடியார்களுக்கு அடியார், நீறுமிகப் புனைவார், வேலையும், மயிலையும், தியானம் செய்பவர்கள், இந்து மதத்தின் உட்பிரிவுகளாகிய ஆறு சமயங்களின் தலைவர்கள், வரலாறு அறியப் பெறாத அனைத்துத் தொண்டர்கள், கொலை புரியாதவர்கள், புலால் உண்ணாதவர்கள், ஈகைப் பண்பு உடையவர்கள், நல்ல குணவான்கள், குறிஞ்சி நிலத்தில் குடி கொண்டுள்ள குமரனைப்பாடும் புலவர்கள் என்பார். ஆவர்.

கௌமாரத் தொகையில் முருகனடியார்களாகக் கூறப் பெற்றுள்ளவர்களுள் பொய்யா மொழிப்புலவர், நக்கீரர், அருணகிரிநாதர், பகழிக் கூத்தர், திருச்சிற்றம்பல நாடிகள், குமரகுருபரர், போரூர்ச் சிதம்பர சுவாமிகள், துறைமங்கலம் சிவப்பிரகாசர், கச்சியப்ப சிவாச்சாரியார், போகர், வீரபாண்டியப் புலவர், திருப்பூவனம் கந்தசாமிப்புலவர், அவர் மைந்தராகிய ஆறுமுகப் புலவர், குருபாத தாசர், உலகநாக பண்டிதர், ஔவையார், சரவணப் பெருமாள் கவிராயர், திருமலை வேடுவன், சாமிநாத தேசிகர், சின்னோப நாகயர், முத்து வீரப்பக் கவிராயர், கவிகுஞ்சர பாரதியார், மாம்பழக் கவிச்சிங்க நாவலர், திருத்தணி கந்தப்ப தேசிகர், பாண்டிப் புலவோன் என இருபத்தாறு தனியடியார்கள் தமிழில் நூல்களை இயற்றியுள்ள கவிஞர்கள் ஆவர். இவர்களில் பலரின் வரலாற்றை நாம் வண்ணச்சரபம் சுவாமிகளின் புலவர் புராணத்தில் காணலாம்.

இந்தத் தமிழ்ப் புலவர்களைத் தவிர அகத்தியர், நாரதர், வியாசர், முசுகுந்த சக்ரவர்த்தி, பாண்டியன் மகள் (திருச்செந்தூர்ப் புராணம்), கற்கிமுகி (குதிரை முகப்பேய்), உரோமச முனிவர், தாருகன், சிங்க முகாசுரன், சூரபதுமன், கிரவுஞ்சன், இடும்பன், உக்கிரன், அண்டா பரணன், சிவபெருமான், திருமால், பிரமன், கலைமகள், இந்திரன், அவன் மைந்தனாகிய சயந்தன், வீரவாகு, பராசர முனிவரின், மைந்தர்கள் எழுவர் என்பவர்கள் எல்லாம் பல்வேறு

புராணங்களில் கூறப்பெறும் தேவர், முனிவர், அசுரர் முதலியோர் ஆவர்.

கௌமாரத் தொகையில் முருகனடியார்களாகக் கூறப்பெற்றுள்ளவர்களில் பதினொருவர் பெண்கள். பத்துப்பேர் அரச குடும்பத்தினர், (புராணம், வரலாறு இரண்டும் சேர்ந்து) அகத்தியர், போகர், புலிப்பாணி ஆகிய மூவரும் சித்தர்களாகவும் கருதப்படுகின்றனர்.

திருத்தொண்டத் தொகையின் ஈற்றுக் கவியில் (11) ''திருநாவலூர்க்கோன் அன்னவன் ஆம் ஆரூரன் அடிமை கேட்டு உவப்பார் ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே'' என நூலாசிரியர் பெயரும் நூற்பயனும் கூறப்பெற்றுள்ளது. கௌமாரத் தொகையில் நூற்பயன் தனி வெண்பாவாகக் கூறப்பட்டுள்ளதால் ஈற்றுச் செய்யுளில் (12) ''இயற் புலவோரைப் போற்றி நெல்லையூரான் திருப்புகழான் முருகன் இரு சேவடி போற்றுவனே'' எனத் தன் பெயரை மட்டும் குறித்து மற்ற பாடல்களைப் போலவே முடித்துள்ளார்.

திருத்தொண்டத் தொகையில் அப்பதிகத்தில் இடம் பெற்றுள்ள சிவனடியார்களின் எண்ணிக்கை கூறப்பெறவில்லை. கௌமாரத் தொகை நூற்றெண்மரைப் போற்றுகிறது. என்னும் செய்தியை அப்பதிகத்தின் நூற்பயன் வெண்பாவே, ''மாற்றெண் ணரிதாகும் மாழைநிகர் மாமனத்து நூற்றெண்மர் சீர்த்தி நுடங்காது - போற்றி முருகன் இருசேவடியே முன்னில் அவன்றன் அருகனையும் வாழ்வு பெறலாம்'' என்று தெளிவாகக் கூறிவிடுகிறது. '' ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவார் ''எனச்'' சுந்தரர் நுவலும் நூற்பயனும், ''(முருகன்றன்) அருகனையும் வாழ்வுபெறலாம்'' என வண்ணச்சரபர் சொல்லுவதும் ஏறக்குறைய ஒரே பயன் என்றால் தவறு அன்று. அடியார்களப் போற்றினால் ஆண்டவன் அருளைப் பெறலாம் என்பதே இருவரும் கூறுவதன் அடிப்படைக் கருத்து.

முருகன் அடியாரை மொழியும் பதிகம்
உருகும்அன்பால் நாளும் உரைத்தல் - பெருகுவளம்
பெற்றென்றும் வாழ்ந்துலகம் பேரழகு கொள்வதற்காம்
நற்றவம்அஃ தென்றே நவில்.